விலை ரூபா 2-00 ★ பக்கங்கள் 16

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

— வெள்ளிவிழா ஆண்டு —

## யாழ். பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய பஸ் போக்குவரத்துச் சேவைகள் நேற்றும் நேற்று முன்தினமும் மாலை 6 மணியுடன் நிறுத்தப்பட்டுள்ளன. சில நீண்டதூரபஸ் சேவைகள் 5 மணியுடன் [illegible]ஸ்தம்பித்தன.

மினிபஸ்கள் மாத்திரம் வழமைபோல் 8 மணிவரை தமது சேவையை நடத்தின.

பாதுகாப்பு நடவடிக்கைகளையிட்டு பஸ்சேவை 6 மணியுடன் நிறுத்தப்பட்டதாக பஸ் போக்குவரத்துச் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்,

இன்று வழமைபோல் இரவு பஸ்சேவை நடத்துவது குறித்து ஆலோசனை செய்தபின்னரே முடிவு தெரியவரும் என்றும் அவர் தெரிவித்தார். (மா)

மலர்: 25 | தை 22 | ஜ. அவ் 2 | யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | 5-2-84 | இதழ் 354

### லட்சக் கணக்கான ரூபாய் விவசாயம் நாசம்

# வடக்கு, கிழக்கில் பேய் மழை!

# 50,000 பேர் அகதிகள்!

(நமது நிருபர்கள்)

வடக்கிலும் கிழக்கிலும் பேய் மழை பெய்கிறது கடந்த இரு நாட்களாக விடாது தொடர்ந்து பெய்து வரும் இந்த மழையினால் விவசாயம் நாசமடைந்துள்ளது. கிழக்கில் ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அகதிகளாகியுள்ளனர். கிழக்கின் பெரும்பான்மையான பகுதி வெள்ளக்காடாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து மழை பெய்து கொண்டிருக்கிறது

யாழ்ப்பாணத்தில் 111மில்லி மீற்றர் மழை பெய்திருப்பதாகவும், கிழக்கு மாகாணத்தில் 74 மில்லி மீற்றர் மழை பெய்திருப்பதாகவும், பவன அமுக்கம் காரணமாக பெய்யும் இந்த மழை தொடர்ந்து இன்றும் பெய்யுமென்றும்வானிலை அவதான நிலையம் அறிவித்தது.

லட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியான விவசாயம் வடக்கிலும் கிழக்கிலும் இந்தப் பெருமழையினால் நாசமாகி விட்டன. யாழ். மாவட்டத்தின் தாழ்ந்த பகுதிகள் பலவற்றில் வசிக்கும் நூற்றுக்கணக்கான வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததினால், வீடு வாசல்களை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளனர்.

யாழ்ப்பாண நகரப் பகுதியிலுள்ள தேவரிக்குளம் நிறைந்து வழிவதால் ஈச்சமட்டை வீதியிலுள்ள வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்துள்ளது. முனியப்பர் வீதியில் வாகனப் போக்குவரத்து செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

### கிழக்கு வெள்ளக்காடு

கிழக்கு மாகாணத்தில் 50,000 பேர் பெய்தபெரு மழையினால், வீடுவாசல்களை இழந்துள்ளனர் பாடசாலை, தேவாலயங்கள், பொதுநிறுவனங்கள் ஆகியவற்றில் தஞ்சம்புகுந்துள்ளனர்.

வாழைச்சேனைப் பகுதியிலுள்ள கோரளை, வடபேரிக்காவெளி, வடமுனை, தளவாய் ஐயங்கேணி, புன்னைக்குடா, கொக்கட்டிச்சோலை, பெரிய போரதீவு, மாமாங்கம், கூழாவடி ஆகிய மட்டக்களப்பிலுள்ள பல பகுதிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

தஞ்சம் புகுந்துள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை மட்டு அரசாங்க அதிபர் எடுத்துள்ளார்.

கிழக்கில் அறுவடை நடந்து கொண்டிருக்கிறது. பல இடங்களில் பெய்த பெரு மழையினால் அறுவடை நெல் அறுத்துச் செல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

வடக்கிலும், கிழக்கிலும் இன்றும், நாளையும் தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் பெருந்த ஆபத்தை மக்கள் எதிர்நோக்குவரென அஞ்சப்படுகிறது.

பலனை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் இன்று வானத்தையும் பூமியையும் பார்த்து ஏங்கி நிற்கின்ற பரிதாபநிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள வீதிகள் வாகனங்கள் போக்குவரத்து செய்ய முடியாதபடி படுமோசமாக உள்ளன.

## வான் உரிமையாளர் பொலிஸ் பாதுகாப்பில்!

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்ட வானின் உரிமையாளர்ஒருவர், விசாரணைக்காக யாழ் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் மாலை தாவடியில் வைத்து இரு இளைஞர்களால் வான் ஒன்று கடத்தப்பட்டது. குறிப்பிட்ட வானில் பெற்றோல் இல்லாததால், வான் உரிமையாளரைக் கொண்டே எரிபொருள்நிலையமொன்றில் 100 ரூபாவுக்குப் பெற்றோல் அடித்துக்கொண்டதும் திரும்பவும். சம்பந்தப்பட்ட இரு இளைஞர்களும் அவரது வீட்டில் கொண்டுபோய் விட்டார்களாம். பின்னர்கடத்திச் சென்ற அதே வான் சுன்னாகம் பொலிஸ் பிரிவில் நேற்றுக்காலை கண்டு பிடிக்கப்பட்டு அங்கு பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளது.

புகார் செய்யச் சென்றவான் உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## யாழ். அரச செயலகத்தில் நடந்த சுதந்திரதின விழா

[ஏ வி மாணிக்கம்]

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் ஆடம்பரமற்ற முறையில் அமைதியாகவும் — எளிமையாகவும் சுதந்திரதின விழா நேற்றுக்காலை கொண்டாடப்பட்டது.

சுதந்திரதின விழாவை ஒட்டி செயலகத்தில் யாழ். பொலிசார் ஆயுதபாணிகளாக பாதுகாப்பிலீடுபட்டிருந்தனர்.

இராணுவ கொமாண்டோப் பிரிவினர் கவசவண்டியிலும், ஜீப் வண்டிகளிலும் செயலக வீதி வழியாக ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

வடபகுதி அரசாங்கவங்கி, கல்வித்திணைக்களம், தபால்பகுதி, பெருந்தெருக்கள் திணைக்களம், விளையாட்டுப்பகுதி யாழ். செயலகம் ஆகியவற்றைச் சேர்ந்த சில அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் சமுகமளித்திருந்தனர்.

அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள் ஆகியவற்றின்பிரமுகர்களோ மற்றும்பொது மக்களோ எவரும் இவ் விழாவில் கலந்து கொள்ளாதது குறிப்பிடத்தக்கது.

யாழ் அரசாங்க அதிபரும் யாழ். மாவட்ட செயலாளருமான திரு தேவநேசன் நேசையா 8-15 மணியளவில் யாழ். செயலக வாசலில் வந்து சேர்ந்ததும், ஏற்கனவே குழுமியிருந்த அரசாங்க உத்தியோகத்தர்களினால் வரவேற்கப்பட்டார்.

தேசிய உடையுடன் காணப்பட்ட அரசாங்க அதிபருக்கு சமயாசார முறைப்படி வரவேற்பளிக்கப்பட்டது.

செயலக வரவேற்பு மண்டபத்திலும், மேல்மாடி திறந்த மண்டபமும் மகரதோரணங்க

[16-ம் பக்கம் பார்க்க]

### மட்டுநகரில் சுதந்திரதின நிகழ்ச்சிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலும் பலத்த

(16-ம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சி மகாநாட்டில் இராசதுரை, சிறில்மத்யூ!

[இ. சந்தசாமி]

வரும் 6-ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் குழு நிலையில் கூடவுள்ள சர்வகட்சி மகாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில், அமைச்சர்கள் செல்லையா இராசதுரையும், சிறில் மத்யூவும் கலந்துகொள்ளவிருப்பதாக அறியப்படுகிறது.

ஆறுபேர்கள் ஒரு கட்சியிலிருந்து பிரதிநிதியாகக் கலந்து கொள்வதற்காக அழைக்கப் பட்டுள்ளனர். பிரதமர் தலைமையில் அமைச்சர்கள் ரணில் விக்கிரமசிங்ஹ, ரொனிடிமெல் பெஸ்ரஸ்பெரேரா ஆகியோரும் பிரதிநிதிகளாகக் கலந்துகொள்ளவுள்ளதாக அறியபடுகிறது.

### வெள்ளத்தில் தாதிகள் விடுதி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் நேற்று பெய்த பெருமழை காரணமாக யாழ் பெரியாஸ்பத்திரி தாதிகள் விடுதியைச் சுற்றி வெள்ளம் நிற்கிறது. விடுதியின் குசினிப் பகுதியில் வெள்ளம் புகுந்துள்ளது.

யாழ் மாநகரில் நாளை மங்களகரமான

★ திறப்பு விழா ★

றட்னம் பார்மஸி & குறேசரி





நாளை (6-2-84)

திங்கட்கிழமை

11-30 முதல்
12 மணி வரை
வரும் சுபவேளையில்

யாழ். ஆஸ்பத்திரி வீதி
இலங்கை வங்கி
முகாமையாளர்

திரு. மு.
கனகரத்தினம்
அவர்களால்

மங்கள விளக்கேற்றி
ஆரம்பித்து
வைக்கப்படும்.

புதிய கடைத் திறப்புவிழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சகல மருந்து வகைகளையும் சாய்ப்புச்சாமான்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

RATNAM PHARMACY & GROCERY

388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நாளை முதல் சேவ்டி ட்ரவல்ஸ் (காரைநகர் —யாழ் —கொழும்பு பஸ் சேவை) டிக்கட்டுகளையும் எம்மிடம் பதிவு செய்துகொள்ளலாம். (576)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

NV-2000 வீடியோ டெக் புதிய நிலையில் குறைந்த விலைக்கு விற்பனைக்குண்டு. No. 1, செட்டியார் ஒழுங்கை, நல்லூர். 494

திறம் சுப்பலைட் (Superlight) தீப்பெட்டிகள் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனைக்குண்டு. குறைந்த விலையுடன் கூடிய இலாபம் கொடுக்கும். No. 1, செட்டி ஒழுங்கை, நல்லூர். 493

Hysex வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் Hybro Broi-le குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் ஒடருக்கு ஒவ்வொரு திங்கட்கிழமையும் விநியோகிக்கப்படும். தொடர்பு: 'ராஜா ஸ்ரோர்ஸ்' இல. 2, பிரம்படி லேன், கொக்குவில். 516

கட்டுவன் ரோட், தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலைக்கு அருகாமையில் பதின் மூன்று பரப்புக்காணி விற்பனைக்குஉண்டு. தொடர்பு: R இராஜரத்தினம், 308, கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. 200

நவிண்டில் பிரதான (V C) ரோட்டுக்கு அருகில் வெற்றியாதி என்னும் வீடுகட்ட உகந்த 4½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்புகொள்ளவும். பொ. சொக்கலிங்கம் சந்திரந்தை, நவிண்டில், கரவெட்டி. 582

யாழ்ப்பாணம் கண்டிக்குளி றக்கா லேனில் சகலவசதிகளும் கொண்ட இடத்தில் 2½ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு 1/1, றக்கா லேன். கண்டிக்குளி, யாழ்ப்பாணம், 604

மரக்கடைச்சல் மெசின் விற்பனைக்குண்டு. கிழமை நாட்களில் பார்வையிடலாம். தொடர்பு கொள்ளவும். கிவ்ற ரொய்ஸ் 76, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 606

கோப்பாய் வடக்கு பருத்தித்துறை வீதிக்கருகாமையில் பூதர் மடத்திற்கு பின்புறமாக 12 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வீடுகட்டவும் தோட்டம் செய்வதற்கும் ஏற்றது. சச்சிதானந்தன் கால் நடை வைத்திய நிலையம் பருத்தித்துறைவிதி, கோப்பாய்வடக்கு. 607

Hyline Three acare Farm ஒருநாள் கோழிக்குஞ்சு 25-2-84ல்வருகின்றது. தேவையானோர் உடன் தொடர்பு கொள்ளவும். கிக்கன் கையின் 8/10, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 608

நல்லூர் செம்மணி வீதி, இல: 184 இல் (கல்விக்கந்தோருக்கு அருகாமையில்) 7½ பரப்புக்காணி ஒரு பெரிய வீடும், சிறிய வீட்டுடனும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 179, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் அல்லது 20, வித்தியாலயா ரோட், ரெம்பிளர் ரோட், கல்கிசை. 529

ஜப்பானிலிருந்து மறுசீரமைக்கப்பட்டு இறக்குமதிசெய்யப்பட்ட ரோசா 6 சிலிண்டர் மினிபஸ் என்ஜின் கியர்பொக்சுடன் விற்பனைக்குண்டு. அத்துடன் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஹொண்டா மோட்டார் சைக்கிள்கள் C70-C90, CD 125, CX 500 விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ஆர். கே. அன்சன்ஸ் 129, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். T. P. No. 24029. (472)

## விற்பனைக்கு

சமீபத்தில் இங்கிலாந்தில் இருந்து கொண்டுவரப்பட்ட Leyland Sherpa 240 Deluxe Diesel Delivery Van 1978ம் ஆண்டு மொடல் (கலனுக்கு 35 மைல் வேலை செய்யக் கூடியது) விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். தொடர்புகொள்ளும் முகவரி ஆ. சுந்தரலிங்கம் 85, கொழும்புத்துறைவீதி, யாழ்ப்பாணம். ரெலிபோன் யாழ்ப்பாணம் 22153 அல்லது 24019, 22254 (622)

Toyata Hiace RX 20V வான் குளிர்சாதனத்துடன் (A. c) உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சிற்சபேசன், செல்லப்பா ஸ்ரோர்ஸ், காரைநகர் மேற்கு. போன்: 802 (612)

நல்லூர் சங்கிலியன் வீதியில் ஒரு பரப்பு, மூன்று குளி, கிணறு, குளிக்கும் அறை, தண்ணீர் தாங்கியுடன் விற்பனைக்குண்டு 15/17 சங்கிலியன் வீதி, நல்லூர் வடக்கு, செ. ஆறுமுகத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும். 615

முத்தையன்கட்டில் நல்ல வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் "விஜி ஸ்ரோர்ஸ்" (மொத்த சில்லறை வியாபாரத்திற்கும், மிளகாய், நெல், உழுந்து வெண்காயம் கொள்முதல் செய்வதற்கும்) ஏற்ற நல்ல கட்டிடம்கொண்ட கடையும் மூன்று ஏக்கர் தென்னம் தோட்டமும் விற்பனைக்கு உண்டு. மேலதிக விபரத்திற்கு பொ. விஜயரத்தினம், I. S. T. I. கிளிநொச்சி. 470

## தவறிவிட்டது

பருத்தித்துறை-மாகலிசந்தி-உடுப்பிட்டி வழியில் 3-2-84 இல் 86 ஸ்ரீ9810 காப்புறுதிப் பத்திரம்- சாரதி லைசென்ஸ் (D L 412815) உம் மற்றும் சில தஸ்தாவேஜுகள் பிறவுண் நிற கடதாசிப்பையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து தகவல் தரவும். ம: அன்ரனிப்பிள்ளை, மணல் குடியிருப்பு, முல்லைத்தீவு. சன்மானம் தரப்படும். 609

## தேவை

எமதுஸ்தாபனத்திற்கு பெருமளவில் நன்றாகக் காய்ந்த கொப்பருத்தேவை. நாம்பெருமளவில் கொள்வனவு செய்யவுள்ளோம். நல்லரக நம்பர்-1 (முதலாம் நம்பர்) கொப்பருவிற்கு நல்ல விலை போட்டு எடுப்போம். ந கந்தையா செட்டியார், சி. எஸ். கே. ஸ்தாபனம் 133, கே.கே எஸ் ரோட், யாழ்ப்பாணம். 391

பட்டு நெசவு வேலை செய்வதற்கு பெண்கள் தேவை விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். வசந்தபுரம் இல்க்ஸ், 75/11, பிறவுண் வீதி. யாழ்ப்பாணம். 491

எங்களுடைய ஸ்தாபனத்திற்கு புரொயிலர் கோழி விநியோகம் செய்ய விரும்புவோர் தயவு செய்து முகாமையாளரத் தொடர்பு கொள்ளவும்: யாழ் சைனீஸ் றெஸ்ரோரண்ஸ் 124, ஆர் ஆர். நல்லையாவீதி முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 591

யாழ். நகரில் உள்ள பிரபல நிறுவனத்தில் கடமையாற்ற Hotel Management பயிற்சி பெற்ற ஒருவர் தேவை வேதனம் ரூபா 1000/- சொந்தக் கையெழுத்தில் 9-2-84க்கு முன்பாக விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 575 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (575)

மரக் கடைச்சல் வேலைகளில் மிகுந்த அனுபவமுடைய ஆண் அல்லது பெண் தொழிலாளர் தேவை. அனுபவத்துக்குத் தகுந்த சம்பளம் வழங்கப்படும். 10ம் திகதிக்கு முன் காலையில் நேரில் வரவும். எரோ எலெக்றிக்கல் இண்டஸ்றீஸ் மின்சார நிலைய வீதி, சுன்னாகம். 613

செங்கட்டியால் கட்டடங்கள் கட்டக்கூடிய மேசன்மார்களும் கூலி ஆட்களும் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். குமார் என்ரபிறைஸஸ் மாதகல் வீதி, பண்டத்தரிப்பு. 610

சேலைகள் பிறின்ரிங் பழகி வேலை செய்வதற்குப் பெண் பிள்ளைகள் உடனடியாகத் தேவை. நிலையத்துக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். விருப்பியவர்கள் விண்ணப்பிக்கவும். வசந்தா ரெக்ரையில்ஸ் 42, கல்லூரி வீதி, நீராவியடி யாழ்ப்பாணம். 573

## தேவை

திறமை, அனுபவமிக்க, சகல அச்சுகோர்க்கும் வேலைகளும் தெரிந்த கொம்பவிட்டர் தேவை. நேரில் வரவும். சித்திரா அச்சகம் இல: 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 624

## புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## கேள்விப்பத்திரம் படகு விற்பனை

இரண்டு வருடம் சேவையிலுள்ள மேற்படி சங்கத்துக்குச் சொந்தமான படகுகேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. விண்ணப்பத்திற்கு ரூபா 100/-ம் (மீளச் செலுத்தப்படமாட்டாது) வைப்புபணமாக ரூபா 2000/-ம் (மீளச் செலுத்தப்படும்) செலுத்தி சங்கத்தில் கேள்விப்பத்திரங்களைப்பெற்று 20 2-84ம் திகதி நண்பகல் 12-00 மணிக்குஅல்லது அதற்கு முன்னதாக பதிவுத்தபால் மூலம் பொதுமுகாமையாளர், புங்குடுதீவு - நயினாதீவு பல. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும்.

என்வலப்பில் இடதுபக்க மூலையில் "படகுக்கான கேள்விப்பத்திரம்" என எழுதப் பட்டிருத்தல்வேண்டும்.

**விபரங்கள்**

| | |
|---|---|
| படகு நீளம் | 42' 4½" |
| படகு அகலம் | 12' 2¾" |
| படகு ஆழம் | 06' [illegible] |

புதிய யன்மார் மரைன் என்ஜின் - 3 ESDE - 56 to 85 குதிரைச்சக்தி (Horse Power) படகைப் பார்வையிடுவதற்கும் மேலதிக விபரங்களை அறிவதற்கும் எம்முடன்தொடர்பு கொள்ளவும்.

**பொதுமுகாமையாளர்**
புங்-நயி. பல.நோ.கூ. சங்கம்,
புங்குடுதீவு.

புங்குடுதீவு.
23-1-84, 397

## தேவை

மணமகள் தேவை: சாவகச்சேரி இந்து வேளாள குலம், சுவாதி நட்சத்திரம் 4இல் செவ்வாய் 34 வயது அரசாங்க நிரந்தர சேவையில் மாதம் 1000/-சம்பளம்உடைய தொழில் நுட்ப உத்தியோகத்தருக்கு பெற்றோர் மணமகள் தேடுகிறார்கள் சீதனம் சாதகக்குறிப்பு ஆகியவை முழு விபரங்களுடனும் கடித மூலம் விண்ணப்பிக்கவும், விளம்பர இல. 586 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 586

## வகுப்புக்கள்

Scientific Cutting, Hair style, Cakeking, Short eats, Flowermaking ஆகியவற்றிற்கு குறுகியகாலப்பயிற்சி. Diplomat பயிற்சிக்கு திங்கள். வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. The Ladies Academy, மின்சாரநிலைய வீதி, இல. 27, 3வது ஒழுங்கை, யாழ்ப்பாணம் (சாமி அக்கோ அருகாமையில் உள்ள ஒழுங்கை முடிவில் உள்ளது). 474

## பேக்கர்தேவை

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தினால் நடாத்தப்படும் பேக்கரியில் பேக்கராக (பாண் சுடுபவர்) வேலை செய்வதற்கு நாளாந்த கூலி அடிப்படையில் (நாளொன்றுக்கு ரூபா 30/- 1. இரு. பாணும்) ஆண் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். அத்துடன் சங்க உதவு தொகையாக ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்புநிதி ஆகியவை செலுத்தப்படும். விண்ணப்பத்தை சமர்ப்பிக்க விரும்புவோர் 15-02-84ம் திகதிக்கு முன்னர் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும்.

**பொதுமுகாமையாளர்**
பண்டத்தரிப்புப் பரிஷ்
ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு. 603

## பிரியாவிடை வைபவம்

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கல்லூரி அபிவிருத்திசபையுடன் இணைந்து, அண்மையில் ஓய்வுபெற்ற உபஅதிபர் திருமதி எஸ். சுப்பிரமணியம் அவர்களுக்கு 11-02-84 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு பிரியாவிடையும் தேநீர் விருந்தும் அளித்து கௌரவிக்கவுள்ளது. இதில் பங்குபற்றவிரும்பும் பழையமாணவர்கள். பெற்றோர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் பழையமாணவர் சங்க செயலாளருடன் அல்லது கல்லூரி அதிபருடன் தொடர்புகொள்ளவும்,

கொக்குவில் இந்துக் கல்லூரி

கொக்குவில். 1984-2-05, 616

## WANTED

Experienced girls for a Ladies Hair Dressing Saloon in Jaffna town.
Trained in long and short hair styles.
Trimming and Cutting.
Preference will be given to qualified and experienced Persons.
Apply with certificates and testimonials
Advt. No. 625 C/o EELANADU LTD.
Jaffna. (625)

## கலர் பிலிம் சுருள் இனாம்!

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம்சுருள்களை எம்மிடம் PROCESSING AND PRINTING செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர் பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும். PROCESSING ரூபா 30/- P. C. PRINTING ரூபா 6-50.

**கொழும்பு ஸ்ருடியோ**
யாழ்ப்பாணம். (508)

உ

## திருமண அழைப்பு

நிகழும் ருத்ரோத்காரி வருடம் தை மாதம் 22-ம் திகதி (5-2-84) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 9 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எனது சகோதரன் | எனது புத்திரி |
| நவரத்தினம் சிவபாலன் | ஸ்ரீ ரஞ்ஜனி |
| (முசாரி, ஓமான்) | (வைத்திய கலாநிதி) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

செல்வச் சந்நதி ஆலயத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்துக்குச் சமூகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

5-2-84 பி. ப. 4 மணியளவில் மணமகனில்லத்திலும், 8-2-84 பி. ப. 4 மணியிலிருந்து 6 மணி வரை மணமகளில்லத்திலும் வரவேற்புபசாரம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| ந. சிவபாதம், | திருமதி பு. விநாயகமூர்த்தி, |
| "ஆரணி", | "செந்தில்", |
| டச் வீதி, | 167, கஸ்தூரியார் வீதி, |
| அளவெட்டி. | யாழ்ப்பாணம். |

623

# வார மலர்

ஈழநாடு லங்கா

EELANADU VARAMALAR


# 'ஈழநாடு'-- இணையற்ற சாதனை!

பத்திரிகையைக் கையில் எடுக்கிறார் ஒருவர். தலைப்புச் செய்திகளை அவசர அவசரமாகப் புரட்டிப் புரட்டி நோட்டம் விடுகிறார். பின்னர் அதைத் தூக்கிப் போட்டுவிட்டு அலட்சியமாகப் போய் விடுகிறார்.

மற்றொருவர் வருகிறார். பத்திரிகையை எடுத்து ஆறுதலாக ஓரிடத்திலமர்ந்து அமைதியாக முதல்பக்கத் தலைப்புச் செய்தியிலிருந்து கடைசிப் பக்கத்தில் இப்பத்திரிகை அச்சிட்டு வெளியிடப்பெற்றது என்ற 'இம்பிரிண்ட்' வரை வாசித்து முடிக்கிறார்.

இந்த இரண்டு ரக வாசகர்களும் 'ஈழநாடு' பத்திரிகைக்கு இருக்கிறார்கள்.

வாசகர்கள் பலவிதம். எல்லோரையும் திருப்திப்படுத்துவதென்பது சுலபமல்ல. மக்களின் நம்பிக்கையைப் பெறுவதில்தான் பத்திரிகையின் வெற்றி தங்கியுள்ளது.

'ஈழநாடு' பத்திரிகை இன்று மக்களின் பூரண நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது.

இந்த நம்பிக்கையைப் பெறுவதற்கும் பத்திரிகை இன்றுள்ள நிலையை அடைவதற்கும் எத்தனை சிரமங்களை அனுபவிக்கவேண்டியிருந்ததென்பதை இந்த வெள்ளி விழாச் சமயத்தில் திரும்பிப் பார்ப்பது பயனுள்ளதாகும்.

1960ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல்தேதி நான் 'ஈழநாடு' பத்திரிகையில் செய்தி ஆசிரியராகச் சேர்ந்தேன். அப்போது 'ஈழநாடு' வாரமிருமுறையாக வெளிவந்துகொண்டிருந்தது. 'வீரகேசரி' தினசரிப் பத்திரிகையில் வேலைசெய்துவிட்டு வந்த எனக்கு ஈழநாடு' பத்திரிகையும் தினசரியாக வெளிவரவேண்டுமென்ற துடிப்பு. ஆனாலும் வாரமிருமுறை வெளிவந்துகொண்டிருந்த பத்திரிகையையே சந்தர்ப்பத்தைப் பொறுத்து பிந்திய பதிப்பு விசேஷ பதிப்பு என்று வாரத்தில் நான்கு ஐந்து நாட்கள் 'ஈழநாடு' வெளிவரக்கூடியதாக மாற்றிக்கொண்டோம்.

## அமைச்சர்கள்

## விஜயமும்

## ஆர்ப்பாட்டமும்

அப்போது அமைச்சர்களாக இருந்த டி. பி. இலங்கரத்தினவும் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத்தும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்கள். தமிழரசுக்கட்சியினர் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடுசெய்திருந்தார்கள். அவர்களின் நிகழ்ச்சித்திட்டத்தில் பருத்தித்துறையில் கூட்டுறவு மொத்த விற்பனைக் கிளையை அமைச்சர் டி. பி. இலங்கரத்தின திறந்துவைக்க வேண்டும். காலையில் இத்திறப்புவிழா நடைபெற்றது அப்போது 'ஈழநாடு' பத்திரிகையில் செய்தி ஆசிரியர், அலுவலக நிருபர் எல்லாமே நான்தான் பணியாற்றவேண்டும். செய்திப் பத்திரிகையில் பணியாற்றிய அனுபவமுள்ளவர் வேறு எவரும் இருக்கவில்லை. பருத்தித்துறை நிகழ்ச்சியைச் செய்தி எடுப்பதற்கு அமரர் டாக்டர் க. சி. சண்முகரத்தினம் தமது மோட்டார் காரையும் அவரது உதவியாளர் திரு. குப்புசாமியையும் தந்தார்.

நாங்கள் அங்கு போய்ச் சேர்ந்த சிறிது நேரத்தில் அமைச்சர் இலங்கரத்தின வந்திறங்கினார். திடீரென்று வீதி ஓரமாக நின்ற தமிழரசுக்கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் மறைத்துவைத்திருந்த கறுப்புக்கொடிகளைக் காட்டி ''மந்திரியே திரும்பிப்போ'' என்று ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினார்கள். பொலிசார் அவர்கள்மீது பாய்ந்து விரட்டினார்கள். சிலருக்கு அடியும் விழுந்தது.

## எம். பி. மீது

## பொலிஸ் தாக்குதல்

இந்தச் செய்தியை நண்பகலே எழுதிக்கொடுத்துவிட்டு பிற்பகலில் யாழ். நகரில் கூ, மொ. வி. சிறப்புவிழா நிகழ்ச்சி செய்தியெடுக்கச் சென்றேன். வீதியின் ஓரத்தில் தமிழரசுக்கட்சித் தொண்டர்களும் தலைவர்களும் அமைதியாக நின்றார்கள். அவர்களை அடுத்து பெண்களும் நின்றார்கள். அமைச்சர்கள் இருவரும் வந்திறங்கியதுதான் தாமதம் கறுப்புக்கொடிகளுடன் வீதியின் குறுக்கே பாய்ந்த தொண்டர்களும் தலைவர்களும் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். பொலிசார் பாய்ந்து சென்று அவர்களைத் தாக்கத் தொடங்கினர். பெண்கள் மீதும் தாக்குதல் நடத்தச் சென்ற பொலிசாரை ஏ எஸ். பி. மரியநாயகம் தடுத்துவிட்டார். திரு. வி. ஏ. கந்தையா தமது மூக்குக் கண்ணாடியைத் தவறவிட்டுத் தாக்குதலுக்குள்ளாகி அவதிப்பட்டுக்கொண்டிருந்தார் பின்னர் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இச் செய்தியுடன் அலுவலகம் திரும்பினேன். முதல் பதிப்பில் பருத்தித்துறை ஆர்ப்பாட்டச் செய்தி பிரசுரமாகவில்லை. டாக்டர் சண்முகரத்தினம் ஏன் அந்தச் செய்தி பிரசுரமாகவில்லை என்பது பற்றி விசாரணை செய்துகொண்டிருந்தார்.

உள்ளூர் பதிப்பில் முழுச் செய்தியையும் விபரமாகப் பிரசுரித்தோம், பிந்திய பதிப்பும் வெளியிட்டோம்.

## முதலாவது

## தினப்பதிப்பு

இப்படிப் பிந்திய பதிப்புகளும், விசேஷ பதிப்புக்களும் வெளியிட்டு வந்தமையால் பெப்ரவரி 11ம் தேதி தினப் பதிப்பை வெளியிடுவதில் அதிக சிரமமிருக்காதென நினைத்தோம்.

ஆனால் 10ந் தேதி காலை ஆரம்பித்த தினப்பதிப்பு வேலை 11ம் தேதி காலை ஆறு மணிக்குப் பின்னர்தான் முடிவடைந்து பத்திரிகை அச்சடிப்பதற்குத் தொடங்கியது. இப்படிச் சில தினங்கள் இருபத்திநான்கு மணிநேரமும் தொடர்ந்து வேலைசெய்யவேண்டிய நிர்ப்பந்தமிருந்தது.

அச்சகப் பகுதியில் தினசரிப் பத்திரிகை அனுபவமுள்ளவர் ஒருவர் தானிருந்தார். ஆசிரிய பகுதியில் நான் ஒருவனே இந்த அனுபவமுள்ளவன்.

சிலதினங்களில் திரு. டீ. எம், முருகையாவும். திரு பி. என். பெருமாளும் ஆசிரியர் பகுதிக்கு வந்து சேர்ந்தனர். இருவரும் வீரகேசரியில் என்னுடன் வேலை செய்தவர்கள். தினசரிப் பத்திரிகையில் வேலை செய்து அனுபவம் பெற்றவர்கள். ஆனாலும் அவர்களிருவருக்கும் யாழ்ப்பாணம் புதிய பூமி!

## உதவியவர்கள்

எனவே நான்தான் தொடர்ந்தும் அலுவலகத்துக்கு வெளியேயும் சென்று செய்திகளைச் சேகரிக்கவேண்டியிருந்தது. காலஞ்சென்ற திரு. ஸி. ரி. சொலமன் நமக்கு நிருபராக இருந்தார். திரு. மு. கதிரவேலு, திரு. செல்லத்துரை ஆகியோரின் உதவியும் எமக்கு இருந்தது. 'டைம் ஒப்சிலோன் பத்திரிகையில் நிருபராகப்பணி

## கோபு

யாற்றிய திரு. எஸ். சத்தியதாசன் பல வகையிலும் ஈழநாடு பத்திரிகைக்கு உதவி செய்துவந்தார். இளம்வயதில் மறைந்துவிட்ட திரு. சத்தியதாசன் சக பத்திரிகையாளருக்கு உதவிசெய்வதில் தயங்காதவர். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகை நல்லமுறையில் வெளிவரவேண்டுமென்பதில் ஆர்வம் கொண்டிருந்த சத்தி. நமக்குக் கொழும்பில் நிருபர் இருந்தபோதிலும் தங்கள் பத்திரிகைக்கு நல்ல செய்தி கிடைத்ததும் உடனடியாகவே

-ம் பக்கம் பார்க்க)

---

# மூன்றுவது உலகின் சித்தாந்தம்

அடிமைத்தனம், அநீதி, சித்திரவதைதான் மனித சரித்திரம். வெகுகாலம் பாடுபட்டு அவற்றை ஒழித்தபிறகே மனிதன் முன்னேற்றம்பற்றிப் பேச முடிந்தது.

அடிமைத்தனம் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் தலைவிதி என்று எண்ணுமளவிற்கு இந்நாடுகள் பல நீண்ட காலமாக அந்நிய ஆதிக்கத்தின் அட்டூழியங்களுக்குப் பலியாகி வந்தன.

இன்று சுதந்திரம், பேச்சு இருந்தபோதும், ஐரோப்பிய அமெரிக்க ஆதிக்கம், ஊடுருவல்கள் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றன.

வல்லரசுகளின் போட்டி தலையெடுத்திருக்கும் இவ்வேளையில், சோவியத் ரஷ்யா தலைமைதாங்கும் சோஷலிஸ நாடுகள் எதிரணியாகத் திரள்வது இன்று உலகத்தைச் சிந்திக்க வைக்கும் நிகழ்ச்சியாகும்.

அணிசேரா இயக்கம் இந்தச் சூழ்நிலையில் பலம் பெற்றிருப்பதே இந்தப் போட்டிக்கு ஒரு தடுப்பு மருந்தாக அமையும்.

எங்கள் உள்நாட்டு விவகாரங்கள் எவ்வாறாயினும், இலங்கை, இந்தியா, தென்கிழக்காசிய நாடுகள் ஒத்துழைப்பும் பரஸ்பர நம்பிக்கையும் கொண்டு மண்டல சார்பற்ற கொள்கைக்கு உறுதியளித்தால், இந்து சமுத்திரம் சமாதானப் பிரதேசமாக்கப்பட்டால் மூன்றும் உலகநாடுகள் முன்னேற வழிபிறக்கும்.

முன்னேற்றத்திற்கு உழைப்பே அடிப்படை என்பது ஒப்புக்கொள்ளப்பட்டால் உழைப்பாளி சுதந்திரமாக இருக்கவேண்டுமென்பதே இந்த மூன்றும் உலக நாடுகளின் சித்தாந்தமென்பதை நாம் மறக்கலாகாது.

---

# பத்திரிகை பற்றி

## தி. ஐ. ர.

புதிதாகப் பத்திரிகை போடத் தொடங்கும் என் நண்பர், தம் திட்டங்களைக் குறித்து ஒரு சமயம் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். மதிப்பும் விசுவாசமும் உள்ள நெருங்கிய நண்பர்அவர் புதிய முறையில் புதிய அம்சங்களோடு தமது பத்திரிகையை நடத்த வேண்டும் என்பது அவருடையவிருப்பம்.

"ஏன் ஸார், இன்ன பத்திரிகையில் இன்ன அம்சம்வருகிறதே; அந்த மாதிரி அம்சம் தமிழ்ப்பத்திரிகை எதிலாவது வருகிறதோ? யாராவது போடுகிறார்களோ;'' என்று நண்பர் கேட்டார்..............

நண்பர் புதிய பத்திரிகை போடப்போகிறாரே, அதை நான் படிக்கப் போகிறேனா என்றால், அது வேறு விஷயம். ஆனால் அவருக்கு வேண்டிய உபதேசமெல்லாம் செய்ய மட்டும் நான் தயங்கவில்லை......

நண்பருக்கு என்ன சொன்னேன் என்பதை இனி உங்களுக்குச் சொல்கிறேன் வாயால் சொன்னதையெல்லாம் எழுத்திலே சொல்வது அவ்வளவு சுலபம் அல்ல; ஒரு தினுசாகச் சொல்கிறேன்.

நண்பர் பத்திரிகை போடப்போகிறார் புதிதாக, பத்திரிகையாக இருந்தால் என்ன, வேறு எதுவாக இருந்தால் என்ன? புதிய தொழில் ஒன்றில் அவர் இறங்குகிறார் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதெல்லாம் அந்தரங்க சுத்தி இல்லாத வறட்டுப் பேச்சு. இதற்காக ஒரு தொழிலிலே- வியாபாரத்திலே- கலையிலே ஈடுபடுகிற ஒருவன் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று அர்த்தமில்லை. ஒவ்வொரு தொழிலுக்கும் சமூகப் பொறுப்பு ஒன்று உண்டு. அரிசியிலே மண்ணைக் கலந்து விற்கும் வியாபாரி சினிமாவிலே கேடான காட்சிகளை எடுக்கும் படமுதலாளி, பத்திரிகையிலே அறிவைக் கெடுக்கும் பொருள்களை வெளியிடும் ஆசிரியன் இந்த எல்லாரும் ஒரே ரகந்தான்- சமூக சத்துருக்கள்.

''நான் ஜனங்களுக்குக் கல்வி போதிக்க வரவில்லை; ஜனங்களின் ஒழுக்கத்தை வளர்க்க வரவில்லைஜனங்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க வரவில்லை. பணம் சம்பாதிக்கவேவருகின்றேன்'' என்றெல்லாம் இவர்கள் கட்சி பேசலாம் இவர்களை யாரும் அந்தக் காரியங்களுக்குக் கூப்பிடவரவில்லை ஆனால் இவர்களுக்கு உள்ள சமூகப்பொறுப்பை இவர்கள்மீறினால், இவர்களைச் சமூகசத்துருக்கள் என்று நாம் கண்டிப்பாகச் சொல்லத்தான் சொல்வோம். புதிதாய்ப் பத்திரிகைபோடும் நண்பர் ''தமிழ்நாட்டுக்குப் புதியபணி செய்யவந்திருக்கிறேன்'' என்று ஊரை ஏமாற்ற வேண்டாம்...

............

— தி. ஜ. ர.

---

11-2-84

'ஈழநாடு'

பத்திரிகைக்கு

25 ஆண்டுகள்

நிறைவு



# ஆயுதக்கட்டுப்பாடும் அமெரிக்க-ரஷ்ய இழுபறியும்




கேந்திரோபாய ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் நடத்து கொள்ளுமாறு அமெரிக்க ஜனாதிபதி றேகன் மறுபடியும் ரஷ்யாவை வேண்டியுள்ளார்.

ஆனால் மேற்படி பேச்சுவார்த்தைகள் முறிவதற்கும், அமெரிக்க - ரஷ்ய உறவுகள் சீர்கெடுவதற்கும் வாஷிங்டனே காரணமாக இருந்தது என்பது அரசியல் அவதானிகளின் அபிப்பிராயமாகும்.

அடுக்குத்தனமான விதத்தில் ஐரோப்பாவில் புதிய ஏவுகணைகளை பல நாடுகளினது எதிர்ப்புக்கள் மத்தியிலும் அமர்த்துவதற்கு வாஷிங்டன் மேற்கொண்ட அதிசூரத்தனமான தீர்மானமே இன்றுள்ள நெருக்கடி உருவாகக் காரணமாகவிருந்தது.

'நேட்டோ' அணி நாடுகளுக்கும் 'வார்சோ' நாடுகளுக்குமிடையில் தோராயமான இராணுவச் சமநிலையை ஏற்படுத்தும் பொருட்டே ஐரோப்பாவில் புதிய ஏவுகணைகளை அமர்த்துகின்ற தீர்மானத்தைத் தான் மேற்கொண்டதாக றேகன் நிர்வாகம் கூறுகிறது. ஆனால் இதுவரை காலமும் ஐரோப்பாவில் நிலவி வந்த இராணுவச்சமநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுவதற்கே இது வாஸ்தவத்தில் வழிகோலியுள்ளது.

ஐரோப்பாவில் புதிய அமெரிக்க ஏவுகணைகளை அமர்த்துவதனால் தமது சொந்த மக்களுக்கும் மனிதகுலம் முழுமைக்கும் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை மீண்டும் சீர்தூக்கிப்பார்க்கும்படி ரஷ்ய ஜனாதிபதி அந்திரபோவ் றேகன் நிர்வாகத்திடம் பல தடவைகளில் வலியுறுத்தினார். ஆனால் புதிய ஏவுகணைகளை அமெரிக்கா அமர்த்தியதானது இதுவரை காலமும் ஐரோப்பிய பந்தோபஸ்தும் உறுதிப்பாடும் பேணப்படத் துணைநின்ற இராணுவச் சமநிலையைக் குலைத்துள்ளதுடன் கோட்பாட்டு ரீதியில் புதிய நிலைமைகளையும் தோற்றுவித்துள்ளது.

ஜெனீவாப் பேச்சுவார்த்தை முறிந்தது உட்பட இப்போது உருவாகியுள்ள நிலைமைக்கு ஐரோப்பிய மண்ணில் புதிய ஏவுகணைகளை அமர்த்தும் அமெரிக்க முயற்சிக்குப் 'பச்சை விளக்கு' காட்டியவர்களே ஜவாப்தாரிகளாவர். மேற்கு ஐரோப்பாவில் புதிய ஏவுகணைகள் அமர்த்தி வைக்கப்பட்டிருக்கின்ற வேளையில் எதுவும் நடைபெறாதது போல பழைய பேச்சுவார்த்தைகளைத் தொடர மாஸ்கோ இணங்கும் என எதிர்பார்ப்பது விசித்திரமான கற்பனையே. இது கற்பனை மட்டுமல்ல - ஐரோப்பிய மண்ணில் புதிய ஏவுகணைகள் வைக்கப்படுவதற்கு எதிரான வெகுஜன போராட்டத்தை 'தலைமடிக்கின்ற' ஒரு முஸ்தீபும் கூட.

ஐரோப்பாவில் தோன்றியுள்ள நெருக்கடி நிலைமைக்கு சோவியத் 'எஸ். எஸ்-20' ஏவுகணைகள்தான் காரணம் என வாஷிங்டன் வாதிக்கிறது. ஆனால் வாதத்துக்கு எதுவித ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை. புதிதாக வைக்கப்பட்ட ஒவ்வொரு 'எஸ். எஸ்- 20' ஏவுகணைக்குப் பதிலாக மூன்று 'எஸ். எஸ்-4, 'எஸ். எஸ்-5' ஏவுகணைகளை ரஷ்யா வாபஸ் பெற்றுக்கொண்டிருப்பதும், மேற்கு ஐரோப்பாவில் தனது ஏவுகணைகளின் எண்ணிக்கையை 600லிருந்து 473 ஆக ரஷ்யா குறைத்துக் கொண்டிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

ஐரோப்பாவில் அமெரிக்க நடுத்தர ஏவுகணைகளை அமர்த்தத் தொடங்குவதற்கு முன்பிருந்த நிலைமைக்குத் திரும்புவது சாத்தியமென அமெரிக்காவும் மற்றைய 'நேட்டோ' நாடுகளும் தெளிவாகப் புலப்படுத்தத் தவறும் பட்சத்தில் அமெரிக்க-ரஷ்ய பேச்சுவார்த்தைகள் மீண்டும் சீராக நடைபெறும் என எதிர்பார்ப்பதற்கில்லை.


## ரஸ்ட் ரவல் சேர்விஸ்

தலைமை அலுவலகம்

11/A, மொம்சாக்கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T. P. 24111

ஹைதிராமணி ஆர்காட், 65, சதாம் வீதி, கோட்டை. T. P. 548409, 548811

★ வெளிநாடு செல்வதற்கு குறைந்த செலவில் விமான டிக்கட்டுகள் பெற்றுத் தரப்படும்.

★ AERO FLOT, C. S.A. விமானக் கம்பனியின் பிரதான ஏஜன்டுகளாக இருப்பதனுல் குறைந்த செலவில் விரும்பிய நேரத்தில் பயணங்களை மேற்கொள்ளலாம்.

★ Air Lanka டிக்கட்டுகளில் விசேட கழிவு தரப்படும்.

★ குறைந்த செலவில் பிரயாணிகள் காசோலை பெற்றுத்தரப்படும்.

★ அதிகப்படியான டிக்கட்டுகளுக்கு கமிசன் தரப்படும்.



## பற்றீஷியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

கீழ்க்காணும் பாடங்களுக்கு செய்முறை விரிவுரை உட்பட அடுத்த வகுப்புகள்

**11-02-84ல் ஆரம்பம்**

(அ) மின் இணைப்பு (Electrical Wiring) — 1 மாத காலம்

(ஆ) மின் பொறியியல் வேலைகள் டிப்புளோமா (Electrical Engineering Works Diploma) — 6 மாத காலம்

(இ) நீர் குழாய் இணைப்பு (Plumbing) — 1 மாத காலம்

(ஈ) கொம்பியூட்டர் புறோகிறமிங் (Computer Programming) — 6 மாத காலம்


(உ) ஆங்கிலம் (Spoken English)

இந் நிறுவனத்தில் விற்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் 10-2-84க்கு முன் விண்ணப்பிக்கவும்.

மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள்

பதிவாளர்,
பற்றீஷியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
59, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.


நடிகமணியின் மணிவிழா இம்மாதம் 11-ம் திகதி பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் காங்கேசன்துறையில் நடைபெறவிருக்கிறது.



அந்த நாட்களில் துணிந்து மேடையேறி நாட்டுக்கூத்தின் புகழை நாடு முழுவதும் பரப்பிய புகழுக்குரியவர் நடிகமணி வி.வி. வயிரமுத்து, ஈழத்தமிழ் நாடக உலகில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களை அடுத்து, தலைசிறந்த நாடக முன்னோடிகளில் ஒருவர் என்று மதிக்கப்படும் பெருமையைப் பெற்றுள்ளவர் நடிகமணி வைரமுத்துவே!

# மணி விழாக்காணும் நடிகமணி!

அப்பழுக்கற்ற கலைச்சேவையில் வைரம் போன்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் நடிகமணி இவ்வாரம் மணிவிழாக் காணுகின்றார். 1934ம் ஆண்டு பெபரவரி மாதம் பதினொராம் திகதி காங்கேசன்துறையில் பிறந்த இவர் இம்மாதம் பதினொராம் திகதி தமது அறுபதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

★ திருமலர்

"நடிகமணி" என்ற முத்திரை பொறித்துக் கொடுத்த அரிசந்திர மயானகாண்டம் நாடகத்தை, ஈழத்தின் பல பாகங்களிலும் இரண்டாயிரம் தடவைகளுக்கு மேல் மேடையேற்றிய தனிச்சிறப்பொன்றே இவரது பெயரை நிலை நிறுத்தப் போதுமானது.

ஆடலும் பாடலும் ஒன்று சேரக் கைவரப் பெற்றவர், ஆர்மோனியப் பெட்டியிலிருந்து நட்டுவாங்கம்வரை கையாளும் வல்லமை பெற்றவர். சுருங்கச் சொன்னால் நாடகத்துறையின் ஒவ்வொரு நுணுக்கங்களையும் அனுபவத்தால் கற்றுணர்ந்த நடிப்பிசைப் 'புலவர்' நடிகமணி என்று கூறினால் தவறாகாது.

பாலர் கல்வியை தேவரையாளி இந்துக் கல்லூரியிலும் பின்னர் காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியிலும் கல்விபயின்ற வயிரமுத்து தமது பதின்மூன்றாவது வயதிலேயே மேடையேறினார். அப்பூதியடிகள் என்ற இசை நாடகத்தில் பிரதான பாகமேற்று நடித்த சிறப்பு, அந்த நாட்களில் இவரைத் தவிர வேறொரு சிறுவனுக்கும் கிடைத்திருக்காது;

1937ம் ஆண்டு முதன் முதலாக சிறுவன் வைரமுத்துவாக மேடையேறியவர், கடந்த நாற்பத்தேழாண்டுகளாக "நடிகமணி"யாக நாடகமாடிக் கொண்டேயிருக்கின்றார் இன்னும் மூன்றாண்டுகள் கழிந்த பின்னர் 'நாடக உலகில் பொன்விழாக்காணும் பெருமையையும் இவர் பெற்றுக் கொள்வார்.

யாழ்ப்பாணக் குடாவுக்குள் மட்டுமே பிரகாசித்துக்கொண்டிருந்த நடிகமணியை பல்கலைக்கழக வட்டாரத்துக்குள்ளும் இழுத்துச்சென்று அங்கும் அவரது தனிச்சிறப்பை அறிமுகம் செய்துவைத்த பெருமை பேராசிரியர் சு. வித்தியானந்

(16ம் பக்கம் பார்க்க)

## முகில்வண்ணன் அருளால் வாழி

உருகவே உளங்க ளெல்லாம்—பக்தி
உணர்ச்சிப் பிழம்பதாகி
பெருகவே கண்ணீர் வெள்ளம்—அன்பு
பெற்றிடும் நிலையுமாகி
கருகவே தீமையெல்லாம்—கடவுள்
கருணையை நித்தம் பாடும்
முருகவே பரமநாதன்—என்றும்
முகில் வண்ணன் அருளால்வாழி.

—கவிஞர் ஏரூரான் (மட்டுநகர்)

[ ● வல்லிபுரக் கோவில் பற்றிய 'ஆழ்கடலான்' என்ற நூலை எழுதி வெளியிட்டமைக்காக]

விளையாட்டு

# சேர் சோபஸுக்குப் புரிந்தது இவர்களுக்குப் புரியவில்லையே.....!

19 வயதுக்குட்பட்ட அகில இலங்கை கிரிக்கெட் தெரிவுக் கோஷ்டி, ஒரு மாத கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டு அவுஸ்திரேலியா சென்றுவிட்டது. ஆனால் இக்கோஷ்டியில் தமிழ் வீரர்கள் எவரும் இடம் பெறாதது மனதுக்கு மிகவும் வேதனையை அளிக்கிறது.

இக்கோஷ்டியைத் தெரிவு செய்வதற்கு அகில இலங்கையிலுமிருந்து 280 வீரர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். இதில் 19 வீரர்கள் கடைந்தெடுக்கப்பட்டார்கள். அதில் ஒரே ஒரு தமிழ் வீரர். அவர் தான் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் வி. திருக்குமார்.

வீரர் திருக்குமார் ஒரு சிறந்த அதிவேகப் பந்து வீச்சு வீரர். இவர் சென்ற வருடம் வடமாகாணக் கல்லூரிகளிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளில் மிகக் கூடுதலான (49) விக்கெட்டுகளை வீழ்த்தி ஒரு சாதனையை ஏற்படுத்தியிருந்தார். கிரிக்கெட் உலகில் மூன்று வருடங்கள் அனுபவம் உடைய இந்த வீரரை "நீர் வருங்காலத்தில் இலங்கையில் ஒரு சிறந்த அதிவேகப் பந்து வீச்சு வீரராகத் திகழும் திறமை உம்மிடம் இருக்கிறது" என்று தற்போது இலங்கையில் தங்கியிருந்து கிரிக்கெட் பயிற்சி அளித்து வரும், மே. இந்தியக்கோஷ்டியின் முன்னாள் காப்டன் சேர். ஹரிசோபஸ் கூறினாராம் இந்த உலகப் புகழ் வாய்ந்த வீரருக்கு எமது வீரர் திருக்குமாரின் திறமையைப் புரிந்த அளவுக்கு இந்தப் 19 வயதுக் கிரிக்கெட் கோஷ்டியின் தெரிவுக்குழு புரிந்து கொள்ள முடியாததை நினைக்கும் போது, மிகவும் ஆச்சரியமாகவே இருக்கிறது.

★ தேவா

இத்தெரிவுக் குழு முதலில் 18 வீரர்களைத் தெரிந்தபோது, அதில் 19 வீரர்களை மட்டுமே அவுஸ்திரேலியாவுக்குக் கொண்டு செல்வதாக அறிவிக்கப்பட்டது. ஒரு சில நாட்கள் கழிந்து 14 வீரர்களை மட்டுமே கொண்டு செல்வதாக அறி

(16-ம் பக்கம் பார்க்க)




'கிடுகுவேலி முடிவு' வாசகர் போட்டிக்கு வந்து சேர்ந்த பலநூறு முடிவுகள் சிலவற்றைச் சுவைப்பதற்கு இங்கு தருகிறோம். எல்லாவற்றையுமே பிரசுரிக்க ஆவலிருந்தும் இடவசதி இடந்தரவில்லை. போட்டியில் கலந்து கொண்ட யாவருக்கும் நன்றி.

[ஆ-ர்]

ஃ ... நிர்மலாவுக்கும் பகீரதனுக்கும் தொடர்பு அதிகரித்தது. காரணம், கணவனுக்கும் மனைவிக்கு மிடையே நடந்த தகராறை அறிந்த பகீரதன் சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கினன்... அன்று அவன் கைக்கு இரு கடிதங்கள் கிடைத்தன. ஒன்று நிர்மலாவிடமிருந்து டைவேர்ஸ்கோரி; மற்றது நிர்மலா - பகீரதன் கல்யாணப் பத்திரிகை. கிடுகு வேலி உக்கி மடிந்தது.

**வசந்தி கனகசபை**
திருநெல்வேலி

ஃ நிர்மலா பிடிவாதக்காரியானாலும் இரக்கமுள்ளவள். செல்வத்தின் கலியாணம் முடிந்ததும் குதூகலமாகத் தன்னிடம் ஓடிவருவான் என்று எதிர்பார்த்தாள். தகப்பனின் மறைவு அவர்களின் உறவிற்குத் தடையாகின்றது. பகீரதனுக்கும் பவளத்திற்கும் திருமணம் இனிதே நடந்தது. நாக்கிலே நரம்பில்லாமல் பகீரதனைப்பற்றி அவதூறுகக் கதைத்த பவளமே அவனைக் கட்டியது சண்முகத்திற்குப் பெரிய புதிராக இருந்தது. நெஞ்சில் முள்ளாகக் குத்திய சந்தேகவலி நீங்கியது. வசந்தங்கள் அவனுக்காக மலர்ந்தன. புரட்டப்படாதிருந்த அந்த இனிமையான பக்கங்கள் புரட்டப்பட்டன. பிரிந்திருந்த இவ்வளவு நாட்களையும் ஈடுசெய்வதுபோல அவனது மடியில் அவள் விழுந்தாள்.

**அருந்தவநாதன் வரதலக்ஷ்மி,**
நல்லூர்.

ஃ ... சந்தேகம். இருக்கிறதே... ஆமாம்... அந்தக் கொடிய வியாதி சண்முகத்தை வாட்ட ஆரம்பிக்கிறது. நிலை தடுமாறிக் கொந்தளிக்கிறது. அவன் நெஞ்சம். நிர்மலா தனக்கிட்ட அந்த நிபந்தனை? நிர்மலா மேல் நன்றி. அன்பு கருணை எல்லாமே பிறக்கிறது. தன் ஆசாபாசங்களையும்உணர்வுகளையுமல்லவா தியாகம் செய்திருக்கிருள் அவள்...? ''அத்தான் என்னை மன்னிச்சுடுங்க...'' அவன் கால்களில் வீழ்ந்து 'ஓ'வென்று அழுதாள். அவர்கள் மத்தியில் இடப்பட்டிருந்த திரை அக்கணத்திலிருந்து தகர்ந்துதூக்கியெறியப்படுகிறது. வெறும் கிடுகுவேலிதானே?

**அருந்ததி மகாதேவன்**
கொழும்புத்துறை

ஃ .. அங்கே நிர்மலா விஷம் குடித்துவிட்டுக் கட்டிலில் உருண்டு கிடந்தாள். சண்முகம் பதறிப்போய் அவளைத் தூக்கினன். 'அத்தான் நான் உங்களை வருத்திவிட்டேன். மன்னியுங்கள். நீங்கள் பவளத்தைக் கட்டிச் சந்தோசமாக வாழுங்கள். ரமணனைக் கவனமாகப் பாருங்கள்' என்றபடி நிர்மலா சரிந்தாள்.

**சகிகலா தனபாலசிங்கம்**
மானிப்பாய்.

ஃ... பகீரதனும் நிர்மலாவும் நல்ல நண்பர்கள் என்பதுதான் உண்மை. நட்பு என்பதைப் புரிந்து கொள்ளாத ஜீவன்கள் இன்றும் நம்மத்தியில் நடமாடத்தான் செய்கிருர்கள். நிர்மலா சண்முகம் ஆகிய இருவர் மத்தியில் இருக்கும் கிடுகுவேலி அறுக்கப்பட்டு இரு உள்ளங்களும் சங்கமிக்கும்.

**ஏ. கதிரமலைநாதன்,**
ஏழாலை

ஃ... கதையில் வரும் பாத்திரங்களாகிய செல்வம் - முருகானந்தம் திருமணம் எதிர்பாராதவிதமாக நின்றுவிடும். ஆகவே, சண்முகம் செல்வத்தை வேறிடத்தில் கல்யாணம் செய்து வைத்து அவன் கடமை முடியும்வரைக்கும் நிர்மலா தான் போட்ட வேலியை விட்டு வராமல் காத்திருப்பாள்.

**நா. விக்னேஸ்வரசர்மா,**
சுழிபுரம்.

ஃ .. சண்முகம்தன் சகோதரிகளுக்காக உழைத்துக் கொடுத்துவிட்டு ஒன்றும் மிச்சம் இல்லாத நிலையில் தனக்காக உழைக்க மீண்டும் வெளிநாடுபோகிறுன். ஆனுல், இம்முறை தன்மனைவி பிள்ளையையும் அழைத்துக் கொண்டு போகிறுன்.

**ச. நல்லைநாதன்**
கொழும்புத்துறை

ஃ ... ''இவ்வளவு நாளும் உங்களைப் புண்படுத்தி விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்று அவன் மடியில் விழுந்து நிர்மலா அழுதாள். சண்முகம் ஆதரவாக அவளை அணைத்தான்.. சண்முகம், தம்பி பூபாலனையும் அழைத்துக்கொண்டு வெளி நாடுசெல்கிறுன். ஒரு வருடம் கழித்துத் திரும்பி வருகிறுன் நிர்மலா சிவந்த பெண்குழந்தை ஒன்றைக்கையில் வைத்திருக்கிறுள். பிறந்து இரண்டு மாதம் ஆகவில்லை. அப்பா பார்க்கவந்திட்டன்'' எனக் குழந்தைக்கு முத்தமளித்தான்.

**ஜெயரஞ்சினி சின்னத்துரை**
சுண்டிக்குழி

ஃ .. என்ன இருந்தாலும் தன் கடமையைச் சரிவரச் செய்யவேணுமெனமனத்துணிவுடன் செய்துமுடித்தார். நிர்மலா படித்தபெண்ணுய் இருந்தபடியால் எல்லாவற்றையும் பொருட்படுத்தாமல், இறுதியில் கணவனுடன் சேர்கிறுள்.

**இ. பராசக்தி,**
ஆனைக்கோட்டை.

ஃ ... சண்முகம் தனது தங்கைமாரின் திருமணம் தான் நினைத்ததற்கும் மோலாகச் சிறப்பாக நடந்தசந்தோஷத்தில் நிர்மலாவிடம் அன்பாகப் பேசிச் சாப்பிடுகின்ருர். நிர்மலாவும் தனது வேண்டுதல் பலித்ததற்குக் கணவனுடன் உறவாடுகிருள்ரமணனுக்குஒரு தங்கை கிடைத்திருக்கின்ருள்.

**எஸ். கே. செல்வராஜா,**
மல்லாகம்.

ஃ ... நாவலின் முடிவில் நிர்மலாதற்கொலைசெய்து கொள்வதாகவும், சண்முகம் பவளத்தை மணஞ் செய்வதாகவும் கிடுகுவேலி நாவல் முடிவுறும்.

**கி. ஸ்கந்தன்,**
யாழ்ப்பாணம்.

ஃ ... பூபாலன் வெளிநாட்டிற்குச் சென்று உழைத்துப் பெற்ருேரைக் காப்பாற்றுகின்ருன். சண்முகம் நிர்மலா கூறியபடி தாய்வீட்டை மறந்து நிர்மலா ரமணனுடன் வாழ்கிருன். பூபாலன், பவளத்தைத் திருமணம் செய்கிருன்.

**நீலகேசி யோகநாதன்**
கந்தர்மடம்.

ஃ செல்வத்திற்கும் முருகானந்தத்திற்கும் திருமணம் நடைபெறும். அவனும் மனைவியும் ஒன்றுசேர்வார்கள் பின் நிர்மலாவின் வேண்டுதலுக்கு இணங்க அவன் உழைப்பைத் தொடர, சவுதிபயணமாவான்.

**ஆர் கே. நாதன்**
பரந்தன்.

ஃ ... ''என்னை மன்னிச்சிடுங்கோ'' என்றவாறு நிர்மலா அவன் காலில்விழுந்தாள். ''நிர்மலா, நீவேலி போடாமல் விட்டிருந்தால் இன்றுநான் இவ்வளவு அக்கறையாக என் கடமைகளை முடித்திருப்பேனே என்பது ஐமிச்சம் தான்! என் கடமைகளைச்சரிவர நிறைவேற்ற வைத்த உனக்கு என்வாழ்த்து' என்றவாறு அவள்கையைப்பற்றித் தூக்கி நிறுத்தினன் சண்முகம். அவள் முகம் குங்குமச் சிவப்பாகியது. அவள் போட்ட வேலி பிரிந்தது.

**சி. கிஷோராணி.**
சுன்னுகம்.

ஃ ... நிர்மலா தயங்கிக் கொண்டு அறையினுள் வந்தாள். அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான். ''ஏன் உடுப்புக்களை மடித்து வைக்கிறீங்கள் எங்கையாவது போகப் போறியளோ?''

''ஓம்... செல்வத்தின் கலியாணம் முடிந்த அன்றே நான் பயணம் போறன். நீ எவ்வளவு விலைக்கு என்னை வாங்கிஞயோ... முதலிலை அந்த விலையிலிருந்து என்னை விடுவிக்க வேணும், அதுக்காகத்தான் இப்ப நான் திரும்ப குவைத்துக்குப் போறன்',

அவள் கண்களின் பெருக்கோடு அவனைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு நின்ருள்.

**தமிழ்ப்பிரியா**
ஏழாலை

ஃ ..என்ர கடமைகளை நிறைவேற்றும் வரை எங்களுக்கிடையே ஐந்து வருஷமாக நான் போட்டுக் கொண்ட கிடுகு வேலிதான் இது. ஆனுல் இவ்வளவு பிரச்சனைகளையும் உருவாக்கிவிட்டது,நிர்மலா,' என்று மன்னிப்பு கேட்கும் தோரணையில் கூறினன் சண்முகம்; நிர்மலா கண்ணீரைத் துடைத்தாள். வெட்கம் ஆக்கிரமிக்க சண்முகத்திடம் தஞ்சமடைந்த நிர்மலாவை அன்பு மேலிட அரவணைத்தான் சண்முகம்!

**அன்புமகள்**
பண்டத்தரிப்பு

ஃ ... ''என்ன பெருமூச்சு?'' என்று நிர்மலா கேட்டாள். ,,ஐந்து வருட சன்னியாசத்தை நினைத்தேன். அதன் விளைவுதான் பெருமூச்சு'' என்ருன். இருவரும் சேர்ந்து சிரித்தனர். ஐந்து வருடமாக சேர்த்து வைத்திருந்த தாபத்தை இனியும் அடக்க முடியாதவளாக, நிர்மலா சண்முகத்திடம் சரணடைந்தாள். விளக்கு அணைந்தது.

**சாந்தினி நாகலிங்கம்**
வண்ணார்பண்ணை

ஃ ... ''நான் போட்டது வெறும் கிடுகு வேலிதான். ஆனுல் நீங்கள் மதிற்சுவரைப் போடப் பபர்க்கிறியள், இது எங்கை போய் முடியுமென்று பயப்படுகிறேன்''

''இன்னும் ஐந்து நாள் பொறுத்திரு..''

''ஐந்து நிமிடம் கூட உங்களை விட்டு வைக்கமாட்டேன். எந்தச் சக்தியும் வேலியாக எமது தாம்பத்தியத்தில் இருக்க வேண்டாம்'' அவன் மடி மீது சாய்ந்தாள் நிர்மலா சண்முகத்தின் அறையின் வெளிச்சம் அணைந்து எங்கும் நிசப்தம் நிலவியது.

**திருமதி, க.சிவபாதம்**
யாழ்ப்பாணம்

ஃ தூக்க மாத்திரைப் போத்தல் உருண்டு கிடந்தது.

நிர்மலாவின் கடிதம்;

''என் முடிவு பைத்தியக்காரத்தனமான ஒன்ருகத் தோன்றலாம். என்னைப் பொறுத்த வரை நான் அனுபவித்த தோல்விகளின் அடிப்படையில் நின்று சிந்தித்துப் பார்க்கையில் என் போன்ற பெண்களுக்கு இதை விடச் சுலபமான, சிறந்த முடிவு இல்லை. உங்கள் உள்ளம் தூய்மையானது. உங்கள் எண்ணங்கள் உயர்வானவை. உங்கள் தியாகங்கள் மிகப் பெரியவை. என் பிடிவாதக் குணத்தால், உங்கள் எதிர்பார்ப்பை அன்று ஏமாற்றியமைக்காக வருந்துகிறேன். மன்னித்துக் கோள்ளுங்கள். உங்கள் மாமன் மகளை இரண்டாந் தாரமாக மணந்து சந்தோசமாக வாழ வேண்டும்''

—அன்பு மனைவி ச.நிர்மலா

**பரம்சோதி சண்முகநாதபிள்ளை**
நயினுதீவு

ஃ ...மன்னியுங்கள் என்று காலில் விழுந்து குலுங்கிக் குலுங்கி அழுதாள், நிர்மலா. இன்னமும் செயலற்றிருப்பதற்கு சண்முகம் என்ன உணர்ச்சியற்ற மரக்குற்றியா? பார்வைகள் மொழி பேச பாஷை அங்கு மூர்ச்சையாக ஆதுரத்துடன் அவளைத் தூக்கியவன் தான் இறுக்கமான அரவணைப்புக்குள் அவளைக் கைதியாக்கினன். சாத்தப்பட்ட அறைக் கதவுகளுள் அவர்களின் சிரிப்பொலி மோதி எதிரொலித்தது புதன் கிழமை இணையவிருக்கும் தம்பதிகளின் மணவினை ஒத்திகை அங்கே அறைக்குள் அமைதியாக அரங்கேறிக் கொண்டிருந்தது.

**நாகபூஷணி பத்மநாதன்**
மானிப்பாய்

ஃ ...நிர்மலா செல்வத்தின் கலியாணத்திற்கு முன்பு பகீரதனுடன் ஓடி விடுகிருள். செல்வத்தின் கலியாணம் முடிவடைந்த பின்பு சண்மும் குழந்தையை வளர்ப்பதோடு தனக்காக ஏங்கி நிற்கும் மாமன் மகள் பவளத்திற்கும் வாழ்வு கொடுக்கிருன். அவன் வாழ்வு மலர்கிறது.

**வீ.சுபத்திரா**
தும்பளை

ஃ . வாழ்க்கையின் நம்பிக்கை முருகானந்தத்தின் இழப்பில் தவிடு பொடியாகிறது. மணமகன் இன்ஞெருவன் எப்பொழுது, எங்கிருந்து வருவான். அதற்குத்தேவையான பணம்..? அவன் மீண்டும் வெளிநாடு செல்ல, விமானத்தில் காலடிவைத்தான். கண்ணீரைச் சுமந்தபடி நிர்மலா நிற்கிருள்.

**யோககுமார் கந்தையா,**
தெல்லிப்பழை

ஃ ... நிர்மலா நமது சமுதாயத்தில் புரையோடிப் போன ஒரு சம்பிரதாயத்தின் சாட்சியாக நிற்கிருள். சண்முகம் வீட்டிற்காக உழைக்கும் ஒரு செக்குமாடு. பகீரதனின் பிரவேசம் சண்முகத்தின் ஆணிவேரை ஆட்டம் கொள்ளச் செய்துவிட்டது தொடர்ந்தும் அவனும் நிர்மலாவும் இணைவது பச்சைமண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டுவது போலாகும்.

**அ அமுதரசன்,**
இளவாலை.

ஃ கதாசிரியர் ''செங்கை ஆழியன்'' அவர்கள் ''கற்பெனப்படுவது கடமையிற்றவருமை'' என்னும் கலிகாலப் புது மொழியாம் பொன் மொழியை நிலை நாட்டி சகோதர பாசம், துணைவியின் மோகம், தாய்மை அன்பு, தனையனின் வாஞ்சை என்னுமிவற்றுள் சிக்கித் தவிக்கும் தன்னையும் , தன் போன்ருேரையும் கால நேரமறிந்து காப்பாற்றும் கதாபாத்திரம் நிர்மலாவின் மூலம், பெண்மையின் பெருமையை தெளிவாக எடுத்துக்காட்டி,வறுமையேயாஞலும் வாழ்வாங்கு வாழ்ந்து வண்ணமுகம் வாடாதிருக்கும் பெண்ணரசிகளாலேயே நாடும் வீடும் நன்கு செழிக்குமென்பதை வாசகர் உள்ளங்களில் வைப்பாங்கு வைத்து, சண்முகம்-நிர்மலாவின் சகல குடும்பங்களும் சந்தோசமாக இரண்டறக் கலந்து, எடுத்துக் காட்டாக உலகில் வாழும்'' என்பதே இக் கதையின் முடிவாக அமையலாம்.

**நா. இராஜநாயகம்,**
உரும்பராய்

ஃ ... ''நீயும் ஒருபெண்ணு? மனதிலே ஆசைகளைச் சுமந்து கொண்டு உன்னிடம் பறந்து வந்தேன் ஐந்து ஆண்டுகளாக. வேறு ஒரு பெண்ணையும் நான் பார்த்ததில்லை என் உள்ளம் எல்லாம் நீயே நிறைந்திருந்தாய். ஆவலோடு வந்த என்னை உன் சொற்களால் சுட்டாய். என் இதயத்தை உடைத்து விட்டாய். என் நிம்மதிக்காகக நான் மீண்டும் குவைத் செல்கிறேன்'' என்ருன் சண்முகம், நிர்மலா அழுதாள்; கதறிஞள். அவள் இட்டது கிடுகுவேலி! அவன் போட்டது இரும்பு வேலி.

**திருமதி ஈஸ்வரி வயித்திலிங்கம்,**
யாழ்ப்பாணம்

ஃ ... இவளும்ஒருபெண்ணு? ஒரு ஆண்மகனின் கடமைகளையும் ஏக்கங்களையும் புரிந்து கொள்ளாத இவள் ஒரு பெண்ணு? அவளைக்கதையின் முடிவில் சாகடித்து விடுங்கள்.

**க. சுப்பிரமணியம்,**
சுருவில்

## அநீதி போக்க அவதாரம் செய்வனோ?

எங்கே தர்மம் அழிக்கப் படுகிறதோ
எங்கே வன்மம் தலைவிரித் தாடுதோ
அங்கே தர்மத்தைக் காப்பதற் காகவும்
அரக்கரைப் பழி தீர்ப்பதற் காகவும்
பொங்கு மாழிசூழ் பூவுல கத்தினில்
புண்ணியத்தை நிலைபெறச் செய்யவும்
எங்கள் கண்ணபிரான் யுகந் தோறுமே
எடுப்பனும் அவதாரங்கள் என்குவர்.

நல்லவர் துயர்கொள்ளும் பொழுதினில்
ஞாலம் துன்பம் அடையும் பொழுதினில்
வல்லவர் பழி ஏற்கும் பொழுதினில்
வாய்மை என்பதொழியும் பொழுதினில்
கள்ளர் காடர் அதிகாரஞ் செய்கையில்
கண்ணிலாதவர் ஆளும் பொழுதினில்
அல்லல் தீர்க்கும் உளத்தின னுகவே
ஆண்டவன் அவதாரம் புரிகுவான்.

உலகில் ஆயிரம் தீமை நடக்குது
உண்மை யென்ப துறங்கிக் கிடக்குது
கலகம் மிஞ்சிக் கொலைகள் நடக்குது
கடைகள் யாவும் எரிக்கப் படுகுது
வலிமை யற்றவர் ஓடும் ரயிலிலும்
வாழும் வீட்டிலும் தாக்கப் படுகிறார்
சலுகை ஓர்சிலர்க் காக விருக்குது
தர்மம் வார்த்தையில் மட்டும் சிரிக்குது.

பாண்டவர்க் காகத் தூது புரிந்தவன்
பங்கைப் பெற்றுப் பகையை முடித்தவன்
கூண்டுடன் துரியோதனன் கூட்டத்தைக்
குவல யத்தி லிருந்து தெரிவித்தவன்
வேண்டும் நன்மைகள் ஆயிரம் செய்பவன்
விந்தை யானவன் பார்த்தனின் சாரதி
ஈண்டு வந்தவ தாரமே செய்வனோ?
இன்னல் தீர்த்தெமை வாழவும் வைப்பனோ?

காரை. செ. சுந்தரம்பிள்ளை

# வளரும் தமிழுக்கு வளமூட்டிய முனிவன்

"மறைமொழி வாயினன் மலிதவத்திறைவன் நிறைமொழிக் குரவன் நிகரில் கேள்வியன்" என்று தமிழ்ப்பெரும் புலவர்களால் போற்றப்படும் வீரமாமுனிவர் தமிழ் மக்கள் அனைவராலும் பெருமையோடும் நன்றியோடும் நினைவுகூரப்படவேண்டியவர்.

காய்தல் உவத்தல் இன்றி நடுநிலை நின்று தமிழைஆய்ந்த அறிஞர் எவரும், வீரமாமுனிவரை செந்தமிழ்த்தந்தை என்று தயங்காது கூறுவர்; வசனநடை வல்லாளர் என்று வாயார வாழ்த்துவர்; வசன-செய்யுட் காவியத் தந்தை என்று போற்றுவர்; தமிழில் முதல் அகராதி தந்த தாதா என்று பாராட்டுவர்; பல்வேறு துறைகளிலும் தமிழைத் தலைதூக்கி வைத்த தலைமகன் என்று கூசாது கூறுவர். வீரமாமுனிவர் தமிழர் அல்லர். ஆனால் தமிழனாய் வாழ்ந்து, தமிழனாய் மறைந்த தமிழ்ப்புலவோன்.

### தோற்றமும் வளர்ச்சியும்

வீரமாமுனிவர் ஐரோப்பியர். இத்தாலிய நாட்டிற் பிறந்தவர். இவரதுபிறப்புப் பெயர் கொன்ஸ்ரன்ரின் ஜோசெவ் பெஸ்கிஆகும். கொன்ஸ்ரன்ரின் என்பது லத்தீனிலிருந்து மாற்றுப்பெற்ற ஆங்கிலச் சொல், இதற்கு தைரியம், வீரம், வன்மை, உறுதி, வல்லமை என்னும் கருத்துக்கள் உள. பெஸ்கி என்பது குடும்பப்பெயர்.

இளமையிலேயே கல்விகேள்விகளிற் சிறப்புற்று விளங்கிய பெஸ்கி றோமை மாநகரில் உயர் நிலைப்படிப்புகளைப்பயின்றார். இத்தாலியநாட்டு இலக்கிய இலக்கணங்களைக்கற்றுப் புலமை கைவரப்பெற்றார்.

தனது பத்தொன்பதாவது வயதில், உலகவாழ்வை வெறுத்து. துறவு பெற்று, இயேசு சபையில் சந்நியாசம் புகுந்தார். சமயசாத்திரம், தர்க்கசாத்திரம், தத்துவசாத்திரம் முதலிய ஞானசாத்திரங்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தார்.

லத்தீன், கிரேக்கம், பிரான்சியம், ஜேர்மனியம், போர்த்துக்கேசியம், ஆங்கிலம் முதலியவற்றைத் தெளிவாகக் கற்றுப் பன்மொழிப் பண்டிதரானார். மொழி, ஆந்திரம், கன்னடம் ஆதிய உள்நாட்டு மொழிகளைத் தகுமளவு கற்றுக் கொண்டார்.

தமிழ் மொழி பெஸ்கி சுவாமியாரைப் பெரிதும் கவர்ந்து கொண்டது. சங்க நூல்கள்' பஞ்சகாவியங்கள், இதிகாசங்கள்' புராணங்கள் முதலிய இலக்கிய நூல்களிலும், அகத்தியம், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களிலும் ஆர்வம் செலுத்தினார். பெஸ்கி அடிகள் மதி நுட்பமும் சொல் வன்மையும்' செய்யுள் இயற்றும் திறனும் பெற்று விளங்கிய அவர் அயற் கிராமங்கள்தோறும் நடையாகச் சென்று தமிழ் மக்களுக்கு நல்ல தமிழ் மூலமாக திருமறையைப் போதித்து வந்தார். பல ஊர்களில் சமயப் பணித் தளங்களை ஏற்படுத்தினார். தானெடுத்த கோவில்களுக்கும் ஊர்களுக்கும் தமக்குமே தமிழ்ப் பெயர்களை விரும்பிப் புனைந்தார்.

தனக்குத் தைரியநாதசுவாமி எனும் தமிழ்ப் பெயரையே வைத்துக் கொண்டார். அப்போதைய மதுரை வாழ் தமிழ்ச் சங்கப் புலவர்கள் இவருக்கு வீரமா முனிவர் என்ற சிறப்புப் பட்டமளித்துப் பாராட்டினர். இப் பெயரே பெருவழக்காயிற்று.

### காவி உடை - தலைப்பாகை -
### நெற்றியில் சந்தனம் -
### நெஞ்சில் பூணூல் -
### தாடி - சைவ உணவு -
### புலித்தோல் ஆசனத்தில்-
### இருந்து உபதேசம்
### இவர் யார்?
### இவர்தான் வீரமாமுனிவர்

இவர் தமது முப்பதாவது வயதில் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.

இவரின் தகைமையையும் திறமையையும் உய்த்துணர்ந்த சமயத் தலைமையாளர் இவரை இந்தியாவுக்குச் சமயப் பரப்புதற் பணிக்காகச் செல்லுமாறு பணித்தார்.

### கோவையில் பெஸ்கி

பெஸ்கி சுவாமியார் 1710ம் ஆண்டில் ஐரோப்பாவிலிருந்து புறப்பட்டு இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கோவை என்னும் நகரை வந்தடைந்தார். அங்கு தங்கியிருந்து ஒரு சில மாதங்கள் இந்திய நாட்டு மொழிகளைக் கற்றுக் கொண்டார்.

பின்பு இவர் தென் இந்திய பாண்டிய நாட்டு மதுரைச் சமய வளாகத்தில் சமயப் பணி புரிவதற்கு அனுப்பப் பட்டார். தகுந்த சமயப் பணி புரிவதற்கானவொரு திட்டத்தையும் வகுத்துக் கொண்டார்.

பெஸ்கி சுவாமியார் மதுரை கிறீஸ்துவ குரு மட வளாகத்திலிருந்து கொண்டு தமது சமயப் பணியை ஆரம்பித்தார். முதலில் தமிழ், வட


காவியுடையணிந்தார். நெற்றியில் சந்தனமிட்டார். தலைப்பாகை அணிந்து, தாடி வளர்த்தார். நெஞ்சில் பூணூல் தரித்தார். புலால் உணவை நீக்கி சைவ உணவை ஒரே வேளை உண்டு வந்தார். புலித்தோலிலிருந்து போதகம் செய்தார். மிதியடி அணிந்து உலாவினார். இதனால் இந்து உயர் குல-பிராமண மக்களால். நன்கு அறிந்து மதிக்கப்பட்டார்.

அக்காலத்தில் தமிழ்நாட்டுப் பகுதியை அரசாண்டிருந்த சந்தாசாகிப் எனும் நவாப்பைத் 'தரிசிப்பதற்காக வீரமாமுனிவர் இந்துஸ்த்தானி, பார்சிக மொழிகளைக் கற்றுத் தேர்ந்து சந்தாசாகிப்பைக் கண்டு பேசினார். முனிவரின் கல்வித் திறனையும், கருத்துத் தெளிவையும் மெச்சி நவாப் இஸ்மாத்தி சந்நியாசி என்னும் பட்டமளித்ததுமன்றி இவரைத் தமது திவானகவும் (அமைச்சர்)அமர்த்திக் கொண்டார்.

(12ம் பக்கம் பார்க்க)

பண்டிதர் க. ஆசிநாதர்


## நவீன உல்லாசக் குடிசைகள்



### எல்லாம் உங்களுக்காகவே

- பிரதி சனி, ஞாயிறு நாட்களில் Buffet Lunch - ரூபா 35/- மட்டுமே
- பிரதி சனி தோறும் டிஸ்கோ (மாலை 5-00 தொடக்கம் இரவு 11-30 வரை) ரூபா 15/-
- பிரதி சனி தோறும் Bar-Be-Que-Dinner - ரூபா 60/-

உல்லாச வார விடுமுறை தினங்கள் - வெள்ளி இரவு முதல் ஞாயிறு மதியம் வரை
(அனைத்து உணவுடனும், தங்குமிட வசதிகள் உள்பட)

குளிரூட்டிய அறைகள் - இருவருக்கு ரூபா 590/-
குளிரூட்டிஅற்ற அறைகள் - இருவருக்கு ரூபா 500/-
பிற்குறிப்பு: மேற்கூறிய கட்டணங்களுடன் 10% சேவிஸ் சார்ஜ்

**கலியாணம் அல்லது விருந்துபசாரம் கொண்டாட வசதியாய் விசாலமான களியாட்டு மண்டபமுண்டு.**

**புதுமண தம்பதிகளுக்கு விஷேச சலுகைகள்**


Harbour View Hotel
Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

ANOTHER HOTEL MANAGED BY
AITKEN SPENCE & CO LTD
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha
Colombo 1. Tel : 27861-8 547161

Telegrams : ANCHOR Kankesanturai. Telephone : 22605 Jaffna.

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா உல்லாச பயணிகள் ஹோட்டல்
**காங்கேசன்துறை**
## ஹாபர் வியூ ஹோட்டல்
THE ONLY GARDEN RESORT HOTEL IN THE NORTH

# எமது சிறுகதை




சிங்கப்பூர் விமான நிலையத்திலிருந்து 'ஏயர் லங்கா' விமானம் புறப்பட ஆயத்தமாகியது. பயணிகள் மத்தியில் புதுப் பொலிவு. இன்னும் சில மணி நேரத்தில் தம் அன்பு உள்ளங்களைக் காணப் போகிறோம் என்ற நினைவில் அவ் இதயங்கள் மகிழ்ச்சியில் திளைத்தன.

சுமதி தனது ஆசனத்தில் அமர்ந்ததும் விமானத்தைச் சுற்றி ஒரு முறை பார்த்தாள். பிரயாணிகளில் அரைவாசிப் பேருக்கு மேல் அவளைப் போல சிங்கப்பூருக்குப் பணம் தேடி வந்த இளம் பெண்கள்! 'ம். ...' என்ற பெரு மூச்சு அவளையும் அறியாது வெளியே வந்தது.

'என்ன மாதிரிக் காலம் மாறிப் போயிற்றுது. யாழ்ப்பாணத்திலேயே ஒரு துணை இல்லாமல் வெளியே போகாத கன்னிப் பெண்கள், இன்று கடல் கடந்து சிங்கப்பூரென்ன, சவூதியென்ன, டுபாயென்ன... இன்னும் என்னென்னவோ ஊர்களுக்குத் தனித்துப் போய் வருகுதுகள்...''—அவள் மூளையில் ஒரு சிந்தனைத் துளி கோடு கிழித்து மறைந்தது.

சுமதி மட்டும்என்ன? ஊரிலே கோயில் திருவிழாவுக்குப் போகும் போதோ படம் பார்க்கத் தியேட்டருக்குப் போகும் போதோ துணை இல்லாமல் போயிருக்க மாட்டாள். அவள் தனது சிங்கப்பூர் பயணத்தைப் பற்றி அவளே நினைத்திருக்கவில்லை.

சுமதிக்கு நெஞ்சம் கனக்கிறது. பக்கத்தே பவானி. அவளது தோழி. கடந்த இரண்டு வருடங்களாக ஒரே அறையில் இருந்து ஒரே தொழிற்சாலையில் வேலை பார்த்த இன்னொரு யாழ்ப்பாணத்துக் குமர்ப் பிள்ளைதான் பவானி'

விமானம் முகிற் கூட்டங்களைக் கிழித்துக் கொண்டு செல்கிறது. விமானப் பணிப் பெண் கொண்டு வந்து தந்த சஞ்சிகைகளைச் சுமதியின் கைகள் புரட்டிய போதும் மனமோ அவற்றில் பதியவில்லை.

''நாளை மறு தினம் யாழ்ப்பாணத்தில் இருப்பேன். இரு வருடப் பிரிவின் பின்பு தங்கை வசந்தி- எவ்வளவு கதைகளைச் சொல்ல ஆவலோடு காத்திருப்பாள். வசந்திக்கும் சுமதிக்கும் இரு வயதுதான் வித்தியாசம். ஒருவரோடு ஒருவர் தோழிகள் போலவே பழகினர். அவளது கடிதங்களில் அக்கா பக்கத்தே இல்லாத ஏக்கம் அப்படியே புலப்பட்டது. 'வசந்தி உனக்கு நல்ல நல்ல சட்டைகள், நைலக்ஸ் சேலைகள் கொண்டு வந்திருக்கிறன்' என்று உரத்துக் கத்த வேண்டும் போல சுமதிக்குத் தோன்றியது.

''நானில்லாதது வசந்திக்கு நல்ல வேலையாயிருக்கும். படுக்கையில் கிடக்கும் அம்மா, குழந்தை குட்டிகளோடு கஷ்டப்படும் அக்கா குடும்பம்— எல்லா வேலையளையும் செய்து முடிக்க வசந்திக்கு பொழுது சரியாயிருக்கும் நான் போய் அவளுக்கு ஆறுதல் கொடுக்க வேண்டும்...,'

சுமதியின் மனம் வசந்திக்காக இரங்கியது.

சுமதியின் அப்பா ஒரு பள்ளுக்கூட உபாத்தியார். அப்பாவின் அன்பை உணராத பருவத்திலேயே சுமதி அப்பாவை இழந்து விட்டாள். அக்காவுக்கும் அண்ணனுக்கும் பின்பு- எட்டு வருடங்களின் பின்பு- சுமதி -பிறந்தவள். சுமதிக்கு இரு வருடங்களுக்கு இளையவள் வசந்தி

இந்த இரண்டு பெண் பிள்ளைகளையும் பெற்றிராமல் மூத்த பிள்ளைகள் இரண்டோடும் அம்மா நிறுத்தியிருந்தாளானல் இன்று அம்மாவுக்கும் கவலையில்லை, எங்களுக்கும் கரைச்சலில்லை.

சுமதியின் இதழோரத்தில் ஒரு புன்னகை. முப்பது வருடங்களுக்கு முன்பு நடந்த விடயங்களை இப்போது நினைத்துப் பார்ப்பது அவளுக்கே சிரிப்பாயிருக்கிறது.

விமானப் பணிப் பெண் குளிர் பானம் கொண்டு வந்து கொடுத்தாள். என்ன மாதிரிச் சிரித்தபடி உபசாரம் செய்கிறுள் அவள். நாங்கள் கொடுத்த பணத்திற்குச் சொகுசான பிரயாணமும், வசதிகளும். எல்லாமே இந்தப் பணத்திற்குத்தான் நடக்கிறது.

பவானி தூங்கி வழிகிறுள். பவானியும் தகப்பனில்லாத பெண்தான். ஆனல் அவளுடைய தாய்... சுமதியின் தாயைப்போலப் படுத்த படுக்கையிலில்லை. ...கள் உழைக்கும் பணத்தைக் கொண்டு அவளை ஒரு வழியில் விட வேண்டும் என்ற சிந்தையுடன் வாழ்பவள். பவானியின் குடும்பக் கதை முழுவதையும் சுமதி அறிவாள்.

சின்னத்தம்பி வாத்தியார் இருந்தால் சுமதி இப்படிச் சிங்கப்பூருக்குப் போவாளா? சுமதி பிரயாண ஆயத்தங்கள் செய்து புறப்படும் நாளைக்கு முன்பு பக்கத் வீட்டு ஆச்சி சொன்ன வார்த்தைகள்' சுமதியின் காதில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. உண்மைதான். ஐயா இருந்தால் இப்படிப் பணம் தேட வந்திருப்பேனு? மூப்பன் இல்லாத வீடு.

அக்காவுக்குக் கலியாணம் நடந்தது இப்பவும் சுமதிக்கு நினைவிருக்கிறது அப்பா செத்த அடுத்த வருடமே மாமா ஒரு கலியாணம் பேசிக் கொண்டு வந்தார். உள்ளதுகளைக் குடுத்து மூத்தவளை ஒரு வழியிலை விடு. மற்றதுகள் ரெண்டும் சின்னன்கள் தானே வாறவன் பாத்துக்கொள்ளுவான். மாமா சொன்னது அப்போதைய நிலையில் சரியாகத்தான் இருந்தது. ''உள்ளதுகளைக் கொடுத்து அக்காவை ஒரு வழியிலைவிட்டாச்சுது அண்ணனும் தன்ரை பாட்டைப் பாத்துக் கொண்டார். சின்னதுகள் ரெண்டும்வளந்து விட்டுதுகள். அதுகளைக் கரை சேர்க்க...'' சுமதியின் மேனியிலும், வசந்தியின் மேனியிலிம் மினுங்கிய தங்க நகைகள் அம்மா படுத்த படுக்கையானதோடு வைத்தியச் செலவோடு மறைந்து விட்டன. இவற்றை எல்லாம் பார்த்துத்தான் சுமதி சிங்கப்பூருக்கு ஒரு ஏஜென்சி மூலம் சென்றுள். சிங்கப்பூர் பயணம் வீண் போகவில்லை. இந்த இரண்டு வருடத்துக்குள் அவள் ஒரு கணிசமான தொகையை மிச்சம் பிடித்து விட்டாள்.அவள் வேண்டுவதெல்லாம் ஒரு நல்ல வாழ்க்கை. அதைத்தான் வேண்டி அவள் இப்பொழுது ஊருக்குச் செல்லுகிறுள்.

இன்னும் சில நிமிடங்களில் விமானம் கட்டுநாயக்கா சர்வ தேசவிமான நிலையத்தில் இறங்கிவிடும் என்ற அறிவிப்பு கிசுமதியின் காதுகளில் விழுறது. விமான நிலையத்தில் அவளை வரவேற்க அண்ணன் வந்திருப்பான். அவன் கொண்டுவரும்படி எழுதிய 'டெக்' அவள் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறுள். ஊருக்கு வர இருப்பதாக அவள் எழுதிய கடிதத்தைக் கண்டதும் அண்ணனும், அக்காவும் பதில் எழுதியிருந்தார்கள். அதற்குமுன்பு கடிதம் எழுதுவது வசந்தி மட்டுந்தான். இருவரது கடிதங்களிலும் தமக்கு என்ன என்ன சுமதி வாங்கிவரவேண்டும் என்பதே பெரும் பகுதியாக இருந்தது.

ஆவலோடு வரவேற்ற அண்ணனேடு புறப்பட்ட சுமதி, ''பவானி, நான் சிங்கப்பூருக்குத் திரும்புவதானல் உன்னுடன் தொடர்பு கொள்கிறேன். இருவரும் ஒன்ருய்ப் போனல் நல்லது'' என்று கூறிய பவானியிடமிருந்து விடைபெற்றுக் கொண்டாள். சொந்த மண்ணில் கால் வைத்த சுமதிக்குத் திரும்பிப் போகும் எண்ணம் இருக்கவேயில்லை.

அண்ணனேடு வந்து இறங்கிய சுமதியை வரவேற்க அக்கா, பிள்ளைகள், வசந்தி எல்லோருமே வாசலில் நின்ருர்கள். ஒவ்வொருவரும் சுமதி கொண்டு வந்த பொருட்களை வியப்போடு பார்த்து ரசித்தனர். சுமதி ஒவ்வொருவரையும் நினைத்து சேலை, சட்டை, லோங்ஸ், சேட் என்று வாங்கிவந்திருந்தாள்.

அம்மாவைப் பார்த்த சுமதிக்கு அவளில் அதிக மாறுதல் இருந்ததாகத் தெரியவில்லை. மாதாமாதம் சுமதி அனுப்பும் பணத்தில் அம்மாவுக்குச் சத்துள்ள உணவு வசந்தி கொடுக்கிருள். ஆனல் அம்மாதான் சுமதியைக்கண்டதும் அவளைத் தடவித்தடவிக்கண்ணீர் வடித்தாள். சுமதியோடு ஒத்த பிள்ளைகள் எல்லாம் குழந்தை குட்டிகளோடு வாழ சுமதி ஒன்றிக்கட்டையாக இருக்கிருள் என்ற நினைப்பு அவளுக்கு. வெளிப்படையாக ஒன்றும் கதைக்க முடியதவாறு ஒரு பக்கம் வழங்காத அம்மா கண்ணீர் விடுவதைவிட என்ன தான் செய்ய முடியும்?

சுமதியின் லீவும் முடியப் போகிறது. சுமதியைப்பார்க்க என்றும் அவளோடு கதைத்து சிங்கப்பூர் நிலைமையைக்கேட்க என்றும் வந்தோர் பலர். போகும்நாட்கள் கிட்டக்கிட்ட சுமதி ஓர் இயந்திரமாகத்தான் இயங்கினுள்.

''அக்கா வாறகிழமை போகப் போறியள். பிள்ளையார் கோயிலுக்கு இன்னும் போகயில்லை'' குல தெய்வத்தை நினைவூட்டினுள் தங்கை. வசந்தியைத் திருப்திப் படுத்துவதற்காகத் தான் சுமதி கோயிலுக்குப் போனுள். பிள்ளையாரைக் கும்பிட்டுத்தான் என்ன? பணம் உழைத்தும் தான் என்ன? ஒரு வாழ்வு கிடைக்கவில்லையே என்பது அவளுக்கு ஒரு பெருங்கவலை. இதனையாரோடு கதைப்பது? எப்படிக் கதைப்பது? சுமதிக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

கோயிலுக்குப் போகும் வழியில் சுகம் விசாரித்தவர்கள் பலர். ''ஏன் பிள்ளைகொண்ணை கொக்கா ஏதும் கலியாணம் பேசுகினமா? வாத்தியார் இருந்தால் இப்படி நீ இருப்பியா?ம்..உங்கடைகாலகஷ்டம் கொம்மாவும் படுக்கையிலை விழுந்திட்டா- சுமதியின் குடும்பத்தை நன்கு அறிந்த பாக்கியம் மாமி இப்படிச் சொன்னுள்.

'கொக்காவும், கொண்ணையும் தான் எல்லாருக்கும் தங்கடை அலுவல்தான் முக்கியம். நானும் வசந்தியும் முப்பது வயதைக் கடந்து இருக்கிறம் எண்டு யாரும் யோசிக்கினமோ?' இப்படித் தான் சொல்ல வேண்டும் என்று சுமதியின் மனம் சொல்லியது. ஏதோ தன்னைச் சமாளித்துக் கொண்டு ஒன்றும் சொல்லாது போய்விட்டாள்.

கோயிலுக்குப் போறவழியிலை பாக்கியம் மாமி சொன்ன வார்த்தைகள் அவள் மனதைக் குழப்பிவிட்டன.என்ன இது? பிறத்தியார் எங்களைப் பற்றி நினைக்கிற அளவுக்கு ஏன் அக்கா, அண்ணை நினைக்கினமில்லை. முந்தித்தான் ஒன்றுமில்லை. இப்ப ஏதோ கொஞ்சக்காசு கையிலை இருக்குதே. இந்தமுறை சிங்கப்பூருக்குப் போனல் வர இன்னும் இரண்டு வருஷம் வயதும் இரண்டு கூடிவிடும்' புரண்டு புரண்டு படுத்தாள் சுமதி.

''ஏனக்கா, நித்திரை வரவில்லையா? பக்கத்தில் படுத்திருந்த வசந்தி கேட்டாள். வசந்தி கேக்கிறன் எண்டு ஒண்டும் நினைக்காதை...... என்று ஒரு வேகத்தோடு எழும்பிய சுமதி சொன்னுள்:

''வசந்தி, நான் போய் இரண்டு வருசமாச்சுது.அக்கா. அண்ணை எப்ப எண்டாலும் எனக்குக் கலியாணம் பேசினவையா? நானும் குடியும் குடித்தனமாக வாழவேண்டும் எண்டு கதைச்செண்டாலும் இருக்கினமா?'' தன்னை மறந்து, தன்ரை கலியாண விஷயத்தைத் தானே கேட்டாள் சுமதி.

''அக்கா உன்ரை மனதுக்கை இந்தவிஷயம் இருந்து உன்னைக் குடையுறதை நானறிவன். நான் என்னத்தைச் சொல்ல? நீ நினைக்கிற அந்த விஷயத்தை ஒருத்தரும் நினைக்கிறதில்லை. நீ போகேக்கை வீடு எப்படி இருந்துதோ அப்படித்தான் இப்பவும் இருக்குது. ஆனல் மாதம் மாதம் உன்ரை காசு வரும் என்கிற நம்பிக்கை ஒண்டு இப்பஇருக்குது. அதுதான் ஒண்டு இப்ப கூட''

அக்காவைப் பார்க்க முடியாமல் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள் வசந்தி. அவள் கண்களில் நீர்முட்டி நின்றது.

(யாவும் கற்பனை)

## ஒளவைக்கேன் விழாவில்லை?

பாரத நாட்டினில் பறங்கியர் ஆட்சி
பருதிகாண் பணியெனப் பறந் ததுஓட
தீரமாய்ப்பலநாள் தீட்டிய பாக்களால்
திண்ணமாய் மனதினில் திகழ்ந்திடு மதியோன்
வீரமாய்ப் பலபல விளக்கங்கள் பாடி
விரும்பிய சுதந்திரம் விளம்பிய வித்தகப்
பாரதிக் கோர்விழா படித்தவர்கூடி
பாரினில் அமைத்தார் பரவச மானேம்

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்தென்று தரணிக்கு
தெள்ளு தமிழில் தீட்டிய தீம்பாக்கள்
தினமும் செப்பாது சிந்தை மறக்குமோ?
உள்ள மதங்களை உண்மையில் மாற்றி
உண்டு கடவுள் ஒன்றெனக் காட்டிய
வள்ளுவர்க் கோர்விழா வைத்தனர் கூடி
வைக்காதே என்பார் வையகத்தி லில்லை

நம்புவோர் மனதில் நாளுமே நடமிடும்
நந்த கோபாலன் நாராயண னெனும்
எம்பெருமானே பிறப் பெடுத் துதித்தார்
எங்கணும் நீதி எடுத்து நிலைநாட்ட
உம்பரும் போற்றும் உயர்ராம கதையில்
உருவக வுவமைகள் என்பன வுரைத்த
கம்பருக் கோர்விழா வைத்தனர் கூடி
கற்றவர் உள்ளம் களிப்புற்ற தன்றோ?

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
நன்றி மறவேல் நைவினை நணுகேல்
நன்மை கடைப்பிடி நாடொப் பனசெய்
தொன்மை மறவேல் தெய்வ மிகழேல்
திருமாலுக் கடிமைசெய் தீவினை யகற்றென
அன்றொரு நாளில் அறிவுரை பகர்ந்த
ஒளவைக்கேன் விழாவிலை அறிவுலகே விளம்பு.

**எஸ். ஷி. எஸ். சிதம்பரநாதன்**

## சமரசம்

சமரசம் என்ருல் சிறந்த ஞானிகளின் திருவுளத்தில் எழுந்த சமநோக்கு என்பது ஆகும். சமரசம் என்ருல் எல்லாப் பொருள்களும் ஒன்று என்பது பொருளன்று. எல்லாப் பொருள்களும் ஒரு போதும் ஒன்ருக மாட்டா. பொருள்களில் ஏற்றத்தாழ்வு எக்காலத்திலும் எவ்விடத்திலும் உண்டு. மேடு பள்ளம், அறிஞன் மூடன், சந்தனம் சாணம், தட்பம் வெட்பம், மேல் கீழ், நன்மை தீமை- இப்படிப் பொருள்களில் வேற்றுமை உண்டு.

— திருமுருக கிருபானந்தவாரியார்

## எதிர்ப்பவள் நான்

பெண்ணைக் கோழையாகப் படைப்பதை எதிர்க்கிறவள் நான். எழுத்தாளர்களும்சரி, நாடக ஆசிரியர்களும்சரி பிரச்னைகளுக்குத் தீர்வு சொல்ல வேண்டும்; பெண்களுக்கு வழி காட்ட வேண்டும். நழுவிஓடக் கூடாது.

லக்ஷ்மி




[13]

''பல்கலைக் கழகம் சென்றே
பட்டிமன் றங்கள் கேட்டோ
நல்லநூல் நிலையம் சென்றே
நாம்பெற முடியாப் பண்பை
சொல்லரும் முறையில் சொல்லித்
துணிவினை எனக்குத் தந்த
நல்லதோர் தெய்வம் அன்னை
நான் மறந் திடுதல் ஆமோ?''

''புராணங்கள் இதி காசங்கள்
போதிக்கும் நீதி யாவும்
இரவினில் பகலில் எல்லாம்
இனிதுற எடுத்துக் கூறி
வருதுயர் அதனைத் தாங்கி
வாழ்வினில் உழைக்கத் தூண்டிப்
பெருநலம் விழைத்த தெய்வம்
பிரிந்திடல் இயலு மாமோ?''

''வறுமைகள் துயர்கள் இன்னும்
வார்த்தையால் விளக்கொ ணுத
சிறுமைகள் பலவும் எம்மைச்
சேர்ந்திடர் செய்த போது
பொறுமையைப் பண்பைக் கூறி
புவியினில் அவற்றைத் தாங்கும்
திறமையை எனக்குத் தந்த
தெய்வம் என் அன்னை அன்றோ?''

''மணத்தின்பின் பெற்ற தாயை
மறப்பவர் தொகை இந்நாளில்
கணத்துக்குக் கணமே யாகக்
கதுமென வளர்தல் கண்டேன்
எனைப்பெற்ற தாயே மேலும்
எழுமைக்கும் தாயாம் வண்ணம்
நினைப்புற்ற நாளி ருந்தே
நிமலனை வேண்டு கின்றேன்''

''காலிழந் திருக்கும் அன்னை
கண்கலங் காத வண்ணம்
ஞாலமேல் கடன்கள் செய்ய
நான்மிகக் கட்டுண் டேனுல்
சாலவும் இனியை என்தன்
தாய்க்கென்றும் கடமை ஆற்ற
கோலமார் வரம்தான் இன்று
கொடுத்தருள்'' என்று கேட்டாள்

ஓவியக் கலைஞன் கேட்டே
உதட்டினில் நகைதான் தோன்ற
''ஆவியில் இனியை நானே
அனைத்தும்முன் நினைத் ததுண்டு
மேவிய அன்புத் தாய்க்கு
விரும்பிய வாறே தொண்டு
பூவுல கில்நீ செய்யப்
பெருந்துணை ஆவேன்'' என்றான்

இருவரின் உரையைக் கேட்ட
முதியவள் துணைவ னரின்
திருஉருப் படத்தைப் பார்த்தே
சிந்தினள் மகிழ்ச்சிக் கண்ணீர்
அரியநற் படங்கள் தீட்டும்
அற்புதக் கலைஞன் தானும்
''சரிசரி மற்ற தான
வரத்தையும் கேட்பாய்!'' என்றான்

அன்னையை என்னை என்றும்
அளப்பரும் செல்வத் தோடும்
மண்ணிடை வசதி யாக
வாழ்விக்க விழைந்த தந்தை
இன்னலை நோக்கார் ஆகி
இடர்மலி கொழும்பு சென்றே
தன்னுயிர் இழந்தார்'' என்றாள்
தயங்கிப்பின் கண்ணீர் விட்டாள்

''இரக்கமோ சிறிதும் இன்றி
எந்தையைக் கொன் றோரான
அரக்கர்கள் வாழும் அந்த
அநீதிசேர் கொழும்புக் கென்னை
வரச்சொல்லி எந்த நாளும்
வையமேற் கேட்டல் வேண்டாம்
தருகஇவ் வரமும் என்றே
தயவுடன் கேட்டாள் பெண்ணாள்

''தாயினைத் தந்தை தன்னைத்
தரையினில் மதிக்கும் பெண்ணே
நாயகன் தனையும் காப்பாள்
நன்கென'' உலகோர் செல்வார்
நேயமார் அன்பே இந்த
நீணிலம் தனில்என் றைக்கும்
தீயதாய் நினைக்கும் அந்த
நகர்க்குநீ வருதல் வேண்டாம்

என்றவன் உரைப்ப அன்னாள்
அவன்பதம் வணங்க லானாள்
நன்றென முதியள் கண்டே
நானிலத் திவர்ஒன் றாகத்
துன்றிடு செல்வம் யாவும்
எய்தியே சுகத்தி னேடும்
என்றென்றும் வாழ்க என்றே
இயம்பினள் ஆசி வார்த்தை.

(முற்றும்)

## தேசிய விடுதலைப் போராட்ட

## வேள்வித் தீயில் புடமிடப்பட்ட

# மகாகவிஞன் பாரதி

(கடந்த வாரத் தொடர்ச்சி)

அன்று பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் கொடிய காலனித்துவச் சுரண்டற் பிடியில் சிக்கித் திணறிய இந்திய நாடு, எழுச்சி மிக்க போராட்டங்கள், தியாகங்கள் மூலமே விமோசனம் அடைய வேண்டியிருந்தது. இது வர்க்கப் போராட்டமாகவன்றி ஒரு தேசியப் போராட்டமாக தேச விடுதலைக்கான போராட்டமாக விளங்கியதை மனதிற் கொள்ள வேண்டும். இந்தத் தேசிய விடுதலைப் போராட்ட வேள்வித் தீயிலே புடமிடப்பட்டுத் தோன்றிய மானிடனே நமது மகாகவிஞன் பாரதி. தனி மனிதர்கள் சரித்திரத்தை உருவாக்குவதில்லை. சமுதாயத்தில் நிகழும் இயக்கப் போராட்டங்களே சரித்திரத்தை உருவாக்குகின்றன' என்னும் இயக்கவியற் பாங்கு இங்கு கவனிக்கத்தக்கது.

பாரதி தேச விடுதலையின் பார்வையாளனாக இருக்கவில்லை; பங்களிப்பாளனாக விளங்கினான். அதன் பேறே இன்று அவன் எதிரிகள் கூடப் புகழாரம் சூட்டுமளவிற்கு, அவன் கவிதைகள் தேசமளாவ— வானளாவப் புகழ் பரப்பிக் கொண்டிருக்கின்றன

இந்தியதேசிய விடுதலைக்காக போராடிய காந்திஜி, நேருஜி போன்ற தேசியவாதிகள்' பகவத்சிங் போன்ற முற்போக்கு வாதிகள் சங்கமித்த இயக்கத்தின் பங்களிப்பாளனாக விளங்கிய பாரதி, பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தை பெரும் பகைவனாகக் கணித்து எரிசரமென எதிர்த்துச் சிங்கேறெனக் கெம்பி எழுந்து. முதன் முதலில் தேச விடுதலைக்காகச் சிந்து பாடிய தேச பக்தனாவர். இத்தகைய மாபெரும் தேச பக்தக் கவிஞனின் ஈமக்கிரியையின் போது, வீதிகள் தோறும் மடாலயங்களைக் கட்டிக் குபேரர்களாக வாழ்ந்த ஆஸ்திகர்கள் பார்த்திருக்க, 'பதினைன்கு மகாஜனங்கள் புடை சூழ'த் தகனஞ் செய்யப்பட்ட சோக வரலாறு ஒன்றும் தற்செயலான நிகழ்ச்சி அல்ல. பாரதி ஆஸ்திகக் கவிஞனாகவோ, பொய்மைச் சோருபங்களை உடைத்தானவனாகவோ இருந்திருப்பின், அவனின் ஈமக்கிரியைகளைப் படாடோபமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளே கோலாகலமாக நிகழ்த்தியிருப்பர். ஆனால், தேச பக்தர்கள் கூட வெளியில் தலை காட்ட அஞ்சிய காலகட்டத்தில் பாரதி பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளின் மூர்த்தண்ய எதிர்ப்பாளனாக விளங்கினான். உண்மையில் அது ஓர் ,வர்க்கச் சார்பு நிகழ்வு'என்னும் யதார்த்த நிலையைச் சரியாகப் புரிந்து கொள்வதில் அது குறித்து வியப்படையத் தேவையில்லை.

அதேபோது இதேபிரிட்டிஷ் பாதார விந்தங்களான புறம போக்கிகள்—நிலப் பிரபுத்துவ—முதலாளித்துவ— சுரண்டும் பண மூடைகள் 'பாரதி வர்க்கச் சார்பற்றவன்' என்ற மாயப்பொடியைத் தூவிக் கொண்டே, பாரதியின் தற்போதைய செல்வாக்கில் தங்களையும் இணைத்துக் கொண்டு தங்களுக்கும் மவுசு தேடப் புகழாரம் பாடியதுதான் ஆகவும் வேடிக்கையானது; அவனுக்கு நிந்தனையானது இதனை விட மோசமாகப் பாரதியை அவதூறு செய்யும் கைங்கரியம் அவன் நூற்றாண்டில் வேறு இருந்ததில்லை இதன் படி பார்க்கின் இன்றும் பாரதியை இவர்கள் பழி தீர்த்துக் கொண்டே நேசம் காட்டி மோசம் செய்கின்றனர். என்று எண்ண வருகிறது. இத்தகைய நபுஞ்சகர்களே, பாரதி வேதாந்தக் கவிஞன்' என்று நாக்கூசாமல் உச்சாடனம் செய்கின்றனர்.

இந்த வரிசையில் வட்டிக் கடைக் குபேரர்களும் வணிக இலக்கியக்காரர்களும், ஏதோ பாரதி தங்கள் வாரிசு என்று கூறுவது போல் வரிந்துகட்டிக் கொண்டு பெரும் விழாக்களும் எடுத்துள்ளனர் இரவில் பச்சை நோட்டும் பகலில் சிவப்பு அங்கியும் அணிவோர் இதில் அடங்குவர். இவர்களின் பொற்காலம் போலும் பாரதி இன்று உயிரோடு இல்லை. ஆனால், அவன் சமுதாயத்துக்களித்த கவிதா சக்தி உயிரோடு வாழ்கிறது என்ற மனச்சான்று கூட இவர்களிடம் பஞ்சப்பட்டு போனதுதான் ஆகவும் சின்னத்தனமானது.

**எஸ். அகஸ்தியர்**

பாரதியின் புதல்வி சகுந்தலா பாரதி ,ஒரு பொதுவுடமைவாதியான ப.ஜீவானந்தம் பற்றி இவ்வாறு கூறுகின்றார்;

''பதினேழு ஆண்டுகளுச்கு முன் நாகர் கோவிலில் பாரதி விழா நடைபெற்றது. அதில நானும் கலந்து கொண்டேன். வழக்கம் போல் கடவுள் வணக்கம் 'உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரியம்மா' என்ற பாரதியின் பாட்டு முழுவதையும் பாடினேன். அன்றுதேசம் வேறு தெய்வம் வேறுஅல்ல. அந்தமுறையில் பேசவும் செய்தேன். சற்றுநேரத்தில் ஜீவா பேசினார். ஜீவாவின் பேச்சை முதன் முதலாக நான் கேட்டதும் அப்போதுதான். என் தந்தையைப்பற்றி அவர் புதுப்புதுவிதமாகப் புதுப்புது வண்ணங்களாகப் பேசினார். அவரதுபேச்சு என்னை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்திற்று உணர்ச்சி ஆவேசத்தோடு ஜீவா பேசியபோது என் அப்பாவையே நேரிற் பார்த்தது போல் ஆகிவிட்டது. அன்று முதல் ஜீவா பேசும் கூட்டத்திற்குப் போவேன். பாரதியை ஜீவா நேரிற் பார்த்ததில்லை. புத்தகங்களில்தான் பாரதியை ஜீவா கண்டார். ஆனால், புத்தக மூலமாக ஜீவா கண்டறிந்ததுபோல் வேறு யாராவது கண்டார்களா வேன்று சொல்லமுடியாது. பாரதியின் எழுச்சிமிக்க கவிதைகளை ஜீவா பல விதமாக விளக்குகிற போது அனைவரும் 'ஆஹா ஆஹா' என்று மயங்கிக்கிடப்பார்கள். பாரதியின் புகழைப் பாருக்கெல்லாம் பரப்பி வந்தவர் ஜீவா. என் தந்தையைக் காட்டியவர் ஜீவா''

ஓர் உண்மையான பொதுவுடைமையாளரான இயக்க இயல்வாதியால்தான் பாரதியைச் சரியாகமுறையாக இனங்காணமுடியும் என்பதற்குப் பாரதியின் புதல்வி சகுந்தலாவின் கூற்றே தக்கசான்று.

ஆத்மவேகத்துடன் பாரதி பாடிய தேசியக் கவிதைகளும், ஆத்ம சோகத்துடன் பாடிய தெய்வப் பாடல்களும் ஒரு தேசத்தை - ஒரு நாட்டை - ஓர் உலகத்தை - மனித குலத்தை நோக்கிப் பாடியவைகளே:

சீர்கேடு நிறைந்த சமுதாய அமைப்பில் மக்களின் சகல வாழ்க்கை அம்சங்களும் தறிகெட்டுச் சீரழிந்து போவது இயல்பே. இவற்றைச் 'சீர் திருத்தல்' என்பது அதே ஆளும் வர்க்கத்தைப் பலப்படுத்தவே உதவும். ஆதலால் அடிப்படையில் மாற்றம் வேண்டிப் புதிய சமுதாயத்தை நிர்மாணிப்பதே மனிதகுல விமோசனத்துக்கு உண்மையான மார்க்கமாகும். அதாவது அதன் அத்திவாரமே தகர்க்கப்பட வேண்டும். இதனையே பாரதி தன் ஆத்ம நாதமாக, 'புரட்சி' என்ற பதத்தையே தாரகமந்திரமாகப் பாடினான். இந்தவகையில் பாரதி சீர்திருத்தக் கவிஞனல்ல. புரட்சிக் கவிஞகின்றான்.

இதனாற்றான் அவன் மாபெரும் ஒக்டோபர் சோஷலிஸப் புரட்சியை 'யுகப்புரட்சி' என்று வாழ்த்தி வர்ணிக்கின்றான்.

''ஆடுவேமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று''

இவ்வாறு சுதந்திரம் கிடைக்க முன்பே அங்கலாய்த்துப் பாடுகின்றான். இந்தச் சுதந்திரம் எப்படிப்பட்டதாக அமையவேண்டும் என்பதனை அடுத்தவரியில் இவ்வாறு பிரகடனம் செய்கின்றான்:

''எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு-நாம்
'எல்லோரும் சமம், என்பது உறுதியாச்சு'' என்றும் 'சமத்துவம்' காணத்துடிக்கின்றான்.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம்'' என்று தொழிலாள- விவசாயிகளை வணக்கத்துக்குரிய 'வர்க்க சக்தி'யாகக் காண்கின்றான்.

பொதுவுடைமை வாதிகள் தொழிலாள விவசாயவர்க்கத்தின் சின்னங்களாக 'அரிவாள் சம்மட்டி' களைப் பொறித்துள்ளமை இங்கு அர்த்தபுஷ்டியுடன் நோக்கற்பாலது. இவை மாத்திரமா?

''வீணில் உண்டுகளித்திருப் போரை நிந்தனை செய்வோம்''

என்று சுரண்டும் வர்க்கமான சுகபோகிகளை நிந்திக்கும்படி மக்களுக்கு அறைகூவல்விடுக்கும் பாரதி இங்கே முதலாளித்துவ விரோதியாகவும், தொழிலாள விவசாய வர்க்கத்தின் தோழனுவும் திகழ்வதைக் காண்கின்றோம்.

அத்தத்துவ சித்தாந்தத் தரிசனங்களின்படி மெய்யியல் நிலைபேறுக உலக சமுதாய மாற்றங்களை அவன்

(12ம் பக்கம் பார்க்க)

## தமிழ்தந்த தாதாக்களில் சிறப்பிடம் பெறுபவர்

# பைந்தமிழ்ப் புராணம் தந்த பண்டிதராசர்

திருக்கோணேசுவரத் திருத்தலத்தைப் புகழ்ந்து பாடும் இப் புராணம்' தல புராணங்களுள் முதன்மையானது, முதலில் எழுந்தது என்னும் வரலாற்றுப் புகழும் பெற்றது. பெறவே ஈழநாடு தமிழ் வளர்ச்சியில் சில பிரபந்தங்கள் நூல்களில் முன்னேடியாயிருந்தது] என்பதும் நமக்கெல்லாம் பெரும் புகழைத்தருவதாகும். அந்தாதித் தொடையில் அருமையாக எழுந்த இப் புராணம் வடமொழியிலமைந்த மச்சகேச்சுர புராணத்தின் மொழி பெயர்ப்பு என அறியக் கிடக்கிறது.

திருக்கிளரும் மச்சகேச்சுர
புராணஞ்
செந்தமிழால் எல்லோ
ரும் தெளியத்தானே
பெருக்கமுடன் கைலாச புரா
ணம் எனப்
பேருமிட்டுச் சீருமிட்ட
பெருமை தன்னுல்
சருக்கம் எழுவகையாக்கி
விருத்தப் பாக்கள் தானும்
அறு நூற்றுமுப்பத்தைந்
தாகச் செய்தான்
இருக்குமொழிச் சைவசிகா
மணியே யென்ன
எண்டிசையெண் பண்டித
விராசன் தானே''

**க. சி. குலரத்தினம்**

இப்புராணத்தை நயந்து சிறப்புப் பாயிரம் செய்தவர்களுள் ஒருவரான கவிவீரராகவர் என்பார் தமிழ் நாட்டில் களந்தையில் தோன்றிக் காஞ்சியில் கல்விகற்ற விற்பத்திமானுவர். அவர் ஈழம் வந்து இராசாக்களோடு உரையாடி மகிழ்ந்து இவர்கள் புகழ வாழ்ந்தவர். கவிவீரராகவர் தமது சிறப்புப் பாயிரத்தில் மன்னன் செகராசசேகரன் தமிழ் வளர்த்த செம்மையைத் தீந்தமிழிற் பாடியுள்ளார்.

''இடபவான் கொடி யெழு
திய பெருமான்
சிங்கையாதிபன் சேதுகாவ
லன்
கங்கைநாயகன் கருங்கடற்
சேர்ப்பன்
பௌவமேற்றுயில் பராபரன்
சூட்டிய
தெய்வ மாமுடிச் செகராச
சேகரன்''

ஆக்கியோன் இந் நூலுக்கு '.கைலாயபுராணம்'' எனவே பெயரிட்டார் என அறியக் கிடக்கிறது' ''ஆதரவில் இறைஞ்சுகதை கயிலாய புராணமென அறையலுற்றேன் மாதுரிய மச்சேந்திய வடபுராணத்தியல்பு மருவத்தானே' என வரும் தொடர் இதனை வலியுறுத்துகிறது. இந் நூல் முழுவதும் மொழிபெயர்ப்பு நூல் எனக் கொள்ளவியலாதவாறு இறுதிப் பகுதி வேறுபட்டுள்ளது.

இந்நூற் சருக்கங்கள் ஈழமண்டலச் சருக்கம், திருமலைச் சருக்கம்,புவனேற்பத்திச் சருக்கம், அர்ச்சனு விதிச் சருக்கம், மச்சாவதாரச் சருக்கம், தரிசனு முத்திச் சருக்கம். திருநகரச் சருக்கம் என ஏழு சருக்கங்களில் 635 பாடல்கள் உளவென்று பாயிரம் கூறுகிறது.

இந்நூல் கலிவிருத்தம், அறுசீராசிரியவிருத்தம் முதலிய பாவினங்கள் பயின்றுவர எதுகை மோனை நயம்ததும்ப வந்துள்ளதோடு, திருநகரச் சருக்கத்துச் செய்யுள்கள் சில மொழிபெயர்ப்பினின்றும் விடுபட்டுத் தோத்திரரூபமாகவும் உள்ளன.

''சிந்தை நீ சிந்தையில்
தெளியும் சோதி நீ
எந்தைநீ யாயுநீ எங்கட்
காவிநீ
விந்துநீ நாதநீ மேலுங்
கீழுநீ
பந்தநீ விடுநீ பகலுமல்லுநீ'

### திருக்கோணேசுவரம் திருக்கையிலை

திருக்கோணேசுவரத்தைத் திருக்கைலை என்றும் தக்கிண கைலாய புராணத்தைச் சிவகதை என்றும்புலவர் ஆராமையோடுபாடும் போது, அடியவர் உள்ளம் பக்தி மீதுற்றுத் துள்ளித் துடிக்கின்றது.

''காண்மின்கள் தென்கை
லைப் பெருமான்றன்
திருமேனி கருதுமின்கள்
பேண்மின்கள் சந்நிதியிற்
புகுமின்கள்
தொழுமின்கள் பேசுமின்
கள்
கேண்மின்கள் கைலாச
புராணமெனுஞ்
சிவகதையைக் கிளைக
ளோடும்
வாண் மின்கள் உய்மின்கள்
அஞ்செழுத்தை
மறவாது வாழ்த்து மின்
கள்'

இவ்வாருக இப்புராணத்தைச் சிங்கையாரியன் செகராசசேகர மன்னனே செய்தான் என்பர். அவன் பண்டிதனும் இராசனும் இருந்தமை இதனைக்கருதவோ யூகிக்கவோ இடமளிக்கலாம். அன்றி இதனை முதலிற் பதிப்பித்தவர்களும் பின்வந்த புலவர்களுமான சிலர் செகராசசேகரனே இதைச்செய்தான் என்பர். இதற்கு ஆதாரபூர்வமான வசனங்கள் சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரவர்களாலும் எழுதப்பெற்றுள்ளன. இவ்வாறு இருவர் பெயரையும் ஆராய்ச்சியாளர் கூற இவர்களின் வேருக மூன்ருமவர் இருவரும் வெவ்வேறு புராணங்கள் செய்திருக்கலாம் என்று நடுத்தீர்ப்பும் வழங்கியுள்ளார். இதனை அரசகேசரி என்னும் புலவர் பாடினுர் எனவும் சிலர் கருதுகின்ருர்கள். எவர்பாடினுர் என்பதை ஆராய்ச்சியாளர் ஆராய்ந்தறியவிட்டு நூலாசிரியர் கொடை இலங்கைக்குப் பெருமைதருவதாகும். சைவத்துக்கும் சைவசித்தாந்தத்துக்கும் தமிழுக்கும் இலங்கையின் பங்களிப்பு என்பது கருதி ஆராய்வோர் இப்புராணத்தை உச்சிமேற்கொள்வர் என்பது உறுதி. தமிழ்தந்த தாதாக்கள் வரிசையில் இந்நூலாசிரியர் சிறப்பிடம் வகிக்கின்ருர்.

**தமிழ் தந்த தாதாக்கள்**

# கல்லடியில் ஒரு திருச்செந்தூர்

**இரா. உதயகுமார்**

ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் ஆலயம் மட்டக்களப்பு கல்லடிக் கடலோரத்தில் அமைக்கப்பட்டு இன்று ஞாயிறு மகாகும்பாபிஷேகம் தமிழ் நாடு கோயம்புத்தூர் கௌமார மடத்தலைவர் ஸ்ரீ சுந்தரர் சுவாமிகள் தலைமையில்செய்யப்படவிருக்கின்றது.

இவ்ஆலயத்தை அமைப்பதில் தன்னை அர்ப்பணித்த மட்டக்களப்பு தெய்வ நெறிக் கழகத்தலைவர்சுவாமி ஓங்காரானந்த இவ் ஆலயம் அமைப்பதன் நோக்கம் பற்றிக் கூறிய விபரங்கள் இவை:

1965ம் ஆண்டு மகாசிவராத்திரி முன் தினமிரவு எனது ஆசிரமத்தில் உறங்கிக் கொண்டிருந்த நேரம் கண்டகனவு தான் முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாவது வீடாகிய திருச்செந்தூரில் உறையும் முருகனை ஈழத்துமக்கள் வழிபாடு செய்து அருள் பெறுவதற்காக மட்டக்களப்பு கல்லடிக் கடலோரத்திலும் ஓர் ஆலயத்தை அமைக்கும் சூழ்நிலையை உருவாக்கியது.

கனவில் தபோவனம் தோன்றியது. தபோவனத்தில் ஒரு பனைமரம் உண்டு. அப்பனை மரத்தடியில் காவியுடைதரித்த சுவாமிகள் அமர்ந்திருந்தார். நான் அவரை அணுகி இங்கு ஏன் இருக்கிறீர்கள்? எதற்காக இங்கு வந்தீர்கள், எங்கு போகின்றீர்கள் எனக்கேட்டேன்.

எனது கேள்விகளுக்கெல்லாம் இனிமையான குரலில் பதில்தந்தார். கடலை நோக்கிக் கையை நீட்டிக்காட்டிய சுவாமி ''அதோ தெரிகின்ற திருச்செந்தூரில் தான் நான் இருக்கின்றேன். நான் வழமையாக இவ்வழியால் கதிர்காமம் போவதுண்டு. அந்நிலையில்தான் இன்றும் கதிர்காமம் செல்லவந்தேன், வழமை போல் இன்றும் இப்பனைமரத்தடியில் ஓய்வு பெறுகின்றேன். யாராவது ஒரு சிறுகொட்டில் இவ்விடத்தில் அமைத்துத்தந்தால் இங்கும் சிலநாட்கள் தங்கலாம். உன்னுல் முடிந்தால் செய்து கொடு'' என்ருர்.

அவ்வளவுதான் நான் கனவு நிலைமாறி நனவுக்கு வந்துவிட்டேன். இந்நிகழ்ச்சி நினைவில் இருந்தது. படுக்கையில்கிடந்து சிந்தித்தேன்.

என்கனவில் தோன்றியது முருகன்தான் என உறுதியான முடிவு செய்தேன். முருகன் வேண்டிக் கொண்டபடி அதை இன்றே செய்துவிட வேண்டுமென்ற முடிவுக்குவந்தேன்.

காலையில் எழுந்து என் ஆச்சிரம சூழ்நிலையில் கிடந்த கருங்கற்களில் ஒரு கல்லை எடுத்து உளி, சுத்தியல் ஆயுதங்களின் உதவியுடன் பிள்ளையார் உருவமாக வடித்தேன். தபோவனத்தில் ஒரு கல்லுக்கூட இல்லை. இதனையடுத்து ஒரு சிறுபையுடன் கடற்கரைச் சூழலில் கிடந்த சல்லிக்கற்களைப் பொறுக்கிச் சேமித்துக் கொண்டேன். அரைப்பைக் கற் சிமெந்தும் வாங்கினேன் பனை மரத்தடியில் முருகன் அமர்ந்திருந்த இடத்தில் மேடை அமைத்தேன்.கொண்டுவந்த கல்லையும் நிறுவினேன். பிள்ளையார் போல் அழகாக இருந்தது. அபிஷேகம், பூசை, அர்ச்சனை, தீபாராதனை எல்லாம் செய்து முருகனை வழிபாடு செய்தேன். அன்று முதல் அது ஓர் வழிபாட்டு இடமாகவே இருந்தது.

பனை மரத்தடிப் பிளளையார் வழிபாட்டுத் தலம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தின் பின்பு கவியோகி சுவாமி சுத்தானந்த பாரதியார் மட்டு நகர் வருகை தந்த சமயம் ஓலைக் கொட்டில் அமைத்து வேலும் செய்து வைத்து கவியோகி மூலம் பூசை செய்து அந்த வேலையும் பிரதிஷ்டை செய்தோம்.

அன்று முதல் இக் கோவில் ''ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் ஆலயம்'' எனப் பெயர் பெற்றது பின்பு இந்தியாவிலிருந்து வருகை தந்த ஒரு சிற்பாசாரியின் மூலம் திருச்செந்தூர் முருகனுக்குச் சிலையும் செய்து பிரதிஷ்டை செய்தோம்.

1978ம் ஆண்டு ஏற்பட்ட புயல் கோவிலை தரை மட்டமாக்கி விட்டது. சில மாதங்கள் பின்பு மீண்டும் ஒரு ஓலைக் கொட்டில் அமைத்தேன். எக்காலமும் ஓலைக் கொட்டில் அமைப்பது சிரமமாக இருந்தது. கல்லால் ஒரு சிறிய அறை கட்டி அதில் சுவாமியை வைத்து விட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதற்கான ஏற்பாடுகள் செய்தேன். பிரசுரம் அச்கிட்டு ஊர் மக்களை அழைத்தேன். 1980ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டது. பல்வேறு பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். அன்றைய தினம் ஆரம்பிக்கப்பட்ட திருப்பணிச் சபையின் செயற்பாடு தான் இன்று இக்கோவிலைப் புதுப் பொலிவு பெறச் செய்துள்ளது. ஆலயங்கள் சமய அறிவை மக்களுக்கு ஊட்டக் கூடிய நிலையங்களாக மாற்றியமைக்க வேண்டும். இந்நிலையில் இவ் ஆலயம் முன் மாதிரியாகவே விளங்கும்

இந்து மதத் துறவுகள் ஆலயத்தில் பூசை செய்ய வேண்டும் பரிபாலனம் செய்யவேண்டும் சாதி சமய பேதமின்றி எல்லோரும் மூலஸ்தானம் வரை சென்று தரிசனம் செய்ய வேண்டும். முடியும் வரை கோவில் பூசை, அர்ச்சனை காரியங்களெல்லாம் தமிழில் இடம் பெற வேண்டும். ஆலயம் மக்களின் ஆன்மீக அறிவை வளர்க்கக் கூடிய நிலையமாக விளங்க வேண்டும்.

## ஹி..ஹூ

### காணுமல்போன கைக்குட்டைகள்

இன்ஸ்பெக்டர்- இவன் உமது வீட்டில் திருடியதாகச் சொல்கிறீரே. இவனிடமிருந்து எடுத்திருக்கும் சாமான்களில் உங்களுடையது ஏதாவது இருக்கிறதா?

வீட்டுக்காரர்- இந்தக் கைக்குட்டை என்னுடையதுபோல இருக்கிறது.

இன்ஸ்பெக்டர்- அதைக் கொண்டு மட்டும் குற்றம்சாட்ட முடியுமா? என்னிடம்கூட இதே மாதிரி ஒரு கைக்குட்டைஉண்டு.

வீட்டுக்காரர்- ஆமாம் சார் அதேமாதிரி இரண்டு கைக்குட்டைகள் காணுமல் போயிருக்கின்றன.

கா. யோ. கிரிதரன்

●

### பொலிசும் வலையும்

வலைவிற்பவர்- வலை வேண்டுமா சார்?

பொலிஸ் அதிகாரி- இங்கே எதுக்கப்பா வலை?

வலைவிற்பவர்- திருடனைப் பிடிக்க பொலிஸார் வலை வீச்சு என்று அடிக்கடி பேப்பரில் பார்த்தேன்...

கா. யோ. கிரிதரன்

●

### எம். ஜி. ஆர்.

ஆசிரியர்- இந்தியாவில் அவதரித்த வீரபுருஷர்கள் சிலரை யாராவது சொல்லுங்க பார்க்கலாம்.

மாணவன்- எம். ஜி. ஆர்.

குஞ்சரம்

### உண்மை புலப்படுகிறது

ஆசிரியர்- உலகம் உருண்டை என்பதற்கு ஒரு உதாரணம் சொல் பார்க்கலாம்?

மாணவன்- என்ர அப்பா அம்மாவோட கோவிச்சுக் கொண்டு வீட்டை விட்டுப் போய், திரும்பவும் வீட்டுக்கே வந்து விடுவது.

கரவை ஆ. மாயவன்

●

### சிவராத்திரி நன்மை

சைவபாட ஆசிரியர்- டேய் மணி, சிவராத்திரி அனுஷ்டிப்பதால் கிடைக்கும் முக்கிய நன்மை என்ன?

மணி- அடுத்த நாள் லீவு கிடைக்கும் சார்.

குஞ்சரம்

●

### மூடுபனி

6 மணிக் காட்சிக்குப் போய் விட்டு வருபவர்களிடம்)

நிரஞ்சன்- சியாமளன் நீ இந்தப் பனியுக்கை எங்கு போயிட்டு வாருய்?

சியாமளன்- மூடுபனி படம் பார்த்துவிட்டு வாறன்.

கிரி

●

### ஓ அதுவா?

நண்பர்- என் வயதில் நான் ஏமாந்ததே கிடையாது.

மற்றவர்- அதுதான் நேற்று உங்க கடிகாரத்தை யார்கிட்டையோ பறிகொடுத்திட்டீங்களா?

நண்பர்- அது ஓடாத கடிகாரம் என்று உங்களுக்குத் தெரியுமா?

கா. யோ. கிரிதரன்

# இவ்வாரம் எப்படி?

## திருமலை க. வேலுப்பிள்ளை ஜூனியர்

### மேஷம்

குடும்பத்தில் குதூகலம் சமமாகவே இருக்கும். சகோதர பிணக்கும் உண்டு. வியாபாரிகளும் மேடைப் பேச்சாளர்களும் போற்றப்படுவர். எதிலும் அவசர முடிவைத் தவிர்க்கவும். உடல் நலத்திலும் கவனம் செலுத்தவும். பிரயாணங்களைத் தவிர்ப்பின் மிகநன்று. அற்பவிடயத்திற்கும் பொல்லாப்புக் கேட்க நேரிடும். எதிலும் அவதானம் வேண்டும்.

### ரிஷபம்

தாய்வழிப் பெருமைகள் சேரும். சகோதரப் பிணக்கு சஞ்சலத்தைத் தரும். பிரிவுத் துயர் வேதனையைத் தரும். சிறுபிணிக்குமிடமுண்டு. வாயுப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும். குடும்ப மகிழ்ச்சிக்கு இடமுண்டு. நிதானப் பேச்சு அவசியம் வேண்டும்! கடமையாற்றுமிடத்தில் கவலைகள் உருவெடுக்கும்.

### மிதுனம்

புண்ணியவிருப்பு, புத்திர மகிழ்ச்சி. புதுமையில் நாட்டம். பெரியோர் வாழ்த்தும் அவ்வழித்தனமும் சேரும். சகோதரப்பாசம் சிறக்கும். ஆத்திரம் ஆபத்துக்களை விளைவிக்கும். எதையும் வாய்வீரத்தால் வீழ்ச்சியடையச் செய்யும். குடும்பத்தில் ஏற்படும் சில நச்சரிப்புக்களும் அதிகரிக்கப்படும்.

### கடகம்

பகைமூட்டம் வட்டமிடும். எண்ணங்கள் அலைமோதும். மாதுருவழியால் மனதுக்கிசைந்த விடயங்கள் ஈடேறும். சகோதரர்களும் சத்துருக்களாவதற்கு இடமுண்டு திடீர் பயணங்களை தவிர்ப்பின் நன்று. புத்திரர் புகழ்மகிழ்ச்சி தரும். புதுமையான எண்ணம் சிந்தையில் வந்துஉந்தும்.

### சிம்மம்

களஸ்திரவழிச் சுகமும் அவப்பெயரும் ஆணவப் போக்கும் ஆபத்தான சூழ்ச்சிகளை உருவாக்கும். வாகனசுகம். புத்திரர்புகழ். வெளியிடச் செய்திகள் குடும்பத்தில் குதூகலத்தைத் தேடித்தரும். அகாலப் போசனத்தைத் தவிர்க்கவும்.

### கன்னி

கிட்டிவரும் கெட்டபெயர் கொட்டமடக்கும். எண்ணிவரும் காதல்விடயம் கைகூடும் கண்ணியம் சேரும். நம்பிக்கைத் துரோகிகள் நையப்புடைப்பதற்கு நாள் தீட்டுவர். புதிரான போக்கு வாழ்க்கையில் திசைமாற்றத்தை உருவாக்கும்.

### துலாம்

பெரியோர் புகழும் பிதா வழித்தனமும் மகிழ்ச்சியைத் தரும். கட்டங்கள் மட்டமாகவேஇருக்கும். திட்டங்கள் பட்டம் போல்பறக்கும் அவதானம் வேண்டும். காதலர் போக்குதேன் என இனிக்கும் களஸ்திரம் சேரும் கவலையும் சேரும்.

### விருச்சிகம்

பெரியோர் வாழ்த்துக்களும் பிரயாணங்களும், தொழில் வளர்ச்சியும்' கன்னியர் சேர்க்கையும்'காடையர் கலாட்டாக்களும் இடம்' பெறலாம். விழிப்புடன் செயல்படவும். அடக்கம் விரும்பத்தக்கது. உறவினர் அளிக்கும் ஊக்கம் ஊதுபத்தி போலிருக்கும்.

### தனுசு

பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படும். போக்குவரத்து விடயம் சீர் பெறும். திடீர் பயணங்களும் பெரியோர்களின் போற்றுதலும் மன மகிழ்ச்சியைத் தரும்.உறவாடிக் கெடுப்பதற்கு பகையாளிகள் கூத்தாடுவர்.

### மகரம்

அதிக ஆசையினால் அவதிப்படுவீர். அகம்பாவத்தை அடக்கி நடக்கவும். வரும்படிகள் வரவேற்கக் கூடியதாக இருக்கும். புது முகங்களின் அறிமுகமும் புதுமையான எண்ணங்களின் அலை மோதலும் மகிழ்ச்சியின் எல்லையை தாண்டும் நிலை ஏற்படும். பிதா வழியால் பெருமையும் தனமும் சனமும் தேடித் தரும்.

### கும்பம்

புனைந்துரைகளால் மனம் புண்படும். அதிகாரப் போதையில் தவறுகள் இடம் பெறும். சிந்தனைத் தாக்குதலால் உடல் நலம் பாதிக்கும். வரவும் செலவும் வசதி போல் வாய்க்கும். வியாபாரிகள் இலாபங்களும் இட மாற்றங்களும் அடைவர். குடும்ப நிலையில் புயலுக்குப் பின் அமைதி ஏற்படும்.

### மீனம்

பெரியோர் புகழ்ச்சியும் புதுப் பிரயாணங்களும் பூமிப் பொருள் லாபங்களும் உருவாகும், தடைகள் பல உருவாகலாம். பெயரைக் கெடுப்பதற்கும் பொருளைப் பறிப்பதற்கும் சிலர் எத்தனிப்பர். அவதானமும் நிதானமும் வேண்டும். நீண்ட நாள் தொடர்பில் மாற்றம் ஏற்படும். எதிலும் அமைதி வேண்டும்.

## காந்தி படத்தின் பின்...

காந்தி படம் வெளியான பின் இந்தியாவுக்கு 1,20,000 சுற்றுலாப் பயணிகள் ஐரோப்பா, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளிலிருந்து புறப்பட்டுச் செல்லத் தொடங்கியுள்ளார்கள்.

க. க.


ஹலிபொறேஞ்
திரட்டிய அசல்
தோடம்பழச்சாறு!




உங்கள் குழந்தைக்கு அளவிலா அன்பையும், ஹலிபொறேஞ்சையும் வழங்குங்கள். காரணம், ஹலிபொறேஞ்சிலுள்ள தோடம்பழச் சாறு செயற்கையானதல்ல. அது செழிப்பான, சாறுநிறைந்த, தோடம் பழங்களிலிருந்து பெறப்பட்ட சுத்தமான, திரட்டிய அசல் தோடம்பழச்சாறு. ஆகவே, உங்கள் குழந்தைக்கு அதுவே சிறந்தது. அதில் ஏ.டீ.சி. ஆகிய பிரதான விட்டமின்களும் ஹலிபட் லிவர் எண்ணெய்யும் அடங்கியுள்ளன. உங்கள் பள்ளி செல்லும் பிள்ளைக்கும் அதனைக் கொடுங்கள். - பிள்ளைகள் பெரிதும் விரும்பி அருந்தும் ஹலிபொறேஞ் அவர்களுக்கு மிகச் சிறந்தது.

சிறிய 100 மிலீ போத்தலிலும் கிடைக்கிறது.

Glaxo
கிளாக்ஸோ சிலோன் லிமிட்டெட்
த. பெ. இலக்கம் 1653 கொழும்பு 1.

INTASEL

உங்கள் குழந்தைக்கு அன்பை
அள்ளி வழங்குங்கள்
....ஹலிபொறேஞ் வழங்குங்கள்

விலை ரூபா 39-90 சதம்

# 'இருண்ட கண்ட'த்தில் இலக்கியத்தவம்செய்யும் எஸ்பொ

சந்திப்பு:
பெரி. சண்முகநாதன்

ஈழத்தின் இலக்கியப் பரப்பில் தமது சுவடுகளை ஆழப்பதித்தவரும், சர்ச்சைக்குரிய இலக்கியகாரர் எனப் பெயரெடுத்தவருமான எஸ். பொ. ஈராண்டு கால வெளிநாட்டு வாசத்தின் பின்னர் மீண்டும் ஈழம் வந்துள்ளார்.

இரண்டாண்டு காலம் எம்மைவிட்டுப் பிரிந்திருந்த காலத்தில் அவருக்கு எம் நாட்டு இலக்கியத்துடனான தொடர்பறுந்திருக்குமோ என்ற ரீதியிலும், எஸ். பொ. இலக்கியத்தைத் 'தலைமுழுகி' விட்டார்'' என்றவாறும் இங்கு இலக்கிய வட்டாரங்களில் பேசப்படுவதுபற்றிக் கேட்டபோது எஸ். பொ. பின்வருமாறு கூறினார்.

## 'நான் ஓம்பும் உறங்கு நிலை...'

''பயிர் விதையிலிருந்து முளைப்பதற்கு முன்னர் சிறிது காலம் உறங்குநிலை பேணுதல் அதன் பரிணாம வளர்ச்சியில் இன்றியமையாதது. உறங்குநிலைஎன்பது என்வாழ்க்கையில் பின்னிப்பிணைந்துள்ளது. 1953க்கும் 1956க்குமிடையில் நான் ஓம்பிய உறங்குநிலையினால் பல பிரபல எழுத்தாளர்கள் இங்கு தோன்றியமைபற்றி நான் முன்னர் பல தடவைகளில் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் இன்று நான் போற்றும் உறங்குநிலை தமிழ் இலக்கியத்துக்கு ஆதாரமாக அமையும் என்பது நிச்சயம்.

## இலக்கியத் தவம்

பொருளாதார, சமூக நியாயங்களினால் மட்டுமன்றி, கலை, இலக்கியப் பாரம்பரியங்களிலும் ஆபிரிக்கக் கண்டத்து நாடுகளனைத்தும் மூன்றும் உலகினைச் சார்ந்தவை: மூன்றும் உலகின் இலக்கிய கலைத்துவங்களை முழுமையாக நுகரும் வண்ணம் ஆபிரிக்க மண்ணில் தோன்றிய உயிர்ப்புமிக்க இலக்கியப் படைப்புக்கள் தமிழ்ச் சுவைஞர்களுக்கு இதுவரை கிடைக்காதிருத்தல் அவப்பேறாகும். இந்த அவப்பேற்றினைப் போக்கத்தான் ஒரு இலக்கியத் தவத்தினை ஆபிரிக்க மண்ணிலே மேற்கொண்டிருக்கிறேன் எனச் சொல்லுவது பொருந்தும்.

இன்று விமோசன இயக்கங்கள் அலையடிக்கும் ஆபிரிக்க மண்ணில் மலரும் கலை, இலக்கியங்கள்பற்றிக் கேட்டபோது எஸ். பொ. பின்வருமாறு கூறினார்.

## 'அழகே உன் நிறம கறுப்பு!'

''ஆபிரிக்க மண்ணிலே இருதுல்லியமான இலக்கியக் குரல்களை நாங்கள் கேட்கலாம். இது இலக்கியக் குரலினது தேசிய தன்மையின் வெளிப்பாடு சார்ந்தது. ஒரு குரல் நீக்ரோக்கள் அந்நிய எஜமானர்களின் ஆதிக்கத்துக்கு எதிராக நடத்திய போராட்டத்தையும் அதன் பெறுபேருக



நிலைத்துள்ள ஆபிரிக்கப் பிரபுக்களின் ஆதிக்கத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துவது; மற்றது கறுப்பரினம் பரமார்த்த உள்ளச்சுத்தியுடன் வெள்ளைக்காரத்துவத்தை எதிர்க்கும் விமோசனப் போராட்டம். இப்போராட்டத்தின் விளைவாக எழுந்ததே 'அழகே உன் நிறம் கறுப்பு' (Black is beautiful) என்ற கோஷமாகும். விடுதலை என்பதன் அர்த்தம் பாமர ஆபிரிக்க மக்களுக்கு இன்னும் தெரியாது. அவர்கள் இன்னும் வெளிப்பாதிப்புக்களின்றி 'இருண்ட கண்ட'த்திலேயே இன்னும் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் விடுதலை உணர்வை ஊட்டுவதே இன்று ஆபிரிக்க மண்ணிலிருந்து பிரவகிக்கும் போர்பாங்குள்ள விமோசன இலக்கியத்தின் சிரேஷ்ட பணியாகவுள்ளது.

ஆடிக் கொடுமைகளுக்குப் பின்னர் வந்தவர் என்றமுறையில், 'கறுப்பு ஜூலை'யின் தாக்கங்களின் பிரதிபலிப்புகளை அவர் கண்டவாறினைக் கேட்டபோது எஸ். பொ, இவ்வாறு சொன்னார்.

## 'சோகத்தைச் சுமந்து திரியும் மௌன விரதிகள்'

''உண்மையைச் சொன்னால் இந்த நாட்டில்தானா நான் பிறந்தேன் என்ற வேதனை

## '... இந்த அவப்பேறினைப் போக்கத்தான் ஒரு இலக்கியத்தவத்தினை நான் ஆபிரிக்க மண்ணில் மேற்கொண்டிருக்கிறேன்..'

எனக்கு ஏற்படுகின்றது. பெரும்பாலான மக்களின் முகங்களில் சொற்களிலே வடித்தெடுக்கவியலாத சோக உணர்வு உறைந்து கிடப்பதைக் காணுகிறேன். இது சில சமயங்களில் மனப்பிராந்தியாக இருந்தாலும் வாழ்க்கைச் செலவுக்கும் வருவாய்க்கும் யதார்த்தமாகத் தொடர்பறுந்த நிலையில் மக்கள் தமது கஷ்டங்களை மௌனவிரதிகளாகச் சுமந்து திரிகிறார்கள் என்றுதான் நான் நினைக்கின்றேன். அண்மையில் நடந்த இனக்கலவரத்தின் காரணமாக பலர் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஈராண்டு காலப் பிரிவின் பின்னர் தாயகம் வந்தேயாக வேண்டும் என்ற துடிப்பில் கட்டுநாயக்க விமானநிலையம் வந்திறங்கிய எனது நண்பர் சிலர் மூன்று நாள் விமானநிலையத்திலேயே தங்கிவிட்டு சொந்த ஊர் செல்ல முடியாத நிலையில் மீண்டும் நைஜீரியாவுக்கு வந்தனர்.

''மனிதனைக் கொன்று தின்பது மரபாகிவந்த ஆபிரிக்கர் கூட 'கறுப்பு ஜூலை'யின் போது ஈழத்தில் நடந்த இனப்படுகொலைகள்பற்றிய சேதி கேட்டு அதிர்ச்சியடைந்தனர்.

ஆபிரிக்கப் பாமரர்களுக்கு எழுத்தறிவிக்கும் பணியைத் தொடர்ந்து செய்யும்பொருட்டு மீண்டும் இம்மாத இறுதியில் நைஜீரியா செல்லவிருப்பதாகக் கூறிய எஸ். பொ. எதிர்காலத்தில் தமிழ்இலக்கியத்துக்கான தனது பங்களிப்பு மேலும் வீச்சுடன் நடைபெறும் என உறுதியளித்தார்.




லண்டன்மடல் :"உதயதாரகை"

இங்கிலாந்தில் திருட்டுத்தனமாக ஒரு தொலைக்காட்சி நிலையம் இயங்கி வருகிறது

இரவு 11 மணிக்கு மேல், பி. பி. ஸி டெலிவிஷனின் 2வது சேவை தனது ஒளிபரப்புகளை முடித்துக்கொண்ட பின்னர், அதே அலைவரிசையில் திருட்டு டி. வி. ஒலிபரப்ப ஆரம்பிக்கிறது. பொப் இசையும் திரைப்படங்களும் இந்தத் திருட்டுச் சேவையில் காண்பிக்கப்படுகின்றன.

பர்மிங்ஹாம் நகரத்திலிருந்து ஒளிபரப்பாகும் இந்த டி. வி. நிகழ்ச்சிகளை 4 மைல் சுற்றளவில் உள்ள சுமார் 5000 பேர் பார்த்து ரசிக்கிறார்களாம். ''டெல்ஸ்டார் டிவி'' என்று தன்னை அழைத்துக் கொள்ளும் இந்த நிலையம் பிரிட்டிஸ் அரசுக்கு பெரிய தலைவலியைக் கொடுத்து வருகிறது.

சட்டவிரோதமான இந்த ஒளிபரப்பை செய்துவருபவர்கள் பிடிபட்டால் பிரிட்டிஷ் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு 1000 பவுண்ட்ஸ் அபராதம் அல்லது 3 மாத சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

இந்தச் சட்டவிரோத ஒளிபரப்பு எங்கிருந்து வருகிறது என்று கண்டுபிடிக்க நவீன கருவிகளை வைத்து முயன்றும் வெற்றி கிட்டவில்லையாம். ஏனென்றால் ஒளிபரப்பாளர்கள் ஒவ்வொரு நாளும் புதிய புதிய இடங்களிலிருந்து ஒளிபரப்புகிறார்களாம். சக்தி குறைந்த ஒரு ஒளிபரப்பி, ஒரு வீடியோ காமரா, ஒரு வீடியோ இயந்திரம் என்பனவற்றை ஒரு காரில் ஏற்றி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்தில் வைத்து ஒளிபரப்பு செய்யப்படுகிறது. காரிலிருந்தே ஒளிபரப்ப முடியுமாம்.

## வேலையில்லா என்ஜினியர் செய்த வேலை!

வேலையற்ற ஒரு மின் பொறியியலாளர், ஒரு அரசாங்க ஊழியர், ஒரு வீடியோ வியாபாரி ஆகிய மூவர்கொண்ட ஒரு குழுவே இந்த திருட்டு டிவியை இயக்கிவருகிறது என்பது அரசாங்கத்தின் சந்தேகம்.

ஒரு டிவி ஒளிபரப்பை நடத்துவதற்கு கோடிக்கணக்கான பவுண்ட் பணம் தேவைப்படும் என்றதவறான கருத்தை உடைத்தெறிந்து, ஒரு சில நூறு அல்லது ஆயிரம்பவுண்ட் பணத்துடன் ஒரு டிவி ஒளிபரப்பை நடத்த முடியும் என்று ''டெல்ஸ்டார் டிவி'' நிரூபித்துவிட்டதாக அதன் அபிமானி ஒருவர் ''டெயிலி டெலிகிராப்'' பத்திரிகைக்கு பேட்டி வேறு அளித்துள்ளார்.

## இத்தாலியில்

இத்தாலியில் இதுபோன்ற நூற்றுக்கும் மேற்பட்ட திருட்டுத் தொலைக்காட்சி ஒளிபரப்புகள் இயங்குகின்றனவாம். ஆனால் அவற்றின் இயக்குநர்கள் மீது நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள் தோல்வியடைந்துள்ளன. ஆனால் இத்தாலிய திருட்டு ஒளிபரப்புகள் படு ஆபாச நிகழ்ச்சிகளையே தருகின்றனவாம்

பிரிட்டனின் உத்தியோகபூர்வ ஐ பி. ஏ. ஒளிபரப்பின் இயக்குநர்களில் ஒருவரான ஜாக் ரீடி இந்தத் திருட்டு ஒளிபரப்புகளுக்கு எப்படியாவது முடிவுகட்ட வேண்டும் என்று சீறிப்பாய்ந்துள்ளார்.

ஆனால் ஆளும் கட்சி எம். பி. யான திரு அந்தனி பியூமன்ட் டார்க் திருட்டு டிவிக்களுக்கு சட்டபூர்வமான அங்கீகரிப்பு கொடுப்பது நல்லது என்று பத்திரிகைகளுக்கு கூறியிருக்கிறார்!

# ஸ்கொட்லண்ட் யார்ட்டில் 'நடராஜ தாண்டவம்!'

## ஸ்கொட்லண்ட்யார்டில் நடராஜ தாண்டவம்

54 இலட்சம் (இலங்கை) ரூபா பெறுமதியான நடராஜர் விக்கிரகத்துக்கு உரிமையாளர் யார்?- இந்திய அரசாங்கமா? அல்லது கனேடிய பெற்றோலிய தொழிலதிபரும் கோடீஸ்வரருமான றொபட் போர்டனா?

இந்த வழக்கு விரைவில் இலண்டன் உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு வருகிறது.

அதுவரை. தாண்டவக் கோலத்தில் உள்ள சர்ச்சைக்குரிய நடராஜர் விக்கிரகம் இங்கிலாந்தின் உலகப்புகழ் பெற்ற துப்பறியும் நிறுவனமான ஸ்கொட்லன்ட் யார்டில் வைக்கப்பட்டிருக்கிறது. வழக்கன்று நடராஜப்பெருமான் இலண்டன் உயர்நீதி மன்றத்திற்கு எழுந்தருளுவார்.

தமிழ் நாட்டில் உள்ள அருள்திரு விஸ்வநாத ஸ்வாமி கோவிலிலிருந்து 1976 ல் திருடப்பட்ட விக்கிரகம் இது என்கிறது இந்திய அரசு. கி.பி.11ம் நூற்றாண்டில் சோழர் ஆட்சிக் காலத்தில் இது நிறுவப்பட்டதாம்.

பிரபல இந்தியக் கலாசார வல்லுநர் ஒருவரிடமிருந்துதான் விக்கிரகத்தை விலை கொடுத்து வாங்கியதாகவும், அதனை வாங்கமுன்னர் அது திருடப்பட்ட பொருள் அல்ல என்று உறுதிப்படுத்திய பின்னரே வாங்கியதாகவும் கூறுகிறார் றொபட் போர்டன்.

விக்கிரகத்தை வாங்கியபின் அதிலுள்ள சில பழுதுகளைத் திருத்துவதற்காக அதனை பிரிட்டிஷ் அரும் பொருட்காட்சிச் சாலைக்கு அனுப்பியிருந்தார் போர்டன். அது திருடப்பட்ட பொருளாய் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அரும் பொருட்காட்சிச் சாலையினர் போலீஸுக்கு அறிவிக்கவே, ஸ்கொட்லன்ட் யார்டில் உள்ள துப்பறியும் நிபுணர்கள் வந்து விக்கிரகத்தை எடுத்துச் சென்று தடுத்து வைத்துள்ளனர்.

தமிழ் நாட்டிலிருந்து நடராஜர் விக்கிரகங்கள் களவாடப்பட்டு வெளிநாடுகளுக்குக் கடத்திச் செல்லப்பட்டு விற்பனையானது இது முதல் தடவையல்ல.

1979ல் தமிழ் நாட்டிலுள்ள ஒரு ஆலயத்திலிருந்து ஒரு கோடியே மூன்று இலட்சம்

(12ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் கௌரவம்! மதுரை சோமு வயலின் பரிசு வழங்கினர்!



தமிழகத்தில் நமது இளம் இசைக் கலைஞருக்கு கௌரவமளிக்கப்பட்டுள்ளது!

சென்னையில் கடந்த நவம்பர்- டிசம்பர் மாதங்களில், வயலின் இசையில், ஐந்து போட்டிகளில் பங்குபற்றி' நான்கிலும் முதற் பரிசு பெற்றதுடன்,

சென்னை இசை விழாவில் தமிழிசைச் சங்கத்தின் மூன்று நிகழ்ச்சியிலும், ஒரு சோலோ நிகழ்ச்சியிலும் ஆர்.ஆர். சபா நிகழ்ச்சியொன்றிலும் கலந்து கொண்டு பாராட்டுதல்களைப் பெற்ற நமது கலைஞர் ஏ ஜி. ஏ. ஞானசுந்தரத்தை நாமும் பாராட்டுகிறேம்.

நாடறிந்த சங்கீதக் கலைஞரான மானிப்பாய் அய்யாக் கண்ணுதேசிகரின் புதல்வரான இவர் தமிழ் நாட்டில் புகழ் பூத்த கலைஞர்களிடமிருந்து தமிழ்நாட்டில் பரிசுகளைப் பெற்றுர்!

இண்டியன் பைனுட்ஸ் சொசையிட்டி நடாத்திய மாகாண ரீதியான போட்டியில் முதற் பரிசு பெற்றதற்காக மருத மலை மாமணியே என்றெல்லாம் பலருக்குப் பழக்கமான பழம் பெரும் கலைஞர் மதுரை சோமு வயலினைப் பரிசாக வழங்கினர்.

தமிழிசைச் சங்கப்போட்டியில், நாமகிரிப் பேட்டை கிருஷ்ணனிடமிருந்து வயலின் பரிசைப் பெற்றுர்.

சரஸ்வதிசபாவில் விவாதி மேளராகங்களில் வாசிக்கும் போட்டியில் முதற் பரிசாக தங்கப்பதக்கம் பெற்றுர். புரசைவாக்கம் வித்வத்சபையில் இடம்பெற்ற கச்சேரியில் பிரபல வயலின் வித்துவான் பி. என். கிருஷ்ணன் பரிசு வழங்கினர்.

புரசவாக்கம் வித்வத்சபையின் உருப்படிகள், பல்லவி வாசிக்கும் போட்டியில் மற்றெருபரிசுகிடைத்தது.

இயலிசை நாடகச் சங்கம் நடத்திய திறமைப் போட்டியில் முதற்பரிசைத் கட்டியதால், தமிழ்நாட்டில் நான்கு இடங்களில் இசை நிகழ்ச்சிகளை இவர் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழகத்தின் பிரபல சங்கீத வித்துவான் எஸ். கல்யாணராமனிடம் சிறப்புக் கல்வி பெறுகிருர்.

தந்தையிடம் இங்குசங்கீதம் பயின்ற இவர், நம்மவரான செல்வி தனதேவி சுப்பையாவிடம் ஆரம்பத்தில் பயிற்சி பெற்றவர்.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரியான இவர், மானிப்பாய் இந்துக்கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கல்லூரியில் ஆசிரியராகவும் இருந்திருக்கிருர்.

ஷர்மினி

## மாவும் மாமாவும்

கோபால் கடையில் தான் 'புரூேக்கர்' கந்தையா பற்பொடி முதல் கொண்டு அரிசி, மா, சீனி, மரக்கறி அத்தனையும் வாங்குவது வழக்கம். கடைக்காரருக்கு இரு 'வட்டன்'கள். சாமான் வாங்கப்போகும்போதெல்லாம் 'மாமா மாமா' என்று சுற்றுவார்கள். புரூேக்கரும் கறுவாத்துண்டோ, பொமிச்சியோ, இனிப்போ வாங்கிக் கொடுக்கத் தவறுவதில்லை. கோவிலில், வழிதெருவில் எங்கு கண்டாலும் அச்சிறுவர்கள் 'மாமா மாமா' என்று கூப்பிடுவார்கள். அவரும் கை காட்டிச் சிரித்துவிட்டுப் போவார்.

அன்று புரூேக்கர் கடைக் கணக்கை முடித்துவிட்டுத் தேவையான சாமான்களை எல்லாம் வாங்கிக் கட்டினர். சைக்கிள் கரியலில் ஒரு பார்சல், ஹான்டிலில் ஒரு கைப்பை. சைக்கிளில் வீடுநோக்கிப் புறப்பட்டார். அப்போது தான் அந்த 'வட்டன்'கள் எங்கிருந்தோ வீதியால் வந்து கொண்டிருந்தார்கள். கண்டுவிட்டார்கள் புரூேக்கரை. அச்சிறுவர்களை அவர் கடந்து செல்கையில் 'மாமா மாமா' என்றுர்கள். ஒரு கையில் குடை; மறுகையில் சைக்கிள் ஹான்டில். அவரால் கை காட்ட முடியவில்லை. சிறுவர்கள்தொடர்ந்து 'மாமா மாமா' என்று கத்திக் கொண்டு ஓடினுர்கள்.

அவர் தலையைத் திருப்பிச் சிரித்துவிட்டுப் போய்க்கொண்டிருந்தார். சாயந்தரம் கடைக்குப் போகும்போது கறுவாத்துண்டு வாங்கிக் கொடுக்கலாம் என எண்ணிக் கொண்டார். 'மாமா மாமா' என்று சிறுவர்கள் குரல்தொலைவில் ஒலித்துக் கொண்டிருந்தது.


மழைத்தூறல் கொஞ்சம் பலத்தது. வீதிகளில் ஆட்கள் யாருமில்லை. விரைவாக வீடு வந்து சேர்ந்துவிட்டார். சைக்கிளை நிறுத்திவிட்டு மனைவியைக் கூப்பிட்டார்.

மா விலை ஏறப்போவதை அறிந்து 5 கிலோ மா கொப்பிக் கணக்கில் வாங்கிப்பின் கரியலில் கட்டி வைத்திருந்தார்.

'மாப் பார்சலைத் தூக்கும்' என்று மனைவியிடம் சொன்னுர். பின் 'கரியலில்' வெறும் பை மட்டும்தான் இருந்தது, மனைவி அவரைப் பார்க்க அவர் மனைவியைப் பார்த்தார். 5 கிலோ மாவும் வழியில் கொட்டுண்ட அடையாளம், கோடடித்திருந்தது.

சிறுவர்கள் 'மாமா மாமா, என்று கத்தியதன் அர்த்தம் இப்போதுதான் புரூேக்கருக்குப் புரிந்தது.

நகைச்சுவைச் சித்திரம்



கா. யோகநாதன்

## ஸ்கொட்லண்ட்யார்ட்டில்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா பெறுமதியான நடராஜ விக்கிரகம் ஒன்று கடத்தப்பட்டு அமெரிக்கா டெக்ஸாஸில் உள்ள ஒரு அரும் பொருட்காட்சிச் சாலைக்கு விற்கப்பட்டது. இது திருடப்பட்ட விக்கிரகம் என்பதை இந்த அரும் பொருட்காட்சிச் சாலையினர் இப்போது ஒத்துக் கொண்டு அதனை இந்திய அரசிடம் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

1972ம் ஆண்டில் இது போலவே இன்னெரு நடராஜர் விக்கிரகம் கடத்தப்பட்டு இரண்டு கோடி ரூபாவிற்கு அமெரிக்காவில்கலிபோர்னியாவைச் சேர்ந்த நோர்ட்டன் சைமன் என்ற கோடீஸ்வரருக்கு விற்கப்பட்டது. அது திருடப்பட்ட பொருள் என்று தெரியாமல் வாங்கியதாக பின்னர் ஒத்துக்கொண்ட சைமன், தனது பெயரில் அமைந்துள்ள ஒரு அரும் பொருட் காட்சிச் சாலையில்தான் அதை மக்கள் பார்வைக்கு வைத்திருப்பதாயும், 1986ல் அதை இந்திய அரசிடம் திருப்பித் தருவதாயும் ஒத்துக்கொண்டுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து மாத்திரம் எத்தனையோ விக்கிரகங்கள் இவ்வாறு களவாடப்பட்டுள்ளனவாம். வெளிநாட்டிலுள்ள இந்த சர்வதேச திருடர்களுக்கு உதவி செய்தது உள்ளூரிலுள்ள ஒடுகாலிகள்தான்.

## பாரதப்படைகளுக்கு மிக நவீன சோவியத் யுத்த தளபாடங்கள்

சோவியத் யூனியன் தனது நாட்டில் உருவாக்கப்பட்ட மிக நவீனமான யுத்த தளபாடங்களை இந்தியாவுக்கு வழங்க முன்வந்துள்ளது.

இந்தச் செய்தியை லண்டன்பிரபல ''டெயிலி டெலிகிராப்'' பத்திரிகையின் பாதுகாப்புத் துறை நிருபரான மேஜர் ஜெனரல் எட்வர்ட் பார்ட்ஸன் வெளியிட்டுள்ளார்.

இந்த ஆயுத உதவி பற்றிய விஷேச அம்சங்களாவன:

★ சோவியத்தின் T 72 ரகத் தாங்கிகள் ஏற்கனவே இந்தியாவிடம் உள்ளன. இந்த ரகத் தாங்கிகள் மேலும் அனுப்பப்படவுள்ளன.

★ இந்த ரகத்தை விடச் சக்தி வாய்ந்த' புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட T 80 ரகத் தாங்கிகளும் இந்தியாவுக்கு அளிக்கப்படவுள்ளன. இந்த ரகத் தாங்கிகள் இப்போதுதான் சோவியத் படைகளுக்கே விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

★ மேற் சொன்ன இரு வகைத் தாங்கிகளையும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்ய அவசியமான புனைவரைவு விபரங்கள், தொழில் நுட்ப உதவிகளை வழங்குதல்.

★ இந்திய இராணுவத்திடமுள்ள BMP-1 ரக கவச வாகனங்களை மேலும் அதிகரிப்பதோடு, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள, 73 மி.மி துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட விமான மூலம் எடுத்துச் செல்லக் கூடிய BMP-2 ரக கவச வாகனங்களை வழங்குதல்.

★ சோவியத்தின் MIG-27 ரக போர் விமானங்கள் இந்த ஆண்டிலிருந்து இந்தியாவிலே உற்பத்தி செய்யப்படும்.

★ ஒலியை விட வேகமாகப் பறக்கக்கூடிய, சோவியத்தின் மிக நவீனமானதும் பயங்கரமானதுமான MIG-29, MIG-31 ரக போர் விமானங்கள் இந்தியாவுக்கு வழங்கப்படுவதோடு, இவற்றை இந்தியாவில் வைத்து உற்பத்தி செய்ய உதவி அளித்தல். MIG-29 சோவியத் விமானப் படைகளுக்கே இப்போதுதான் முதன் முதலாக வழங்கப்பட்டுள்ளதாம். MIG-31 சோவியத் படைகளுக்கு எதிர் வரும்' மே மாதத்திலேயே முதன் முதலாக பாவனைக்கு வழங்கப்படப் போகிறதாம்.

★ சோவியத்தின் தரையிலிருந்து ஆகாயத்துக்கு ஏவப்படும் SAM-8 ரக ஏவுகணைகள் ஏற்கனவே இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு விட்டனவாம்.

★ சோவியத்தின் மிக நவீனமான ஏவு கணையும் அண்மையில் சிரியாவுக்கு அனுப்பப்பட்டவையுமான SAM-5 ரக ஏவுகணைகளும் இந்தியாவுக்கு அனுப்பப்படவுள்ளன.

★ ஏராளமான சோவியத் நீர் மூழ்கிக் கப்பல்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட இருப்பதோடு, இந்தியக் கடற்படையின் கப்பல் துறைகளின் உற்பத்தியைப் பெருக்க சோவியத் உதவி வழங்கப்படுமாம்.

★ 1995 வரை நீடிக்கவுள்ள இந்த ஆயுத உதவி ஒப்பந்தத்தின் கீழ் இவை யாவும் 17 வருட காலக் கடனுக நம்ப முடியாத சலுகை ரீதியில் ஆண்டுக்கு 2 சத வீத வட்டியில் வழங்கப்பட இருப்பதாக மேஜர் ஜெனரல் எட்வர்ட் பர்ஸ்டன் அங்கலாய்த்துள்ளார். அது மட்டுமல்ல, இந்தக் கடனை அந்நிய நாணய மாற்று ரீதியில் திருப்பிக் கொடுக்கத் தேவை இல்லையாம். இந்திய ரூபாவாக, அல்லது பண்டமாற்று ரீதியில் இந்திய உற்பத்திப் பொருட்களாகத் திருப்பிக் கொடுத்தால் போதுமாம்.

★ யுத்த தளபாடங்களின் விலைகள் கூடக் குப்பை மலிவாம்! உதாரணமாக தாங்கிகளை எடுத்துக் கொண்டால், மேற்கு நாட்டுத் தாங்கிகளின் விலையை விட மூன்றிலொரு பங்கு விலைக்கு சோவியத் தாங்கிகள் இந்தியாவுக்கு வழங்கப்படுகின்றனவாம்.

## வளரும் தமிழுக்கு

(6ம் பக்கத் தொடர்ச்சி)

### முனிவரின் நூல்கள்

காவிய நூல்கள். தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கலமாலை, கலிவெண்பா, அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரி அம்மாள் அம்மானை, திருப்பாவாணி, தேவாரம், தேவமாதா அந்தாதி.

இலக்கண நூல்கள்: தொன்னூல் விளக்கம், செந்தமிழ் இலக்கணம், கொடுந் தமிழிலக்கணம், இலத்தீன்-தமிழ் இலக்கணம்.

வசன நூல்கள்: வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், பேதகமறுத்தல், லுத்தெரினித்தியல்பு, ஞானக்கண்ணுடி.

அகராதி நூல்கள்: சதுரகராதி, தமிழ் இலத்தீன் அகராதி, இலத்தீன் தமிழகராதி, தமிழ்-போர்த்துக்கீசிய அகராதி.

விகடம்: பரமார்த்த குருவின் கதை.

பஞ்சாங்கம்: திருச்சபைக் கணிதம்.

மொழி பெயர்ப்பு: திருக்குறள் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தெழுதிய பாடல்நூல்.

வளரும் தமிழுக்கு வளமான நிலைகள் பலவற்றை வாழ்வில் வழங்கிய வீரமாமுனிவரின் புகழ் தமிழ் உள்ள அளவும் நிலைத்து நிற்கும்]

தமிழுக்கும் புலமைக்கும் பல்லாண்டு!

## தேசிய விடுதலை

(8ம் பக்கத் தொடர்ச்சி)

'ஆஹா' என்று புளகித்து வரவேற்முன். எனவே, அத்தத்துவ சித்தாந்தங்கள் அனைத்தும் அவனுக்கும் உடன்பாடாகின்றன என்னும் உண்மையை எவரும் மறைக்க-மறுக்க-மறக்கமுடியாது.

இதனை இயக்கவியல் வரலாற்றுக் கண்ணேட்டத்தில் நிறுத்திக் கணிக்கத் தெரியாதவர்கள்தாம் இரண்டுங் கெட்டான் நிலையில் நின்று 'ஒரே வக்கிரகப் பிடி'யில் சிறுபிள்ளைத்தனமாக ஆவேசித்துத் தமக்குள்தாமே, புழுங்குகின்றனர். இவர்களும் ஆன்மீகவாதிகள் போன்றே, இயக்கஇயல் மறுப்புவாதி' களாவர். ஆனல் பாரதியோ ஒரு போதும் இயக்கவியல் மறுப்புவாதியாக இருக்கவில்லை: அவன் இயக்கம் தேச வர்த்தமான நிலையில் செயற்பட்டுக் கொண்டேயிருந்தது. இதனுற்ருன் அவன் கவிதா சக்தி உலகளாவி வானளந்து நிற்கின்றது. அவன் புகழும் உலகளாவி நிற்கின்றது. இதனுற்ருன் அவன் தீர்க்க தரிசன நோக்கில், எங்கோ ஒரு தேசத்தில் ருஸ்யாவில்- நிகழ்ந்த மாபெரும் ஒக்டோபர் புரட்சியை ஓருசர்வதேசதேசியவாதிபோல் கணித்து 'ஆஹா என்றெழுந்தது பார்யுகப் புரட்சி' என்று புகழாரம் பாட முடிந்தது.

# 'ஈழநாடு' இணையற்ற சாதனை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னுடன் தொடர்பு கொண்டு அந்தச் செய்தி கிடைத்ததா என்று விசாரித்து விபரமாகச் செய்தி தருவார் ஒரு அமைச்சரின் 'புளக்' கூட அனுப்பி உதவினர்.

இச்சமயத்தில் கொழும்பில் 'ஈழநாடு' பத்திரிகையின் நிருபர்களாகப் பணியாற்றியவர்களை நினைவு கூருவது நல்லதென்று கருதுகிறேன். இப்போது தேசிய சுவடிக்கூடத்தில் பணியாற்றும் திரு. க. நவசோதி, சமீபத்தில் மறைந்த அட்வகேட் பெரி சுந்தரலிங்கம், இப்போது லேக் ஹவுஸில் வேலை பார்க்கும் திரு. பொன். பாலசுந்தரம், முன்னர் டைம்ஸ் பத்திரிகை பின்னர் டெயிலி நியூஸிலும் பணியாற்றிய திரு. கே. நடராஜா, டைம்ஸ் பத்திரிகை, 'சன்' பத்திரிகை ஆகியவற்றில் பணியாற்றி இப்போது தாமே சொந்தமாக "சந்தேச நியூஸ் ஏஜன்ஸி' என்ற செய்திச் சேவையை நடத்திவரும் திரு. காமினி நவரத்தின ஆகியோர் பத்திரிகைத் தொழிலில் நிறைந்த அனுபவம் பெற்றவர்கள். இவர்களின் ஆலோசனைகள் நமக்குப்பெரிதும் உதவின.

'ஈழநாடு' தினசரிப் பத்திரிகையானதும் டி. எம். முருகையா, பி. எஸ். பெருமாள், ஆகியோரைத் தொடர்ந்து 'வீரகேசரி'ப் பத்திரிகையில் நீண்டகாலம் ஒப்புநோக்காளராகப் பணியாற்றிப் பத்திரிகை அனுபவம் பெற்ற திரு. க. சபாரத்தினமும், சுகந்திரன், வீரகேசரியில் பணியாற்றியவரும், பிரபல எழுத்தாளருமான திரு. அ. செ. முருகானந்தனும், வீரகேசரியில் சில மாதங்கள் 'விமோசனம்' என்ற பத்திரிகையை வேறொருவருடன் கூட்டுச் சேர்ந்து நடத்தி அனுபவம் பெற்ற திரு. கா. யோகநாதனும் வந்துசேர்ந்தார்கள். இதன் பின்னர் 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்ற வந்தவர்கள் அனைவரும் பத்திரிகைத்துறைக்குப் புதியவர்களே பட்டதாரிகள் பலர் 'ஈழநாடு' பத்திரிகையில் பயிற்சி பெற்று இப்போது நல்ல பதவிகளில் இருக்கின்றனர். கடந்த கால் நூற்றாண்டில் சில நல்ல பத்திரிகையாளர்களை உருவாக்கிய பெருமை 'ஈழநாட்டுக்கு' உண்டு; இதில் எனக்கும் முக்கிய பங்குண்டு.

'ஈழநாடு' தினசரியானதும் அதில் வரும் செய்திகளைக் கொழும்பிலிருந்து வரும் பத்திரிகைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது வாசகர் பலரின் பழக்கமாக இருந்தது. முதல்நாள் மாலை அச்சடிக்கப்படும் கொழும்பு பத்திரிகைகளில் வரும செய்திகளைவிட நள்ளிரவுக்குப் பின் கிடைக்கும் கடைசிச் செய்திகளுடன் 'ஈழநாடு' வெளிவரும்போது எந்தச் செய்தி சரி என்பதை வாசகர் பலர் எம்மிடமே நேரிலும் தொலைபேசியிலும் கேட்டுறுதி செய்துகொள்வார்கள். ஆரம்ப நாட்களில் வாசகர்களுக்கு இதை விளக்கப்படுத்தி நம்பிக்கையூட்டுவது பெரும்பாடாக இருந்தது. இச்சமயத்தில் 'டைம்ஸ் நிறுவனம்' 'டெய்லிமிறர்' என்ற புதிய காலைத் தினசரியை ஆரம்பித்தது அதன் கொழும்புப் பதிப்பு நண்பகலில் விமானத்தில் யாழ்ப்பாணம் வரத்தொடங்கியது. இதனால் ஆகில வாசகர்களுக்கு 'ஈழநாடு' பத்திரிகைச் செய்திகளை அதடன் ஒப்பிட்டு 'ஈழநாடு' மீது நம்பிக்கை வைக்க முற்பட்டனர். இப்படித்தான் 'ஈழநாடு' வாசகர்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொண்டது.

## இரவு பகலாக

இரவு பகல் என்று பாராது இருபத்திநான்கு மணிநேரமும் ஆரம்பகாலத்தில் பணியாற்றிய சமயத்தில் அமரர் டாக்டர் கே வி சண்முகரத்தினம் கொடுத்த உற்சாகமும் ஆறுதலும் அளப்பரியது. அதிகாலை நான்கு மணிக்கு ஈ என் 9151 பச்சை நிற 'கொன்சல்' கார் 'ஈழநாடு' வாசலில் வந்து நிற்கும். அதிலிருந்து இறங்கும் டாக்டர் சண்முகரெத்தினம் சுடச்சுட கோப்பி பாத்திரத்தை எடுத்துவரும் காட்சி இன்றும் கண்முன் நிற்கின்றது.

'ஈழநாடு' தினசரியாகிச் சில தினங்களின் பின் இரண்டு வாரத்தில் தமிழரசுக்கட்சியினர் யாழ்ப்பாணம் கச்சேரி முன் சத்தியாக்கிரகப்போராட்டத்தைத் தொடங்கினர். முதல்நாள் போராட்டம் ஆரம்பமானபோது நண்பகலில் பிந்திய பதிப்பு வெளியிடுவதற்குத் தீர்மானித்து டாக்டரிடம் கூறியபோது அவரும் அதை வரவேற்றார். கச்சேரிக்குப் போவதற்குத் தமது காரையே தந்தும் உதவினார். சத்தியாக்கிரக நேரங்களிலும் மற்றும் முக்கிய சம்பவங்களுக்கும் அவர் தமது காரையும் உதவியாளர் திரு குப்புசாமியையும் எனக்குத் தந்துதவுவார்.

## சுடச் சுடச் செய்தி

முதல்நாள் சத்தியாக்கிரகம் தொடங்கும்போது நான் அதிகாலையிலேயே அலுவலக வேலைகளைக் கவனித்துவிட்டுக் கச்சேரிக்குச் சென்றேன். அங்கு நடப்பவைகளைக் கவனித்துவிட்டுப் பிந்திய பதிப்பை வெளியிடுவதற்கான வேலைகளை மேற்கொள்ள அலுவலகம் திரும்பினேன். அங்கு நின்ற திரு ஸி ரி சொலமன், திரு. எம். கதிரவேலு, திரு. செல்லத்துரை [இன்று மூவரும் அமரராகிவிட்டனர்] ஆகியோரிடம் ஏதும் விசேஷமாக இருந்தால் உடன் எனக்குத் தகவல் தருமாறு சொல்லிவிட்டுப் புறப்பட்டிருந்தேன். பிந்திய பதிப்புக்கான செய்திகளை எழுதி, 'கம்போஸ்' செய்யப்பட்டுப் பக்கமும் தயாராகிக் கொண்டிருந்தது நேரமும் நண்பகலாகிவிட்டது கச்சேரியடியிலிருந்து முதலில் திரு. சொலமனும், பின்னர் திரு. கதிரவேலுவும், திரு. செல்லத்துரையுமாக மூவரும் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பொலிசார் கண்ணீர்ப் புகைக்குண்டு வீசியதாகவும், தடியடிப் பிரயோகம் செய்ததாகவும், ஆகாயத்தை நோக்கிச் சுட்டதாகவும், முதல் நாள் சத்தியாக்கிரகப் போராட்டம் நண்பகலுடன் கைவிடப்பட்டதாகவும் அறிவித்தனர். இச்செய்தியை அவசர அவசரமாக எழுதித் தலைப்புச் செய்திக்கு முதல் பத்தியாகக் கொடுத்து, தயாராக இருந்த பக்கத்தில் சிறு மாறுதல் செய்து அவசர அவசரமாகப் பத்திரிகையை அச்சடிக்கக் கொடுத்தோம். பத்திரிகை அச்சாகிக்கொண்டிருக்கும் போதே முதலில் சில பிரதிகளை பஸ் நிலையத்திற்கும் கச்சேரியடிக்கும் அனுப்பிவைத்தோம். சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு தடியடிக்குள்ளானவர்களும், கச்சேரியடியில் வேடிக்கைபார்க்கத் திரண்டிருந்தவர்களும் பஸ் நிலையத்தடிக்குத் திரும்பிக்கொண்டிருக்கையில், சற்றுமுன் நடந்த நிகழ்ச்சிகளைத் தலைப்புச்செய்தியாகக் கொண்டு 'ஈழநாடு' பத்திரிகை விற்பனையாகிக்கொண்டிருப்பதைப் பார்த்து அவர்களே அதிசயித்தனர் சத்தியாக்கிரகம்பற்றிப் பேசிக்கொண்டிருந்தவர்களிடையில் 'ஈழநாடு' பத்திரிகையில் பெரிதும் அடிபடத் தொடங்கியது.

சத்தியாக்கிரகம் நீடித்த நாட்களில் அடிக்கடி பிந்திய பதிப்புக்களை வெளியிட்டதுடன் சத்தியாக்கிரகம்பற்றியும், உண்ணாவிரதம் பற்றியும் காந்தி மகாத்மா கூறியவைகளைக் கட்டுரைகளாகவும் வெளியிட்டுவந்தோம். சத்தியாக்கிரகம் செய்தவர்கள் மத்தியில் ஒருவர், 'ஈழநாடு' பத்திரிகையில் வரும் செய்திகளையும், கட்டுரைகளையும் வாசிப்பார்; மற்றவர்கள் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். இது நடைமுறைக் காட்சியாக விளங்கிற்று!

சத்தியாக்கிரகம் வளர்ந்ததுடன் 'ஈழநாடு' பத்திரிகையின் புகழும் வளர்ந்தது பல ஆயிரம் பிரதிகள் விற்பனையாகின.

## அந்த வழக்கு

கோகிலாம்பாள் தொடர்பான கொலை வழக்கும் 'ஈழநாடு' பத்திரிகையின் வளர்ச்சிக்குதவியது. கொலை வழக்கு விசாரணையை நிருபர் யோகநாதன் ஒன்றுகூட விடாமல் பக்கம் பக்கமாக எழுதித்தள்ளினார். எதிரிகள் அணியும் ஆடைகள் முதல் சாட்சிகள்வரை நீதிமன்றக் காட்சிகளை வர்ணித்து வாசகர்கள் வழக்கு விசாரணையை வாசிக்கும் போது அதைப் பார்ப்பதுபோல் அனுபவிக்கச் செய்தார். பல ஆயிரம் பிரதிகள் விற்பனையானதுடன் பத்திரிகைத் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையும் ஏற்பட்டது விற்பனையாளர்கள் கேட்ட தொகையைவிடக் குறைவாகவே கொடுக்க நேரிட்டது. பொது இடங்களில் பலர் கூடிநிற்க, ஒருவர் வாசிக்க மற்றவர்கள் ரசித்துக் கேட்டு வியாக்கியானம் செய்யும் காட்சிகளை அச்சமயத்தில் காணக்கூடியதாக இருந்தது.

இந்தியப் பொதுத் தேர்தலில் குறிப்பாகத் தமிழ் நாட்டுப் பொதுத் தேர்தலிலும், நமது நாட்டுப் பாராளுமன்றத் தேர்தல்கள், உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களிலும் மக்களுக்கு இருந்த ஆர்வத்தைக் கண்டு சமயத்திற்கேற்பப் பிந்திய பதிப்புக்கள், விசேஷ பதிப்புக்கள் எனப் பல பதிப்புக்களை வெளியிட்டு வாசகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்ததுடன், அவர்களின் நம்பிக்கையையும் பெற்றோம்.

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு விழா யாழ் நகரே விழாக் கோலம் பூண்டதுபோல் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதை வாசகர்களும், பொது மக்களும் மறந்திருக்கமாட்டார்கள்.

பத்தாவது ஆண்டு விழா மட்டுமல்ல; சில வருடங்கள் தீபாவளிக் கலைவிழாவும் தொடர்ந்து நடத்திவந்தோம். இந்த விழாக்களை நினைத்துப்பார்க்கும்போது இன்று அமரராகிவிட்ட யாழ்ப்பாணம் தேவன் என்னும் மகாதேவா மாஸ்டரின் உதவியையும் ஒத்துழைப்பையும் என்றும் மறந்துவிட முடியாது.

'ஈழநாடு' பத்திரிகை பல சாதனைகளை நிலைநாட்டியிருக்கிறது. ஆரம்பகாலத்தில் நிர்வாகம் கொடுத்த உற்சாகமும் ஊழியர்களின் ஆர்வம் கலந்த கடும் உழைப்பும் வாசகர்கள் பொதுமக்களின் அபிமானமும் ஒத்துழைப்பும் இறையருளுமே இன்று 'ஈழநாடு' வெள்ளிவிழாக் காண்பதற்குத் துணையாகும்.

எல்லோரையும் எல்லா நேரமும் திருப்திப்படுத்திவிடமுடியாது. பத்திரிகையை வெளிக்கொணர்வதில் உள்ள கஷ்டநஷ்டங்களைச் சிறிதாவது வாசகர்களும் பொது மக்களும் தெரிந்துகொண்டால் வீணாகக் குறைகூறமாட்டார்கள் என்பது நிச்சயம்.


## புதிய வீடியோ பட வெளியீடுகள்

யாழ். மாவட்டத்தில் புதிய வீடியோ படப் பிரதிகள் வெளியீடுசெய்யப்படவிருக்கின்றன. பெற விரும்புவோர் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

வாணி வீடியோ ஹோம்

ஆலடி, வல்வெட்டித்துறை. [518]


# இணுவில்

# பரராஜசேகரப் பிள்ளையார்

# பெருஞ்சாந்தி பெறுகிறார்

கடவுள் உணர்வை மனித குலத்திற்கு ஊட்டவும், தூண்டிவிடவும் எடுக்கப்பட்ட முயற்சிகள் பல, இவற்றில் திருக்கோவில் வழிபாட்டை முதலில் வைத்தார்கள். அங்கே அபிஷேகம் அர்ச்சனை ஆராதனை ஆகியன நாள்தோறும் நடைபெறுதல் வேண்டும் அப்படி நடைபெறும் நித்திய பூஜைகளின் நிறைவுக்காகவே ஆண்டுதோறும் திருவிழாவென்னும் நைமித்திய உற்சவங்கள் செய்வர். எங்கும் வியாபகமாயுள்ள இறைவனைத் திருக்கோயிலிற் கண்டு தொழுவதற்கான அமைப்பு, பன்னிரு ஆண்டுகளுக்கொருமுறையாயினும் பழுதுபார்த்துப் பெருஞ்சாந்தியென்னும் கும்பாபிஷேகம செய்யப்படவேண்டும். இங்ஙனம் செய்வதால் ஊரும் நாடும் உலகமும் உய்யும். இதனைச்செய்தவரும் செய்வித்தவரும் கண்டுதொழுதவரும் பிறவிப்பயன் பெற்றவராவர்.

அண்மைக்காலமாக ஈழத்து சமய வரலாற்றில் ஒரு மறுமலர்ச்சியுகம் தோன்றியுள்ளது. ஒவ்வோர் ஊரிலும் திருப்பணிகளும் புனருத்தாரண வேலைகளும் நடைபெற்று மகாகும்பாபிஷேகங்களும் நடைபெற்றுவருகின்றன இணுவையூரில் பிரசித்திபெற்ற ஆலயங்களுள் ஒன்றான ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்திலும் திருப்பணிகள் நடைபெற்று, நாளை திங்கட்கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

"நிதி மிகுந்தவர் பொற்குவைதாரீர், நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர் அதுவும் அற்றவர் ஆதரவு தாரீர்" என்ற வாக்கிற்கொப்ப, பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய சூழலிலுள்ளோர் ஒருங்கிணைந்த ஒரு நிலையில் சைவ உலகுக்கே முன்மாதிரிகாட்டி ஆனைமுகனுக்குக்குட முழுக்குச் செய்கின்றனர். ஆலயப்புன

[16-ம் பக்கம் பார்க்க

**தி. சி. சண்முகலிங்கம்**
[தலைவர், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை]


# G.C.E. (O/L) DEC. 84 & GRADE 9

அடிப்படைக் கல்வியை ஸ்திரப்படுத்தும் நோக்குடன்

Maths, Science, English

வகுப்புகள்

10-02-84 ல் ஆரம்பமாகின்றன.

திறமையும் அனுபவமும் மிக்க ஆசிரியர்களிடம் கற்றுத் திறமைச் சித்திபெய்த நல்லதோர் சந்தர்ப்பம்

முக்கிய குறிப்பு :- மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தனிக் கவனம் செலுத்துவதற்கு வசதியாக ஒவ்வொரு வகுப்பிலும் குறிப்பிட்ட தொகையினர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

மேலதிக விபரங்களுக்கு:-

CANTABIA INSTITUTE

21, MAIN STREET, JAFFNA.

T'PHONE : 24201



★ திருமணம் ★ பிறந்தநாள் மற்றும் இன்னோரன்ன மங்கள வைபவங்களை

சிறந்த முறையில் எழில்மிகு வண்ணக் கலரில் வீடியோ படப்பிடிப்பு செய்துகொள்ள

சித்திராலயா

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 22522

ஏற்கனவே இங்கு கரும்பஞ்சீனி இருக்கிறது. இப்போது பனஞ்சீனியும் உற்பத்தி செய்வதானால் அது லாபமாய் இருக்குமா என்று கேட்டதற்கு திரு. சம்பந்தம் சொன்னார்.

"லாபம் என்று எந்தத் திட்டத்தை நாம் எடுத்துக் கொண்டாலும் அது நாட்டுக்கு லாபமா அல்லது அன்றாடம் வாங்கிச் சாப்பிடுகிறவனுக்கு லாபமா என்பதைப் பார்க்க வேண்டும். நாட்டின் லாபத்தையே முதலில் பார்க்க வேண்டும் ஊரில் ஒரு பத்துப் பதினைந்து சகோதரர்கள் சேர்ந்து ஒரு சீனி ஆலை வைத்தார்களானால் அதன் விலை ருத்தல் 12 ரூபாய் என வைத்துக் கொண்டாலும் வெளிநாட்டிலிருந்துவரும் சீனி பத்து ரூபாயாக இருக்கலாம். ஆனால் இதில் நமது சகோதரன் உற்பத்திசெய்த சீனிதான் உயர்ந்தது என்றுகொள்ள வேண்டும். இதுதான் ஒருநாட்டின் பொருளாதாரம் பத்து ரூபாய்க்குச் சீனி வாங்குவோமானால் நமது நாட்டு வெளிச்செலாவணி அங்கு போய் விடுகிறது அங்கு நான்கு ரூபாய்க்குத் தயாரித்து இங்கு எட்டு ரூபாய்க்கு அனுப்புகிறார்கள். 12 ரூபாய்கு விற்கப்படுகிறது அதனால் எட்டு ரூபாய் வெளிநாட்டுச் செலாவணி போய்விடுகிறதே. ஆனால் இங்கே நமது சகோதரன் உற்பத்திசெய்யும் சீனி விலை சற்றுக்கூடுதலானாலும் அந்தப்பணம் இந்த நாட்டிலேயே தான் சுற்றிக்கொண்டிருக்கிறது.

# டில்லியிலிருந்து கன்னியாகுமரிவரை பாம்கோலா விற்கிறது!

இதனால் தான் இந்தியாவில் இறக்குமதியில் மிகவும் கட்டுப்பாடு செய்கிறார்கள் வெளிச்செலாவணி சென்றுவிடும் போது நாட்டின் பொருளாதாரம் சுரண்டப்படுகிறது என்று அவர்கள் கருதுகிறார்கள். மிக அத்தியாவசியமானவற்றை மாத்திரம் தான் இறக்குமதி செய்கிறார்கள்.

வெளிநாட்டுஅரிசி எவ்வளவு மலிவாக இங்கு கிடைத்த போதிலும் எங்கள் உழைப்பில் வந்த எங்கள் நிலத்தில் விளைந்தஅரிசிதான் எங்களுக்கு உயர்வானதல்லவா? அதனைத் தான் காந்திஜி எங்களுக்குச் சொல்லித்தந்தார். நாம் பதநீரை இறக்கி சீனிஉற்பத்தி செய்து மக்கள் அதனை வாங்குவதற்கு ஊக்கப்படுத்த வேண்டும் ஊர் பெரியவர்களும் பத்திரிகையாளர்களும் மற்றும் எல்லாரும் சேர்ந்து இதற்கு நல்ல பிரசாரம் செய்ய வேண்டும். இது நம்நாட்டுப் பொருள் என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும் தமிழ் நாட்டில் அந்த உணர்வு ஏற்பட்டு விட்டது.

இந்த முறை நானும் இங்கே ஒரு பரீட்சைவைக்கப் போகிறேன் பதனீரை எவ்வளவு பேர் குடிக்கப் போகிறார்கள் என்று பார்க்கப்போகிறேன். இவர்கள் அதை பயன்படுத்த முன்வரா விட்டால் நாம் ஏன் இவர்களுக்காக மாரடிக்க வேண்டும் என்று சொல்லி விட்டுப்போய்விடுவேன்.

## குளிர்பானம்

அடுத்தது. குளிர்பானம் இப்பொழுது கடைகளில் விற்கப்படும் குளிர் பானங்களுடன் போத்தலில் அடைக்கப்படும் பதனீரை ஒப்பிடக்கூடியதான இரண்டு பானங்களைத் தமிழ் நாட்டில் தயார் செய்து விற்கிறோம். "பாம்டா" "பாம் கோலா" அவற்றின் பெயர். அங்கு பனம் சீனியை உற்பத்தி செய்தபோது அங்கேயும் விலை அதிகம் என்று தான் கூறினார்கள். ஆனால் இந்திய அரசு அதற்கு ஆதரவு தந்தது. முதலில் ஒரு ஆலையை ஆரம்பித்தேன். ஒரு நாளைக்கு ஒரு தொன் உற்பத்திசெய்ய முடிவு செய்தோம். ஆனால் பலரும் ஆய் ஊய் என்றார்கள். நீங்கள் யாரும் இதை வாங்க வேண்டாம் என்று கூறி அந்தச்சீனி அவ்வளவையும் மிட்டாய், ஜாம் என்று மாற்றிக் கொண்டுவிட்டேன். ஜாமின் விலை மார்க்கட்டில் 5 ரூபாயாக இருக்குமானால் எனது உற்பத்தி மூன்று ரூபாய் தான் ஆகிறது. இந்தச் சீனி விலையையும் சேர்த்து கொண்டு 4 ரூபாய்க்கு விற்கிறேன். இப்போது நான்கு சீனி ஆலைகளை ஆரம்பித்திருக்கிறோம்.

ஏற்கனவே வெளிநாட்டுப் பானமான கொக்கா கோலாவை இந்திய அரசு நிறுத்திவிட்டது. அதற்கு ஒரு மாற்றுப் பானம் கண்டு பிடிக்கும்படி உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் சவால் விட்டது. ஏழெட்டுப் பேர் புதுவித பானங்களைக் கண்டு பிடித்தார்கள். நானும் கண்டு பிடித்தேன் எல்லாமே நன்றாகத்தான் ஓடுகின்றன.

(16-ம் பக்கம் பார்க்க)

| கேட்டு எழுதியவர் பேனா | 6 |
|---|---|


## வெளிநாடு செல்வதற்கு

- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
- விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)

இன்றே நாடுங்கள்

## மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)

GENERAL SALES AGENTS

த. பெ. எண்: 92 போன்: 24154



நெஸ்பிரே ரூ. 24.00

## அவன் விரும்பும் சுவை நீங்கள் விரும்பும் விலை




ஆம், பிள்ளைகள் ஆசையோடு நாடிப் பருகும் அற்புத கிறீம் சுவைகொண்ட நெஸ்பிரே இப்பொழுது தாய்மார் தேடி வாங்கும் வசதியான விலையில் வருகிறது.

சுவை மட்டுமல்ல. . . 28% பால் கொழுப்பு, புரதம், மேலதிக விற்றமின்கள் கொண்ட நெஸ்பிரே போஷாக்கிலும் முதன்மையானது.

நெஸ்லேயின் உலகப் புகழ்பெற்ற தரக்கட்டுப்பாடுகளுக்கு அமையத் தயாரிக்கப்படுவதால் தரத்திலும் தூய்மையிலும் முதலிடம் வகிக்கிறது.

அலுமினியக் கடதாசிப் பையில் அடைக்கப்பட்டு பக்குவமான பக்கெட்டில் பொதிசெய்யப்படுவதால் பாலின் புதுத்தன்மை குன்றுவதில்லை.

நாடெங்கிலும் உள்ள குடும்பப் பெண்கள் இப்பொழுது நெஸ்பிரேயைத் தேடி வாங்குகிறார்கள் நீங்களும் அவர்களுடன் சேர்ந்து உங்கள் குடும்பத்திற்கு மிகச் சிறந்ததை வழங்குங்கள்.

இன்றே ஒரு பக்கெட் வாங்குங்கள். தொடர்ந்தும் வாங்குங்கள்.

கிராம் 400

விலை ரூபா 24/-

# நெஸ்பிரே

வளரும் பிள்ளைகளுக்கு நெஸ்லே வழங்கும் பால்

Grant K & E 5249

3- 9-2-84 வரை
**வெலிஸ்**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
எம். ஜி. ஆர். -ஜெயலலிதா
**நீரும் நெருப்பும்**
(புதிய பிரதி-கலர்)

**ஸ்ரீதர்** (யாழ்: நகர்)
தினசரி: 10-30, 2-30 6-0,
எம் ஜி. ஆர்.—ஜெயலலிதா
**அன்னமிட்ட கை**

**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
எம் ஜி. ஆர்-கே. ஆர். விஜயா
**நல்லநேரம்**
(புதிய பிரதி)
6-2-84 முதல்
**ஆலயமணி**

7 "சூப்பர் ஹிட்"
பாடல்களுடன் மங்கையர்
மனங்கவர்ந்த வண்ண
காதலோவியம்.
**றீகல்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15,
மோகன்... பூர்ணிமா
**பயணங்கள்**
**முடிவதில்லை**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம் ஜி. ஆர்.—லதா
**சிரித்து**
**வாழவேண்டும்**
(கலர் - புதிய பிரதி)

**வின்ஸர்** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
53-வது நாளாக
சிவகுமார் - ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**

**மனோகரா** (யாழ். நகர்)
Daily 10-30 a.m. 2-15, 4-45, 7-00 p. m. 9-30
Now Showing
DE BORIS — DUROV
IN
**"Pirates of the 20th Century"**
Action Packed
Scope Color
திகிலூட்டும் சம்பவங்கள் நிறைந்தன.

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
Kurt Russel
**USED CARS**
(Sex - Comedy - Color)
திரைவானில் அதிசயிக்க வைக்கும் கார் ஓட்டங்கள் பரபரப்பூட்டும் சண்டைகள் களிப்பூட்டும் நகைச்சுவை இன்னும் எத்தனையோ-முன்னர் திரையிட்ட சமயம் பார்த்தவர்களே மிக ஆவலுடன் பார்க்கின்றார்கள் - பார்க்காதவர்களுக்கு அரிய வாய்ப்பு கடைசித்தினம்
5-2-84

**ஹரன்** (யாழ். நகர்)
பஸ்சேவை இரவு 9 மணி வரை நீடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாலைக் காட்சி 6 மணிக்கு ஆரம்பமாகும். அழகிய மலேயா நாட்டின் இயற்கைப் பின்னணியில் "வேண்டும் வேண்டும் உங்கள் உறவு" என்று கானமிசைத்த இளங்காதலரின் கதை
சிவாஜி, ஸ்ரீப்பிரியா, நடித்த
**வசந்தத்தில்**
**ஓர் நாள்**
(ஈஸ்மன் கலர்)

## வடபிராந்திய போக்குவரத்து சபை

## பகிரங்க ஏலவிற்பனை

செயலிழந்த பஸ்வண்டிகள் (இல. 22) லொறி வண்டிகள் (இல. 3) இயந்திரங்கள் ஆகியவற்றின் ஏலவிற்பனை 1984-ம் ஆண்டு பெப்ரவரி 17-ந் திகதி காலை 9-30 மணிக்கு கோண்டாவில் பஸ்டிப்போவில் ஆரம்பமாகும்.

மேற்குறிப்பிட்ட பாவனைக்குகந்த, பாவனைக்குத வாதவற்றுடன் மோட்டார் உறுப்புக்கள், டயர்கள், (இல, 300) புதிய பூட்டுக்கள், 'கிளாஸியோ' குளிர் சாதனப் பெட்டியுடன் வேறு பொருட்களும் ஏலத்தில் விடப்படும்.

ஏலவிற்பனைக்குரிய பொருட்களை மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 1984-ம் ஆண்டு பெப்ரவரி 6-ந் திகதி முதல் பெப்ரவரி 11ந் திகதி வரை காலை 9-00 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரையும் தொடர்ந்து பிற்பகல் 1-30 மணிமுதல் 4-30 மணிவரையும் பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
விநியோக அதிகாரி
வடபிராந்திய போக்குவரத்து சபை
பிராந்திய அலுவலகம் — கோண்டாவில்

எஸ். கனகரட்ணம்
தலைவர்/தகுதிவாய்ந்த அதிகாரி
585 வடபிராந்திய போக்குவரத்து சபை.

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—லதா
**நீதிக்கு**
**தலைவணங்கு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-00
முத்துராமன் - கவிதா
தேங்காய்சீனிவாசன்
**காற்றினிலே வரும்**
**கீதம்**
(ஈஸ்மன் கலர்)
பஸ்சேவை இரவு 9-00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மாலைக்காட்சி 6-00 மணிக்கு ஆரம்பமாகும்.

## கடவுளின் வார்த்தைகளை காதால் கேட்கும் வாய்ப்பு!

# புதிய ஏற்பாடு

முழுவதையும் இப்போது
கெசற்றுகளில் கேட்கலாம்!

கிடைக்குமிடம்:
**சத்தியம் புத்தகசாலை,**
THE JAFFNA PAINT HOUSE,
21, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24238,
(எம்மிடம் சத்தியவசனம் பாடல்கள் அடங்கிய கெசற்றுகளும், BACK TO THE BIBLE) வெளியீடுகளும், சகலவித தமிழ், ஆங்கில கிறிஸ்தவ கெசற்றுகளும், புத்தகங்களும் விற்பனைக்கு உண்டு.
(152)

Personal Classes for
**GCE (A/L) 1985** PURE / APPLIED

சனி, ஞாயிறு வகுப்பு இன்று ஆரம்பம்:

| | | | |
|---|---|---|---|
| பிரிவு I: | 7-00: சாவிகள்<br>8-30: தொடர்கள் | பிரிவு: II | 10-15: தொடர்பு வேகம்<br>11-45: திரிகோண கணிதம் |

புதிய முகவரி:
74, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி-பெருமாள்கோவில் இடையில்)

TUTOR:
**RAVIMOHAN**
(519)

## வெற்றிடங்கள்

பின்வரும் வெற்றிடங்களுக்கு
8-2-84க்குமுன்னர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**ENGINEERING FOREMAN**
NDT அல்லது சமமான கல்வித் தகைமை STEEL FABRICATION சார்ந்த வேலைகளில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**CIVIL DRAUGHTSMAN**
QUANTITY SURVEYING, வீடுகள், திட்டமிடல், மதிப்பிடுதல் முதலியவற்றைக் கையாளும் திறன் அவசியம்.

டைனமிக் என்ஜினியரிங்
லிமிட்டெட்,
43, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

## திருமங்கலநாண் பூட்டு விழா

## அழைப்பு

### பொன்னுத்துரை — சகுந்தலா

எமது மகன் திருநிறை செல்வன்
பொன்னுத்துரை (AIR PILOT) அவர்கட்கும்
புலோலி வேலாயுதம் மகா வித்தியாலய உப அதிபர்
திரு. க. ஈஸ்வரபாதம் அவர்களின் செல்வமகள்
செல்வி சகுந்தலா அவர்கட்கும்
**6-2-84 திங்கட்கிழமை**
காலை 11-00 - 12-00 மணி
வரையுள்ள சுப வேளையில்
மேலைப் புலோலி
ஆலடிப் பிள்ளையார் கோவிலில்
நடைபெறும் திருமங்கல நாண்பூட்டு வைபவத்திற்கும், அதையடுத்து நடைபெறும் வரவேற்பு வைபவத்திற்கும் வருகை தந்து சிறப்பிக்குமாறு உறவினர்கள், நண்பர்களை
அன்புடன் அழைக்கின்றோம்!
தனிப்பட்ட அழைப்புகள் இல்லை.

மு. பொ. வீரவாகு
தம்பதிகள்

புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
605

# UDUVIL GIRLS' COLLEGE

## COURSE TITLE

COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING

## TOPICS

1. INTRODUCTION TO COMPUTING DATA PROCESSING
2. PROGRAMMING IN HIGH LEVEL LANGUAGES: BASIC, FORTRAN, RPG 11 AND COBOL
3. PRACTICAL (20-30) HOURS (ON A MICRO COMPUTER (ACTUAL HANDLING OF COMPUTER)

## COURSE PREREQUISITE

CENTRE'S APTITUDE TEST

| | |
|---|---|
| INTRODUCTION TO COMPUTING AND DATA PROCESSING | 500/- |
| PROGRAMMING IN BASIC LANGUAGE WITH PRACTICALS | 1,000/- |
| PROGRAMMING IN FORTRAN<br>PROGRAMMING IN COBOL<br>PROGRAMMING IN RPG 11 | 1,000/- |
| I. D. P. M. EACH PART | 600/- |

## LECTURES AND PRACTICALS

WEEK DAYS

★ Next cours starts on 15-02-1984.
Apply on or before 12-02-1984.

★ HOME ECONOMICS COURSES IN DRESS MAKING, CAKE DECORATION, INTERIOR DECORATIONS.
HAIR DRESSING STARTS ON 15-02-1984.
Apply on or before 12-02-1984.

## இணுவில்

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

ருத்தாரணத்துடன், அழகொளிர் வீசும் கலாமண்டபமும் காண்போரைக் கவரும் நிலையில் காட்சிதருகின்றது.

இவ்வாலயத்தில் நடைபெற்றிருக்கும் ஒவ்வொரு செயல்களும் சைவ உலகத்துக்கோர் எடுத்துக்காட்டாகவிளக்குகின்றன.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்."

## சேர் சோபஸ்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தனர். இத்திடீர் மாற்றத்துக்குக் காரணம் என்ன?

விகிதாசார அடிப்படை விளையாட்டிலும் புகுந்துவிட்டதா அல்லது 17 வீரர்களைக் கூட்டிச் சென்றால் தமிழ் வீரனுக்கும் இடமகொடுக்கவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிடுமே என்ற மனப்பேதலிப்பா? அல்லது 17 வீரர் சென்றால், கூடச் செல்லும் உத்தியோகத்தர் எண்ணிக்கை குறைந்துவிடுமே என்ற பேராசையா?

14 வீரர்களுடன் தற்போது அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்த இளம் கோஷ்டி அங்கு மொத்தம் பத்துப் போட்டிகளில் கலந்துகொள்ள இருக்கிறது. முதல்தடவையாக அவுஸ்திரேலியா செல்லும் இந்த இளம் வீரர்கள் அந்த நாட்டின் சீதோஷ்ண நிலைகளை சமாளிப்பார்களா? போட்டிகள் நடைபெறும் போது ஓரிரு வீரர்கள் காயமடைந்தால், அல்லது சீதோஷ்ணநிலையை தாங்கமுடியாமல் ஓரிரு வீரர்கள் சுகயீனமுற்றால், மற்றைய போட்டிகளில் கலந்துகொள்ள இந்த இளம் இலங்கைக் கோஷ்டியால் முடியுமா? இவை அனைத்தையும் அலசிப் பாராமல், அவுஸ்திரேலியாவுக்குச் சென்றால் போதும் என்ற நோக்குடன் சென்றுள்ள எமது கோஷ்டியின் முடிவுகளை நாம் அனைவரும் பொறுத்திருந்து பார்ப்போம்.

எதுவாக இருந்தாலும் இது எமது இலங்கைக் கோஷ்டி அல்லவா? ஆகவே "சென்று வாருங்கள்-செல்லுமிடமெல்லாம் வென்றுவாருங்கள்" என்று வாழ்த்துக் கூறுவோம்.

## இளைஞர் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மருதங்கேணி கால்வாய் ஒன்றில் கையும், காலும் கட்டப்பட்ட நிலையில் கிடந்த இளைஞரின் சடலமொன்று சாவகச்சேரி பொலிஸாரினால் கண்டு பிடிக்கப்பட்டு, தற்போது யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி சவச்சாலையில் அடையாளம் காண்பதற்காக பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

18-25 வயதிற்கு இடைப்பட்ட இந்த இளைஞர் 5 அடி 10 அங்குல உயரமும், சுமாரான உடற்கட்டுமுடையவர் இறந்து கிடந்த போது ரெட் ரோஸ் சேட்டும், சாரமும் அணிந்திருந்தார்.

இச்சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் இன்று மட்டுமே வைத்திருக்கப்படுமென நம்பப்படுகிறது. (சு)

## யாழ் அரசசெயலகத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)


லால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அரசாங்க அதிபரும், மற்றும் திணைக்கள அதிகாரிகளும் குத்துவிளக்கேற்றிய பின்னர், தேசியக் கொடி ஏற்றி வைக்கும் அலுவலக முன்றலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கொட்டும் மழையிலும் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையைச் சேர்ந்த ஆறு மாணவிகள் இலங்கை தேசிய கீதம் இசையுடன் பாட தேசியக்கொடியை அரசாங்க அதிபரும், மற்றும் இரு அதிகாரிகள் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் நந்திக் கொடிகளையும் ஏற்றிவைத்தனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுமுள்ள அலுவலகங்களில் சுதந்திரதினத்தை ஒட்டி தேசியக்கொடி ஏற்றும் வைபவங்கள் அமைதியாக நடைபெற்றதாக, அப்பகுதிகளைச் சேர்ந்த நிருபர்கள் அறிவித்துள்ளார்கள்.

நல்லூர் கந்தசுவாமி கோவில், வண்ணை சிவன்கோவில் வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில், நாகவிகாரை, யாழ். ஜும்மா பள்ளிவாசல், யாழ். கதீட்ரல் தேவாலயம் ஆகியவற்றில் விசேட பூசை ஆராதனைகள் யாழ். செயலக உத்தியோகத்தர்கள் நடத்தி வைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.




## கட்டுக்குருந்தை நிகழ்ச்சிகள்

[இ. கந்தசாமி]

"நாட்டின் பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழித்து, சகல இன மக்களும் சமாதானமாக வாழ வேண்டும். மக்களிடையே தோன்றும் தேசியவாதம் மற்றைய இனங்களை ஒடுக்கும் நிலைக்கு மாறிவிடக்கூடாது" என்று ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா விடுத்துள்ள சுதந்திரதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் 36-வது சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் நேற்று கட்டுக்குருந்தை பழைய விமான நிலையத்தில் காலை 7 மணிக்கு உத்தியோக பூர்வமாக ஆரம்பமானது. ஜனாதிபதி பாரியார் சகிதம் விழா மேடைக்கு அழைத்துவரப்பட்டார். ஜனாதிபதியைக் கௌரவிக்க 21 பீரங்கிவெடிகள் வெடிக்கப்பட்டன. பின்னர் ஜனாதிபதி முப்படைத் தளபதிகள் சகிதம் ஆயுதப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். விமானப்படைகளின் அணிவகுப்பினையும் ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். களுத்துறை மகளிர் மகா வித்தியாலய மாணவிகள் தேசிய கீதம் இசைத்தனர். இரவு கலாச்சார அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

நிகழ்ச்சியில் குறிப்பிடக் கூடிய அம்சங்கள்:

ராணுவ அணிவகுப்பில் யானை ஒன்று அணிவகுத்துச் சென்றது. இரு வீரர்கள் அருகருகே சென்றார்கள்.

ராணுவ வீராங்கனைகளின் அணிவகுப்பு கவர்ச்சியாக இருந்தது.

விமானப்படையின் 26 விமானங்களின் அணிவகுப்பு குறிப்பிடக்கூடிய அம்சம். [சு]

## மட்டுநகர் ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மழை தொடர்ந்து பெய்துவருவதால், சுதந்திரதின நிகழ்ச்சிகள் இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

வெபர் விளையாட்டரங்கில் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு அந்தோனிமுத்து. தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

மற்றும் அரச, கூட்டுத்தாபன, திணைக்களங்களிலும் தேசியக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

பொலிஸ்-இராணுவரோந்து சேவையும் அதிகரிக்கப்பட்டிருந்தது. (மா)

திரு. தம்பு கந்தையா மணிபுரி வாசிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கொழும்புத்துறையில் தற்போது கழிவுகள் புதைக்கப்படும் பகுதியில் சில நிபந்தனையுடன் தொடர்ந்து மார்ச் 15ம் தேதிவரை புதைப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

கரையோரப் பகுதியிலுள்ள வாளிமலகூடங்களை நீரடைப்பாக மாற்றுவதற்கு தாமதம் ஏற்படுமென்றும், இதற்கும் மாற்று திட்டமொன்று அமுல் செய்யப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (க)

## யாழ்ப்பாண நகரில் 2,600 வாளி மலகூடங்கள் நீரடைப்புகளாக மாறும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் உள்ள 2600 வாளி மலகூடங்களையும், மார்ச் 15ம் தேதிக்கு முன் நீரடைப்பு மலகூடமாக மாற்றுமாறு, தனித்தனியாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

வாளி மலகூடங்களிலிருந்து அகற்றப்படும் கழிவுகளை புதைப்பது தொடர்பாக நடந்த மாநாட்டில் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கமிட்டி அறையில் நடந்த இம்மாநாட்டில், கொழும்புத்துறை முன்னாள் உறுப்பினர்

பிரபல எழுத்தாளர்
கே. டானியலின்
புதிய பார்வை
★
மையக்குறி
தொடர் நவீனம்
★
"ஈழநாடு"
12 - 2 - 84
வாரமலரில்
ஆரம்பம்

## மரண அறிவித்தல்

### சு. துரைச்சாமி பத்தர்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த சு. துரைச்சாமி பத்தர் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற இட்சுமண ஆச்சாரியின் மருமகனும் அம்புஜத்தின் அன்புக்கணவரும், நடராஜா, குணசேகரன், சுலோஜனா, நாகராணி, அனுசூயா, திலகவதி ஆகியோரின் தந்தையும், இராமையாப்பத்தர், கந்தையாப்பத்தர் ஆகியோரின் சகோதரரும், பக்கீர்சாமி, வேணுகோபால், கெங்காதரன், ஜெகநாதன் ஆகியோரின் மைத்துனரும், திருநெல்வேலியைச் சேர்ந்த பாலச்சந்திரன் (சந்திரவதனி தச்சுத்தொழிற்சாலை), நாகராஜா ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரது பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று (5—2—84) மாலை 4 மணிக்கு 87, சிவன் கோவில் வடக்கு வீதியிலுள்ள அவரது சகோதரரின் இல்லத்திலிருந்து கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 632

## மரண அறிவித்தல்

### கு. நடராசா

கோண்டாவில் குலசேகரம் நடராசா (இளைப்பாறிய தபாலதிபர்) காலமாகிவிட்டார். இவர் யோகாம்பிகையின் அன்புக்கணவரும், பிறேமகுமார், பிறேமராஜா (ஹட்டன் நஷனல் வங்கி), பிறேமினி, பிறேமரஞ்சன் பிரேமேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஹட்டன் நஷனல் வங்கி யோக கோபாலகிருஷ்ணன் அவர்களது மைத்துனருமாவார். இவரது பூதவுடல் பொற்பதி வீதி கோண்டாவிலிலிருந்து 5-ம் திகதி காலை 10 மணிக்கு கோண்டாவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

626

## நடிகமணி

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தனையே சாரும்"

இலங்கையின் நாட்டுக்கூத்து முறைகளைப் பிரச்சாரம் செய்யும் நோக்கத்துடன் நடிகமணியின் 'அரிச்சந்திர மயான காண்டம்' நாடக ஒலிப்பதிவு நாடாக்கள் லண்டன் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் எடுத்துச்செல்லப்பட்டு அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. வாஷிங்டன் பிரதான நூலகத்தின் கிராமியக் கலைகள் பிரிவில் இந்த நாடாக்கள் முக்கியமான ஒரு பொக்கிசமாக வைக்கப்பட்டுள்ளது.

### பி. பி. ஸி. யில் நடிகமணி

லண்டன் பி. பி ஸி. யைச் சேர்ந்த லெவி என்ற நிகழ்ச்சித்தயாரிப்பாளர் மயான காண்டத்தை ஒலிப்பதிவு செய்து 1959ம் ஆண்டிலேயே டெலிவிஷனில்காட்டியுள்ளார்.

1953ம் ஆண்டு நெல்லியடி நாவலர் மடம் அரங்கில் நடைபெற்ற நாடகவிழாவில் "நடிகமணி" என்ற பட்டம் இவருக்குச்சூட்டப்பட்டது ஈழத்து நாடக உலகின் தந்தையென மதிக்கப்படும் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களே இப்பட்டத்தினைச் சூட்டினார்.

1962ம் ஆண்டில் பிரமாவது தடவையாக அரிச்சந்திர மயான காண்டம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது, கொழும்பு டவர் மண்டபம் பேராதனைப் பல்கலைக் கழகம் உட்பட பலதடவைகள் கொழும்பு மேடைகளிலும் இது மேடையேற்றப்பெற்று பலரது பாராட்டுக்களைப் பெற்றுள்ளது.

இலங்கைக் கலைக்கழகத்தால் பாராட்டிக்கௌரவிக்கப்பட்ட ஈழத்தின் மூத்த கலைஞர்களில் ஒருவர்.

இலங்கையில் டெலிவிஷன் (ரூபவாஹினி) ஆரம்பமாகிச் சில மாதங்களுக்குள்ளேயே [1982 மே மாதம்] இவரது நாடகம் ஒளிபரப்பப்பட்டு, அதில் ஒளிபரப்பான முதலாவது மரபுவழி நாடகம் என்ற பெருமையும் பெற்றது.

ஈழத்து நாடக உலகில் தமக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுத்திகழும் நடிகமணியின் மணிவிழாவை கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள்" என்னும் அமைப்பு எதிர்வரும் பதினொராம் திகதி காங்கேசன் துறையில் ராஜநாயகி தியேட்டரில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில்கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியது.

வாழும்போதே கலைஞர்களை கௌரவிப்பது, மறைந்த பின் சிலை எழுப்ப முயல்வதிலும் ஆயிரம் மடங்கு மேலானது.

## டில்லியிலிருந்து

(14-ம் பக்கத்தொடர்ச்சி)

நான் கண்டுபிடித்தது பனம்பொருள் என்பதால் அரசுக்கு மிகவும் திருப்தியாகி விட்டது. பனையிலிருந்து ஒரு பானத்தைத் தயார் செய்து லட்சாதிபதிகள் கூட விரும்பிக் குடிக்கும்படி செய்து விட்டாரே என்று எட்டுப்பத்து லட்சம் ரூபாய் எனக்குக் கொடுத்தார்கள். அதன் பலனை டில்லியில் இருந்து கன்னியாகுமரிவரை பாம் கோலாவை வைத்து விற்றுக் கொண்டிருக்கிறோம். இதன் மூலம் போத்தல் ஒன்றுக்கு 40 பைசா பனம்தொழிலாளிக்குப் போய்ச் சேருகிறது. இவ்வாறான முறைகளை இங்குப பின்பற்றிக்கொள்ளலாம் தானே!

[முற்றும்]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி 16-ம் இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under Number R 100236/81 Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389 — 24126.